Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

மே.14-20.1995

ரூபா 10/00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 101

## யுத்த முனையில் திருப்பம்





## சமபல நிலையும் சமாதான முயற்சிகளும்

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

அகதி வாழ்க்கை ஒன்று, எண்ணங்கள் வேறு!



ரசிகனின் இலக்கிய நயம்

சினிவிசிட் பிரமாண்ட நக்மா

முக ஒப்பனை கலை லேடீஸ் ஸ்பெசல்

கிளாம் ஸ்பெசல்

அற்புதனின் அரசியல் தொடர்

## இயக்க ஒற்றுமைக்கு பிரபா பச்சைக் கொடி !

# முரசம்

## போரிடுவோர் கவனிக்க!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
யுத்தம் மீண்டும்
நிம்மதியைக் கொள்ளையடித்திருக்கிறது.
அமைதி-சமாதானம்
என்பவை அர்த்தமுள்ளவையாக இருந்தாலும்
நம்நாட்டு மக்களுக்கு
அழகான கனவுகளாக மட்டுமே
அவை இருந்து கொண்டிருக்கின்றன.

ஏப்ரல் பதினெட்டு வரை
புலிகளைப் போராளிகள் என்று
சொல்லிக் கொண்டிருந்த-அரசும்
அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்களும்
ஏப்ரல் பத்தொன்பது முதல்
சுருதியை மாற்றிக் கொண்டன.

"சமாதானத்திற்குத்-தயார்
கதவுகள் திறந்திருக்கின்றன" என்று
சொல்லிக்கொண்டே
பாரிய தாக்குதல் முயற்சிகளில்
புலிகளும் குதித்திருக்கிறார்கள்.

மக்கள் சமாதானத்தை விரும்புவதால்
போரிடும் இரு தரப்புகளுமே
சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டே
பலப்பரீட்சையில்
இறங்கியுள்ளதைக் காண முடிகிறது.

பேச்சுக்கள், அறிக்கைகள்
என்பவற்றுக்கு அப்பால்-
புலிகளைப் பொறுத்தவரை-
'தமிழீழம்' என்பதில்
சற்றும் தளராத உறுதியோடு
இருக்கிறார்கள் என்பதில்
எவ்வித ஐயமும் இல்லை.

மறுபுறம்-அரச தரப்பு
அரசியல் தீர்வுக்கு
எந்தளவு தயாராக இருக்கிறது
என்பது விடைகாண முடியாத வினாவாகவே
இன்றுவரை இருந்துவருகிறது.

மீண்டும் கைதுகள்,
விமானத் தாக்குதல்கள்
ஆரம்பமாகியுள்ளன.

போரில் விருப்பமில்லை என்று
அரச தரப்பு சொன்னாலும் கூட
போர் நடத்தப்படும் முறையில்-
சென்றகால அணுகுமுறைகளில்
புதிய மாற்றம் இருப்பதாகத்
தெரியவில்லை.

கிழக்கு மாகாணத்தில்
பொலிசாரும்-படையினரும்
மேற்கொள்ளும் நடவடிக்கைகள்
மாற்றத்தைப் பிரதிபலிக்கவில்லை.

சாதாரண மக்கள் பாதிக்கப்படுவதும்
துப்பாக்கி வேட்டுக்கள்
அப்பாவிகளைத் துளைப்பதும்-
ஆட்சிகள் மாறினாலும்
போக் காட்சிகள் ஒரே விதமாக
மீண்டும் தொடர்வதாக மக்கள்
நினைப்பதற்கே உரமூட்டும்!

குடியிருப்புக்கள் மத்தியில் உள்ள
புலி முகாம்களை
விமானத் தாக்குதல்களால்
அழித்துவிட நினைப்பது
கற்பனையே என்பதைத்தான்
கடந்த கால நிகழ்வுகள் காட்டியுள்ளன.

பரந்த வெளிப் போரில்
கடைப்பிடிக்கும் உத்திகளை
சனம் நிறைந்த பகுதிகளில்
பயன்படுத்த நினைத்தால்
வெற்றி கிட்டப் போவதில்லை.
சம்பந்தப்பட்ட பகுதி மக்களது
வெறுப்புத்தான் வளரும் என்பதை
படைத்தரப்பினர்-
இனியாவது உணர வேண்டும்.

யுத்தம் என்பது
மக்களின் விருப்பமல்ல!
விரும்பாத மக்களையும்
விரோதித்துக்கொள்ளும் முறையில்
போர்க்கால நடவடிக்கைகள்.
அமைந்துவிடக் கூடாது!

சிங்கள மக்களும்
சமாதானத்தை நாடி நிற்கிறார்கள்.
புலிகளது நடவடிக்கைகள்
சிங்கள மக்களது உணர்வுகளை-
இனவாத சக்திகள்
தவறாக வழிப்படுத்த
துணைபோவதாக அமையக்கூடாது.

மக்களின் விருப்பத்தை
மதிக்கிறார்களோ இல்லையோ,
மக்களை வதையாக்க முனையாமல்
போரிடும் தரப்புக்கள்
கவனம் கொள்வது முக்கியமானது.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## நாவடக்கம்

'மனிதன் பேசமுடிந்த மிருகம்' என்று சொல்லப் படுகிறான். எனவே, பேசும் பேச்சு முக்கிய இடம் பெறுகிறது. ஆம். பேசும் முன் நன்றாகவே சிந்தித்துவிட்டுப் பேசும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஏனெனில் நாம் பேசுபவை அடுத்தவரைத் தாக்கக் கூடியது. இதன் காரணமாகத்தான் திருவள்ளுவர் "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர்..." என்று கூறியுள்ளார்.

நாம் பேசுபவை எல்லாம் மனத்தில் பிறந்தே சொல்லாக வெளிவருகின்றன. சிந்தனைதான் சொல்லின் அடித்தளம். இவ்வுண்மையை மனத்தில் கொண்டு கீழ்க்காணும் வேதாகம வாக்கை சிந்திப்பது நல்லது. பலன் தரும்.

"நீங்கள் பொல்லாதவராயிருக்க எவ்வாறு நல்லவை பேசமுடியும்? ஏனெனில், உள்ளத்தில் நிறைவி நின்றே வாய் பேசும். நல்லவன் நல்ல கருவூலத்தினின்று நல்லவற்றை எடுக்கிறான். தீயவன் தீய கருவூலத்தினின்று தீயவற்றை எடுக்கிறான். மனிதர் பேசும் பயனற்ற சொல் ஒவ்வொன்றுக்கும் தீர்வை நாளில் கணக்குக் கொடுக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்கிறேன்" *(மத்தேயு: 12:34-36)*

நாவடக்கம் பற்றி புனித வேதாகமம் சொல்லும் நற்செய்தியை கொஞ்சம் சிந்திப்போம். நாவடக்கம் இல்லாத ஒருவன் கடவுளின் நல்லதொண்டனாய் இருக்க முடியாது, என்று கூறப்படுகிறது. ஆம்-

"இறைவனின் தொண்டனாகத் தன்னைக் கருதும் ஒருவன் நாவடக்கமற்றவனாயிருப்பின், அவனது தொண்டு வீணானதே. இத்தகையவன் தன்னை ஏமாற்றிக் கொள்கிறான்." (யாகப்பர்: 1:26)

நன்கு சிந்தித்து, நேர்மையாக உரையாடாதவன் பிறரையும் ஏமாற்றி, தன்னையும் ஏமாற்றிக் கொள்கிறான். எனவே, கனியிருக்க காய் கவராமல் இருக்கட்டும்.

ஏ.பி.வி.கோமஸ்

## ஆன்மீகம்



### நமது பிரார்த்தனை ('துஆ')கள் ஒப்புக்கொள்ளப்படாததேன்?

நாம் அல்லாஹ் ஒருவன் தான்! என விசுவாசம் கொள்கிறோம்; ஆனால் அவனால் (அல்லாஹ்வால்) விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றத் தவறி விடுகிறோம்......

* நாம் அல்லாஹ்வினால் இறக்கியருளப் பெற்ற திருக்குர்ஆனை நாளாந்தம் பாராயணஞ் செய்கிறோம்; ஆனால் அதிலுள்ளடங்கிய போதனைகளின்படி நடக்கிறோமில்லை.....

* நாம் நபிகள் நாயகத்தின் மீது அன்புள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம்; ஆனால் அவர்களின் வழிமுறை (ஸுன்னத்)களை அடியொற்றி நடக்கிறோமில்லை....

* சுவர்க்கம் செல்ல வேண்டுமே! என ஆசைப்படுகிறோம்; ஆனால், அதற்கான நன் நடத்தைகளை புரிகிறோமில்லை.......

*சாத்தான் பகைவன்! என்று மார்தட்டுகிறோம்; ஆனால் அதற்கான அந்த விரோதியை விடுத்து, நல்லன செய்கிறோமில்லை.

* நரகத்தின் பயங்கரங்களைப் பற்றி பயப்படுகிறோம்; ஆனால் பாவங்கள் செய்வதை விடுகிறோமில்லை.....

* மரணம்(மௌத்து) உண்டென்று நம்புகிறோம்; ஆனால் அது வந்தடையுமுன் நற்கிரியைகள் (நன்மைகள்) செய்ய தவறி விடுகிறோம்.

* மற்றவர்களின் குற்றங் குறைகளை தேடித்திரிகின்றோம்; ஆனால், எம்மிடமிருக்கும் குற்றங்களை சிந்தித்து உணருகிறோமில்லை.

* அல்லாஹ்வின் அருட்கடாட்சங்களை சுகிக்கிறோம், புசிக்கிறோம். ஆனால் அவனுக்கு நன்றி செலுத்த மறந்து விடுகிறோம.....

* மரணித்தோரை நல்லடக்கம் செய்கிறோம்; ஆனால் ஒரு நாள் நாமும் மரணிப்போம் எனும் எண்ணம் எமக்கு ஏற்படுவதில்லை.....

எம்.ரி.ஸெய்னுர் றிபா-வெலிகாமம்.

## கவிதைப்போட்டி இல-98

### வியக்கவைத்த கவிதைகள்

**என்ன ஆதாரம்?**
பயிருக்கு மழை
ஆதாரம்
உறவுக்கு அன்பு
ஆதாரம்
காதலுக்கு நம்பிக்கை
ஆதாரம்
நம்பிக்கைக்கு என்ன
ஆதாரம்?
எப்.பஸ்மியா-கருத்துறை.

**காதல் பாலம்**
காதலுக்கு(க்)
'கண்கள்' இல்லையாம்
இவர்கள்
மோதலுக்கு(த்)
'தூண்கள்' தொல்லையோ....?'
மருதமுனை.மு.விஜிலி

**காதல்**
பாஷை இல்லாத பூஜை
வேஷம் இல்லாத நேசம்
பேதம் இல்லாத வேதம்
பொய்மை இல்லாத மெய்மை
பன்னீர் புஸ்பா, கொழும்பு-11.

**நம்பலாமா?**
கரம்பிடிப்பதாய்
சத்தியமும்
செய்கின்றாரே
பின்னர்
மாடி மனை
கோடி, கோடி
கேட்டு உதைப்பாரோ?
அஹமது ஜுனைது-ஏறாவூர்-06.

**சத்தமில்லாத முத்தம்**
காதல் கிளிகள்
கை கோர்த்து நிற்பது
சத்த மில்லாத
முத்தத்திற்காகவா.....!
கே.ரவி-அக்கரைப்பற்று.08.




**நமக்கேன்?**
அவள் விழி
கயல் விழி
அவன் மொழி
மௌன மொழி
நடுவில் நமக்கு ஏன்
வீண் பழி
ஸ்ரீபதி ரவீந்திரநாத்-
அக்கரைப்பற்று-07.

**இவைகள் இருக்கும்போது!**
அன்னாசி எள்ளு மூங்கில்
அத்துனையும் இருக்குமட்டும்-அன்பே!
சும்மா அலட்டாதே
சுமையெல்லாம் களைந்துவிடும்.
ச.மகாலிங்கம்-வெளிமடை.

**சத்தியமாய்.....**
சமாதானம் பிறக்கட்டும்
சத்தியமாய்க் கைப்பிடிப்பேன்.
சோமநாதன் சந்திரகலா
மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல-101



**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமிலாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 20.05.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 101
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

### பரிசுக்குரிய கவிதை

**காதலுக்கல்ல**
தாலிக்கு ஏழு பவுண்
தங்கிட வீடொன்று
தங்கைக்கு வரன்பார்க்க
சன்மானம் ஒருலட்சம்
சரியென்றால் என்பெற்றோர்
நாளைக்கே சம்மதமாம்!
தர்ஷிக்கா கனகசிங்கம்,மட்டக்களப்பு.

**தூறல் நின்று போச்சு**
முடிவடைந்தது
மோதல்
தவிர்ப்புமட்டுமா?
நம்
காதல் சந்திப்பும்
கனவுகளும் தான்.
கே.லாவண்யா-ண்டிருப்பு-02.

**அண்ணாவைக் கேட்டெழுது!**
அன்பே நான் மறவேன்!
கட்டாயம் கைப்பிடிப்பேன்-என்
அம்மா கேட்குமந்த
ஐந்து இலட்சம் சீதனத்தை,
பவுணாகவேனும்
அனுப்பச் சொல்லியுந்தன்
அண்ணாவைக் கேட்டெழுது!
க.சுசீலா-மட்டக்களப்பு.

**"ஜாக்கிரதை"**
பாவையுடன் பரஸ்பரம் தேவைதான்
பாதையைப் பார்த்து கால்வைக்க
வேண்டும்
பாரெல்லாம் பரவிவரும் 'எயிட்ஸ்'
ஜாக்கிரதை!
வாழையூர் வைரமுத்து.

**சத்தியம் தா!**
என்னத்தச் சொன்னாலும்,
ஏற்குதில்ல என் மனசு
சடலம் அறிய ஒரு
சத்தியம் தா ராசாவே!
சிரின் சுரயா-ஏறாவூர்-03.

**கரிப்பு**
கருத்தொமித்ததால்
கனிந்தது காதல்
களிப்பினம் மனமிங்கு
காட்டுது ஆவல்
இருகரம் கார்த்து
இணைந்திம் நேரம்
இக்கண வந்தால்
குறைந்திம் பாரம்!
பசறையூர்லிகா பத்மநாதன்.

**கடைசிக் கேள்வி**
பிரியமே!
கனடா போனதும்
கட்டாயம் எனக்கொரு
விசா அனுப்பிவை......!
கோட்டைமுனை ஜெயஹரன்



அன்பின் தினமுரசே!
உன்னை இதழ் தவறாமல் அடுக்கி வைக்கிறேன். நீ சுமந்து வரும் தாயை மீண்டும் மீண்டும் சுவைப்பதற்கு மற்றவர்களுக்கும் சுவைக்க கொடுப்பதற்கு. தருணம் அறிந்த உன் சேவைக்கு ஆயிரம் நன்றிகள்.
எஸ்.உமா-நாவுஓயா.

சுகந்தினி அக்காவுக்கு!
தாங்கள் தொகுத்தளிக்கும் 'சமைப்போம் சுவைப்போம்' பகுதியில் 'ஐஸ்கிறீம்' செய்யும் முறையையும் 'யோகற்' செய்யும் முறையையும் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.
சிவந்தினி-முந்தல்.

□□

என் இனிய முரசே!
கடல் கடந்து வந்து என்னைக் களிப்பூட்டுகின்றாய்! நீ தரும் அத்தனை அம்சங்களும் வெரி வெரி ஸ்வீட்.
எஸ்.சவுதா-குவைற்.

□□

தினமுரசின் சேவையையும், ஆற்றலையும் பிழைகளை எடுத்துக்கூறும் துணிவையும் பாராட்டுகிறேன்.
ரஞ்சிதம், தயா-வவுனியா.

□□

'கிரைம்' செய்திகள் சுவையான கதைப் பாணியில் தரும் விதம் அலாதி! ரசிகனுக்கும் — முரசுக்கும் பாராட்டுக்கள்
எஸ். சந்திரசேகா-புத்தளம்.

'எக்ஸ்ரே ரிப்போர்ட்' வெகு வேகமாக செல்கிறது. துருவுதலும் வேகம்தான். நாரதர் சொல் பலிக்கும்!
வி.எல். முகமட்-கல்முனை.

'சினிவிசிட்' வாராவாரம் மெருகேறுகிறது. சபாஷ்!
வி. பூமணி-கொழும்பு-06.

'முரசம்' ஆசிரியரின் தெளிந்த நீரோடையைப் போல் சுருக்கமான மடல்-பல கோணங்களில் சிந்திக்க-சுவைக்க-ரசிக்க விருந்துபடைக்கும் அரசியல் கட்டுரைகள்-மனதைச்சாந்திபெற வைக்கும் 'தாய்', இரசிகனின் பாணியில் இரசிக்க தக்க 'இலக்கிய நயம்', இராஜகுமாரனின் கைவண்ணத்தில் எம்மை மகிழ்விக்கும் 'மகாபாரதம்' அனைத்தும் அருமை.
உக்குவளை அக்ரம்.

□□

திருமணத்தின் போது அடிக்கு முரசு—
மங்கள முரசு!
போர் முடிந்து வெற்றியீட்டியநாடு
அடிக்கும் முரசு— வீர முரசு!
இளம் நெஞ்சங்களின் இதயமில்
அடிக்கும் முரசு— தினமுரசு!
ராமலிங்கம் நவனீ-இரத்தினபுரி.

□□

காலையில் எழுந்தவுடன் பரபரப்பு!
வேலை செய்யும் போது சுசுறுப்பு!
வழி மேல் விழி வைக்கும் போது சிலு
சிலுப்பு!
முரசை வாசிக்கும் போது தக மகிழ்வு.
செல்வீரா-அக்குறணை.



முரசே நீ வாழ்க!
ஆளுமைக்கு அடிபணிந்து அடங்கிடாது
—என்றும்
ஆண்மையுடன் அவனியை நீ
அலசவேண்டும்!
பால்கலந்த பச்சரிசிப் பொங்கல்
போல்—நீ
பாரிலென்றும் பொங்கி நிதம்
வாழவேண்டும்!
ச.மகாலிங்கம்-வெலிமடை.

□□

தினமுரசில் பாப்பா முரசில் வாரம் ஒருநாடு விபரம் எல்லோருக்கும் தேவையான ஓர் நல்ல விஷயம். அதில் மேலும் சில விபரங்கள் தந்தால் நல்லது. உதாரணம், அங்கு உள்ள குடியேற்ற சட்டதிட்டம், அந்த நாட்டுப்பண மதிப்பு, இப்போதைய ஆட்சிப் பொறுப்பு போன்ற விபரங்களையும் வெளியிட்டால் பாப்பாவுக்கு மட்டும் அல்லாது எல்லோருக்கும் நன்மை பயக்கும்.
எம்.நிசார்-கொழும்பு-06.

# கிழக்கில் இனிக் கடற்போர் தொடருமாம்!

## அரசின் பிரசாரத்தை மறுக்கவே கிழக்கில் தாக்குதல்கள்!

**கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமாகும் என்று முன்னரே 'முரசு' செய்தி வெளியிட்டிருந்தது. 08.05.95 அன்று அம்பாறை மாவட்டத்தில் விசேஷ அதிரடிப்படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதல் முரசின் செய்தியை உறுதிப்படுத்தியுள்ளது.**

**மூன்றாம் கட்ட ஈழப் போரில் கிழக்கில் புலிகளது தாக்குதல்கள் மேலும் விஸ்தரிக்கப்படலாம் என்று நம்பகமான தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.**

### அரசின் பிரசாரம்

அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் வடக்கில் உள்ள நிலவரம் பற்றி மட்டுமே பேசப்பட்டது.

உடனடிப் பிரச்சனைகள் என்ற அடிப்படையிலும் வடபகுதி நிலை குறித்தே ஆராயப்பட்டது.

கிழக்கு மாகாணம் தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகவே அரசு கூறிவந்தது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியே என்ன கூறிக்கொண்டாலும், அரசாங்கத் தோடு நெருக்கமாக ஒத்துழைத்தே வருகிறது.

இதனால் கிழக்கில் அரசியல் ரீதியாகவும் புலிகள் பலவீனமாக இருப்பதாகவே அரசும் கருதிவந்தது.

இதே வேளைகிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட ஏனைய கட்சிகள் செல்வாக்குப் பெற்றவையாக காட்டிக் கொள்வதை புலிகள் அவதானித்து வந்தனர்.

கிழக்கில் தமது நிலைகளை பலப்படுத்த வேண்டும் என்று புலிகள் தீர்மானித்தனர்.

அவ்வாறு செய்யாவிட்டால் வடக்கில் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட இயக்கமாக தம்மை அரசு அடையாளம் காட்ட வாய்ப்பாகிவிடும் என்று புலிகள் நினைத்தனர்.

அதனால்தான் கிழக்கில் தமது போராளிகள் ஆயுதங்களோடு நடமாட அனுமதி வேண்டும் என்றும் புலிகள் முன்னர் கோரிக்கை வைத்தனர்.

### கிழக்கில் ஆரம்பம்

ஏப்ரல் 19ற்கு முன்னரே புலிகளது தாக்குதல் பிரிவுகள் கிழக்கு மாகாணத்திற்கு நகர்த்தப்பட்டன.

ஏப்ரல் 19 அன்று திருமலையில் வைத்து கடற்கரும்புலிகள் நடத்திய தாக்குதல் மூன்றாம் கட்ட ஈழப் போர் கிழக்கில் இருந்து ஆரம்பித்துவைக்கப்படுவதை குறிப்பதற்காகவே நடத்தப்பட்டது.

போர் மூண்ட பின்னர் இரண்டாவது பெரிய தாக்குதலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டுமுறிவு இராணுவ முகாம் மீது நடத்தப்பட்டது.

இவையனைத்தும் இம் முறை கிழக்கில் தமது பலத்தை விரிவாக்கிக்கொள்ள புலிகள் திட்டமிட்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளன.

தொடர்ந்தும் கிழக்கில் புலிகளது தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'ஈழநாதம்' பத்திரிகையில் புலிகளது அரசியல் விமர்சகர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

### தாக்குதல் ஏன்?

கிழக்கு மாகாணத்தில் புலிகள் தாக்குதல் நடத்துவது ஏன்? என்பது அதில் விபரிக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையில் பின்வருமாறு தெரிவிக் கப்பட்டுள்ளது;

"தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டமானது வடக்கில் மட்டுப்படுத்தப் பட்டதாக பிரசாரம் செய்வோருக்கும், அதை ஏற்றுக் கொள்வோருக்கும் இத் தாக்குதல்கள் கிழக்கின் உண்மை நிலையைப் புரியவைத் திருக்கும்.

### கடற்போர்

மூன்றாம் கட்ட போராக தற்போதைய சூழ்நிலை தொடருமானால், இப்போரானது இரண்டாம் கட்டப் போர் போன்று அல்லாது புதிய பரிமாணங்களைக் கொண்டதாக இருக்கும்.

இதில் முக்கியமாக கடற்போர் கடந்த காலத்தைப் போல வடக்கில் மட்டும் மட்டுப் படுத்தப்பட்டதாக இல்லாமல், கிழக்கு கடற்பரப்புக்கும் விஸ்தரிக்கப்படும். அதன் பரிமாணமும் பெரிதாகவே இருக்கும்.

திருமலைத் தாக்குதல் கிழக்கு கடற்போர் ஒன்றை துவக்கிவைத்துள்ளது".

இவ்வாறு 'ஈழநாதம்' பத்திரிகையில் புலிகளது அரசியல் விமர்சகர் தெரிவித்துள்ளார்.

---

# சமாதானப் பேச்சைத் தொடர முயற்சி
# வெளிநாட்டு மத்தியஸ்தம் பற்றி யோசனை!

(அரசியல் நிருபர்)

அரசுக்கும், புலிகளுக்குமிடையே மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்துவைக்கும் முயற்சி ஒன்று நடைபெற்று வருகிறது.

தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் பிரமுகர் ஒருவரும் இம் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இந்தியா தவிர்ந்த வெளிநாடொன்றின் அல்லது வெளிநாட்டவர் ஒருவரின் மத்தியஸ்தத்தோடு மீண்டும் பேச்சை ஆரம்பிக்கலாம் என்று முயற்சி செய்யப்படுகிறதாம்.

குறிப்பிட்ட அரசியல்வாதி அரசாங்க உயர் மட்டத்துக்கு தமிழர் பிரச்சனை தொடர்பாக ஆலோசனை கூறிவருபவராம்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அடிப் படையாக வைத்து அரசியல் தீர்வை முன்வைக்கலாம் என்று முன்னர் யோசனை சொன்னவரும் அவர்தான் என்று தெரியவருகிறது.

அரசியல் தீர்வை தற்போதைய நிலையில் முன்வைக்க வேண்டாம் என்று அரசாங்க முக்கிய அமைச்சரிடம் அந்த அரசியல்வாதி ஆலோசனை கூறியுள்ளாராம்.

குறிப்பிட்ட அரசியல்வாதி தொடர்பாக அவரது கட்சியின் கிழக்கு மாகாண முக்கியஸ்தர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்று கொழும்பில் இருந்து அரசியல் நடத்துவதும், அடிக்கடி வெளிநாடுகளுக்கு பறப்பதுமே அவரது வேலைகளாகும். இவ்வாறு கிழக்கு மாகாணத்தில் செல்வாக்குள்ள பிரதிநிதி ஒருவர் முரசிடம் தெரிவித்தார்.

வெளிநாட்டு மத்தியஸ்தம் ஏற்பட்டால் புலிகளால் வாக்குறுதிகளை மீறி நடக்கமுடியாது. அவ்வாறு நடந்தால் மத்தியஸ்தர் மூலமே புலிகளை அம்பலப்படுத்தலாம் என்றும் அவர் ஆலோசனை கூறியுள்ளதாகவும் தெரிகிறது.

---

# திருமலையில் கெடுபிடி! வீடுகள் இடிப்பு!
## கடற்படை முகாம் விஸ்தரிப்பு-புதிதாக இராணுவ முகாம்!

(திருமலையிலிருந்து சஞ்ஜீவன்)

### தலையாட்டிகள்

கடந்த ஏப்ரல் 19ம் திகதிக்கு பின்னர் திருக்கோணமலையில் படையினரின் கெடு பிடிகள் அதிகரித்துள்ளன.

சுற்றிவளைப்புக்கள், கைதுகள், தேடுதல் நடவடிக்கைகளின் போது 'தலையாட்டி களின்' உதவியோடு சந்தேகத்துக்குரியவர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

அட்டைப் பெட்டிகளை தலையில் போட்டு முகத்தை மறைத்து தலையாட்டிகள் வேன் ஒன்றில் அமர்ந்திருப்பார்கள். சந்தே கத்துக்குரியவர்கள் யாராவது தென்பட்டால் வேனின் கண்ணாடியில் அவர்கள் தட்டுவார்கள். உடனடியாக குறிப்பிட்ட நபர் கைதுசெய்யப் படுவார்.

திருமலை நகர மக்களை முன்னர் கிலி கொள்ள வைத்த வெள்ளை வேன் மீண்டும் திருமலை நகரில் ஓடித்திரிகிறது.

இதே வேளை திருமலையில் மீளக் குடியேறிய அகதிகளும் கெடுபிடிகளால் மீண்டும் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

### புல்டோசர் இடி.

22.04.95 அன்று திருமலை ஆறாம் கட்டையில் புலிகள் பொலிசார் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதனையடுத்து சாம்பல்தீவில் ஆத்தி மோட்டை பகுதியில் உள்ள சில வீடுகள் 'புல்டோசர்' மூலம் இடித்து தரைமட்டமாக் கப்பட்டன.

ஆத்திமோட்டையில் மீள் குடியேற்ற வேலைகளுக்காக கொண்டுவந்து நிறுத்தப் பட்டிருந்த புல்டோசர்தான் வீடுகளை இடிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.

இந்த வீடுகளை இடித்தவர்கள் தமிழ் அதிகாரி ஒருவரை மிரட்டி குறிப்பிட்ட வீடுகள் முன்னரே இடிக்கப்பட்டிருந்தன என்று அத்தாட்சிக் கடிதம் பெற்றுச் சென்றுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இதேவேளை கெடுபிடிகள் காரணமாக இடம்பெயர்ந்துவரும் அகதிகளை அகதிமுகாம்களில் எடுத்துக்கொள்ள யூ.என்.எச்.ஆர். நிறுவனம் மறுத்துள்ளது. இதனால் இடம்பெயர்ந்துள்ளோர் அவதிப்பட்டு வருகின்றனர்.

### விஸ்தரிப்பு

ஏப்ரல் 19ம் திகதி கடற்படை கப்பல் மீதான தாக்குதலின் பின் திருமலை கடற்படைத் தளம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

திருகோணமலை உட்துறைமுக வீதியில் உள்ள கலாசார மண்டபம் ஒன்றில் புதிதாக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இராணுவத்தின் கஜபாகு பிரிவினரே இங்கு முகாமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பொதுமக்களின் குடியிருப்புக்கள் உள்ள பகுதியில் இராணுவ முகாம் அமைப்பது சாதாரண மக்களது இயல்பான வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கும் என்று ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு.சந்திரகுமார் கண்டனம் தெரிவித்துள்ளார். ஜனாதிபதிக்கும், பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கும் இது தொடர்பாக அவர் தந்தி ஒன்றும் அனுப்பிவைத்துள்ளார்.

திருமலை கடற்கரை ஓரத்தில் இருந்து தூண்டில் போட்டு மீன்பிடிக்க முயன்ற மீனவர்களும் தாக்கப்பட்டுள்ளனர். பெரும்பான்மை இன மீனவர்வர்களும் தாக்குதலுக்குத் தப்பவில்லை.

---

# அடையாள அட்டைகள் இல்லாத விவசாயிகள் அவதி!
# சொந்த விரோதம் காரணமாக தவறான தகவல்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் மோதல் தவிர்ப்பு காலத்தில் புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் பகிரங்கமாக நடமாடினார்கள்.

புலிகள் அமைப்பினர் சயனைட் குப்பிகளை தமது அடையாளமாக தடை அரண்களில் படையினரிடம் காண்பித்துவிட்டு நடமாடினார்கள்.

இப்போது மோதல் தவிர்ப்பு முறிந்த பின்னர் மட்டக்களப்பு நகரிலுள்ள சில கடைகளில் சீருடையினர் "நீங்கள் புலிகளுக்கு பொருட்கள் கொடுத்தீர்களா?" என்று விசாரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

"படையினருக்கும் தெரியத்தானே புலிகள் நடமாடினார்கள். அப்படியிருக் கும்போது இப்போது வந்து எம்மை தொந்தரவு செய்தால் நாம் என்ன செய்வது?" என்று வியாபாரிகள் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை சொந்த விரோதம் காரணமாக புலிகள் என்று தகவல் கொடுக்கும் சம்பவங்களும் கிழக்கில் அதிகரித்துள்ளன. தமக்கு விரோதமான வர்களை புலிகளின் ஆதரவாளர்கள் என்று அடையாளம் காட்டுவதில் இயக்கமொன்றும் முன்னிற்பதாக பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

கிழக்கின் தற்போதைய நிலை குறித்து தமிழ் கட்சிகள் பல அரசிடம் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங் களில் மாலையானதும் மக்கள் நடமாட்டம் குறைந்து விடுகிறது.

இதேவேளை அடையாள அட்டை இல்லாத விவசாயிகள் நிலை பரிதாபமா கியுள்ளது. தற்போதைய சிறு போகச் செய்கையை அவர்கள் மேற்கொள்ள அடையாள அட்டைப் பிரச்சனை தடையா கியிருக்கிறது.

புலிபாய்ந்தகல் இராணுவ முகாமுக்கு அப்பால் விவசாயத்தில் ஈடுபடுவோர் அடையாள அட்டையில்லாவிட்டால் அங்கு செல்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

கடந்தவாரம் ஏறாவூர் பொலிஸ் பகுதியில் இடம்பெற்ற மிதிவெடி சம்பவங்களினால் இரு பெண்கள் தமது கால்களை இழந்துள்ளனர்.

---


ஹஜ் பெருநாளைக்
கொண்டாடும்
அன்பு
நெஞ்சங்களுக்கு
-முரசின்-
வசந்த
வாழ்த்துக்கள்!


---

# இலங்கைக்கு உதவலாம் – இராணுவம் தேவையில்லை!

இலங்கை அரசுக்கு இந்தியா நிபந்தனையின்றி உதவ வேண்டும் என்று 'ரைம்ஸ் ஒப் இந்தியா' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளை எதிர்க்க இந்திய அரசு இலங்கை அரசுக்கு சகல வழிகளிலும் உதவ வேண்டும் என்று அந்த சஞ்சிகை வலியுறுத்தியுள்ளது.

ஆயினும் இந்தியா தனது இராணுவத்தை சிறீலங்காவுக்கு அனுப்பக்கூடாது. அவ்வாறு அனுப்புவதன் மூலம் முன்னர் செய்த தவறை மீண்டும் இந்தியா செய்யக்கூடாது என்றும் அந்த சஞ்சிகை தெரிவித்துள்ளது.

'ரைம்ஸ் ஒப் இந்தியா" இந்தியாவின் பிரபல இதழ்களில் ஒன்றாகும்.

---

# யாழ் மருத்துவ பீடத்திற்கு சாவு மணியாம்
## கூட்டணிமீது யாழில் மாணவர்கள் கண்டனம்!

யாழ் மருத்துவ பீடத்துடன் வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியை இணைக்கும் நடவடிக்கையை யாழ் மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் கண்டித்துள்ளது. இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்:

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக சிறீலங்கா ஜனாதிபதி மேற்கொண்டுள்ள தீர்மானத்தை நாம் கண்டிக்கிறோம்.

திறமை அடிப்படையிலான இலவசக் கல்விக்கு எதிராக முன்னர் கூட்டணியின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டதே வட இலங்கை மருத்துவ கல்லூரியாகும். அக் கல்லூரிக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க கூட்டணியினர் முற்படுகின்றனர்.

இத்தகைய நடவடிக்கைகள் இடர்பாடுகளை தோற்றுவிக்கும். இதனை அறிந்திருந்தும் பல்கலைக்கழக நிர்வாகம் கூட்டணியின் கோரிக்கைக்கு இணங்கியமை வியப்புக்குரியதாகும்." இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழ் புறக்கணிப்பு!

(திருமலை நிருபர்)

திருக்கோணமலையில் அமைந்துள்ள இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழ் புறக்கணிக்கப்படுவது ஏன் எனக் கேட்கிறார்கள் மாணவர்கள்.

பெருவாரியான தமிழ் மாணவர் களையே கொண்டியங்கும் இக் கல்லூரியின் மாணவர் பதிவேடு, விண்ணப்பப் படிவங்கள் எவற்றிலுமே தமிழ் மருந்துக்குக்கூட இல்லை. அனுமதிப் படிவங்கள், வேறு படிவங்கள் என்பவை தனிச் சிங்களத்திலேயே றோனியோச் செய்து கொடுக்கப்பட்டு வருவதனால் மொழி புரியாமல் மாணவர்கள் திகைக்க வேண்டியுள்ளது.

அண்மையில் மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கும் விண்ணப்பப் படிவம் தனிச் சிங்களத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி மாணவர்கள் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போது பொறுப்பற்ற பதிலையே நிர்வாகம் கொடுத்ததாம். உண்மையில் நிர்வாகம் நினைத்திருந்தால் படிவங்களைத் தமிழில் றோனியோச் செய்து கொடுத்திருக்க முடியும் என்கிறார்கள் மாணவர்கள்.

---

# புலிகளுக்கு லண்டன் பத்திரிகை புகழாரம்

(இலண்டன்)

இலண்டனில் இருந்து வெளிவரும் 'இன்டிபென்டன்ற்' என்னும் பத்திரிகை புலிகளுக்கு புகழாரம் சூட்டியுள்ளது.

வெற்றியை நெருங்கும் உலகில் மிகவும் சக்திவாய்ந்த அமைப்பாக புலிகள் உள்ளனர் என்று அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

கழுத்தில் சயனைட் வில்லையணிந்த இளைஞர்களால் வழி நடத்தப்படும் நாடு ஒன்றினை கற்பனை செய்து பார்த்தால் அதுபோலவே யாழ்ப்பாணம் இருக்கும். என்று கூறியுள்ள அப் பத்திரிகை புலிகளது பெண்கள் அணியைப் பாராட்டியுமுள்ளது.

---

# புலி முகாம்களை காட்டிக் கொடுத்தார்களாம்!
## ஐந்து பேர் புலிகளால் கைது!

விடுதலைப் புலிகளது இராணுவ முகாம்கள் தொடர்பாக இராணுவத்தினருக்கு தகவல் கொடுத்ததாக ஐந்து பேரை புலிகள் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் புலிகளது உளவுப் பிரிவால் விசாரிக்கப்பட்டுவரும் அந்த ஐந்து பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று தெரிகிறது.

அழகன் சண்முகநாதன் (நெடுங்கேணி), ஆனந்தன் அருணாசலம் (கிளிநொச்சி), வினாசி இராஜதுரை (ஓமந்தை), முருகுப்பிள்ளை கோமுகராசா (செம்மலை, அலம்பல்), செல்லையா சந்தணப்பிள்ளை (கிளிநொச்சி) ஆகியோரே புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

---

# புலிகளால் அபகரிப்பு!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடியில் முஸ்லீம்களுக்கு சொந்தமான உழவு இயந்திரங்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

ஏழு உழவு இயந்திரங்களும், ஒரு மோட்டார் சைக்கிளும் புலிகளால் பறித்துச் செல்லப்பட்டதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோலவே, கிரான் விவசாய விஸ்தரிப்பு நிலையத்துக்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்றையும், ஏறாவூர் தேசிய இயந்திர உபகரண நிலையத்திற்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்றையும் புலிகள் எடுத்துச் சென்றுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

# விநோதனின் செயலாளர் புலிகளின் கிளையில்!

## —முரசுக்கு கிடைத்துள்ள சில தகவல்கள்—

கடந்த 28.04.95 அன்று கொழும்பில் வைத்து கு.விநோதன் சுட்டுக்கொல்லப் பட்டார். இக்கொலை தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர்.

கொல்லப்பட்ட கு.விநோதன் தொடர்பாக முரசுக்கு சில தகவல்கள் கிடைத்துள்ளன.

விநோதன் முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம்-உடுவில் பகுதி அமைப்பாளராக இருந்தவர்.

1976ல் குட்டிமணி குழுவினரால் விநோதன் சுடப்பட்டு உயிர் தப்பியவர்.

அதன்பின்னர் கொழும்புக்கு வந்த விநோதன் தான் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி இருப்பதாகவே கூறிவந்தார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலின் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியோடு மீண்டும் நெருக்கமானபோதும் வெளியே தன்னை ஒரு நடுநிலையாளர் என்றே கூறிவந்தார்.

அதே சமயம் தனது நெருக்கமான வர்களிடம் ஜனாதிபதிக்கு தான் ஆலோச கராக இருப்பதுபோல விநோதன் சொல்லி வந்தார் என்றும் தெரிகிறது.

இதேவேளை விநோதனின் செயலாள ராக இருந்தவர் இராஜரத்தினம். இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்.

கனடாவில் உள்ள புலிகளது உலகத் தமிழர் இயக்கத்தின் ஒரு பிரிவு தமிழீழ சங்கம் என்றழைக்கப்படுகிறது.

அந்த தமிழீழ சங்கத்தில் திரு.இராஜ ரத்தினம் தற்போது செயலாளராக இருக் கிறார்.

விநோதன் ஒரு தடவை கனடா சென்றிருந்தபோது இராஜரத்தினம் வீட்டில் தான் தனது பிறந்தநாளைக் கொண்டாடி னாராம்.

விநோதன் கொலைக்கு புலிகள் காரணம் என்றால், இராஜரத்தினம் மூலம் விநோதனிடம் புலிகள் நெருங்கியிருக்கலாம் என்று சந்தேகிக்க இடமுண்டு.

விநோதன் மூலமாக ஏதாவது தகல்கள் பெற புலிகள் விரும்பியிருக்கலாம்.

விநோதனால் முடியாது என்று தெரிந்த நிலையில் புலிகள் வேறு முடிவுக்குச் சென்றிருக்கலாம் என்று தமிழ் கட்சி வட்டாரம் ஒன்று முரசுக்கு தெரிவித்துள்ளது.

"விநோதன் போன்றவர்கள் மரண தண்டனைக்குரியவர்கள்" என்று கனடாவில் இருந்து வெளிவரும் புலிகளது பத்திரிகை முன்னர் தெரிவித்திருந்தது. இச் செய்தி பெப்ரவரி 05-11.1995 முரசில் வெளிவந் திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# திருமலை தபாலக வேலைகள் இனித் தாமதமாகலாம்?

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை பிரதம தபாற் கந்தோர் எந்த நேரத்திலும் ஸ்தம்பிதம் அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது பன்னிரண்டு தபால் அதிபர்கள் குறைவுடன் இயங்கிக் கொண்டிருக்கும் இக்கந்தோர் எதிர்வரும் ஜுன் மாதத்தில் பயிற்சிக்கு ஐந்துபேரை அனுப்பவுள்ளதால் பதினேழு உத்தியோகத்தர்கள் குறைவை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

முதலாம்தர அஞ்சலதிகாரிகளுக்கு ஓவர்டைம் என வழங்கப்படக்கூடிய உயர்ந்த தொகை 3000/- எனவும் இரண்டாம் தர அஞ்சலதிபருக்கு 2300/- எனவும் மட்டுப்படுத்தப்பட்டமையைக் காரணம் கூறி, கடந்த வருடம் ஜுன் மாதம் தொடக்கம் இவர்களது மேலதிக நேர வேலைக்கான கூலியைக் கொடுக்க மட்டக்களப்பு கணக்காளர் அலுவலகம் மறுத்து வருவதால், அஞ்சல் அதிபர்கள் மேலதிக வேலை செய்ய இயலாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

ஒரு உத்தியோகத்தர் ஆகக் குறைந்தது மூன்று பேருடைய கடமைகளைத் தினமும் செய்துவர வேண்டியுள்ளது. இதனால் இரண்டு வாரத்துக்குள்ளேயே அவ்வுத்தியோ கத்தரது கொடுப்பனவு எல்லை முடிந்து விடுவதால் வேலைகள் ஸ்தம்பிதம் அடையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய உத்தியோகத்தர் பற்றாக் குறை கடந்த ஐந்து வருடகாலமாக நிலவி வருகின்றபோதிலும், மேலிடம், இருக்கும் ஊழியர்களை கடுமையாக வேலை வாங்குவதில்தான் அக்கறை கொள்கிறதே யொழிய இடமாற்றங்கள் மூலம் தட்டுப் பாட்டை நீக்கவோ, புதிய நியமனங்களை போதிய அளவு வழங்கவோ முனைவ தில்லை என்ற குற்றச்சாட்டு ஊழியர் மத்தியில் பரவலாகக் காணப்படுகிறது.

# மட்டக்களப்பில் மாயமாய் மறைந்த பணம்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல வசதிகளுடன் கூடிய பொதுவிளை யாட்டரங்கொன்று இல்லாததைக் காரணம் காட்டி அத்தகைய விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்காக பரிசுச் சீட் டொன்றின் விற்பனை மூலம் சேகரிக் கப்பட்ட ரூபா 3 1/2 இலட்சத்திற்கு மேலான நிதி எங்கே? யாரிடம் போனது என்று தெரியாத மர்மமாக உள்ளதென மட்டு மாவட்ட எம்.பி. திரு.கே. துரைராஜாசிங்கம் தெரிவித்ததார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட விளை யாட்டுப்போட்டிகள் வந்தாறுமூலை இளைஞர் கழகங்களுக்கிடையே நடை பெற்றது. இந்நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தபோதே அவர் மேற்சொன்ன கேள்வியை எழுப்பினார்.

இந்நிதி சேகரிப்பை மட்டு. மாவட்டத்தின் முன்னைய அரச அதிபராக இருந்தவரும் முன்னைய பிரிகேடியராக இருந்தவருமே ஒழுங்கு செய்திருந்த தாகவும், பாடசாலை தோறும் காரியாலயங் கள் தோறும் பரிசுச் சீட்டு கட்டாயப் படுத்தலின் பேரில் விற்பனை செய்யப் பட்டு பணம் சேகரிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அவசியம் ஒரு அம்புலன்ஸ் வேண்டும்


கல்முனைத் தொகுதியில் வாழும் மக்களுக்கு பிரதான மாவட்ட வைத்திய சாலையாக சாய்ந்தமருது வைத்தியசாலை விளங்குகின்றது. இவ் வைத்தியசாலை கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக் காடு, மாவடிப் பள்ளி, நற்பட்டிமுனை, மற்றும் 4,5,6,12ம் கொலனிகளிலிருந்து 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களும் பயனடையும் பிரதான வைத்தியசாலை யாக விளங்குகின்றது.

இவ் வைத்தியசாலையில் மாதாந்தம் 225 பிள்ளைகள் பிறக்கின்றனர். இவர் களில் குறைந்தது 15 பேரையாவது மட்டக் களப்பு, கல்முனை, அல்லது அம்பாறை வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்க வேண்டிவருகின்றது. அத்துடன் வேறு கடுமையான நோயாளர்களும் இவ் வைத்தியசாலையிலிருந்து பெரிய ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு செல்ல வேண்டி ஏற்படுகிறது. கடந்த ஒரு வருடமாக இவ் வைத்தியசாலைக்கு ஓர் அம்புலன்ஸ் வண்டி இல்லாமையினால் 650முதல் -1000 ரூபா வரை கொடுத்து தனியார் வாகனத்தை வாடகைக்கு அமர்த்த வேண்டியுள்ளது. இதில் சாதாரண ஏழைக் குடும்ப நோயாளிகளுக்கு இவ்வளவு பணம் செலுத்த முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இதற்கு முதன்மைக் காரணம்- ஆஸ்பத் திரிக்கென ஓர் அம்புலன்ஸ் வண்டி யொன்று இல்லாமையே. கடந்த 12 மாத காலமாக அம்புலன்ஸ் வண்டியை பெற்றுக் கொள்ள கப்பல்துறை புனர்வாழ்வு அமைச்சர் தொட்டு சுகாதார நெடுஞ் சாலைகள் அமைச்சருக்கும், வடகிழக்கு மாகாண சபைக்கும் இவ் வைத்திய சாலையின் பொறுப்பதிகாரி, சாய்ந்தமருது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் பலமுறை தெரிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உரிய அதிகாரிகள், அமைச்சர்கள் உடன் கவனத் திற்கெடுத்து அம்புலன்ஸ் வண்டியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப் பார்களா? என பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

அஸ்றப் ஏ. ஸமது
தலைவர், முஸ்லிம் லீக் வாலிப முன்னணி
சாய்ந்தமருது-03.

# நுவரெலியாவில் ஒரு வினோதமான பிரசுரம்!



நுவரெலியாவில் அபிவிருத்தி லொத்தர் ஆதரவில் இன்னிசை நிகழச்சி ஒன்று நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியை முன்னிட்டு விளம்பர பிரசுரம் சிங்களத்திலும்,தமிழிலும் வெளியிடப்பட்டிருந்தது.

தமிழில் வெளியான பிரசுரத்தில் காணப்பட்ட வார்த்தைகள் விநோதமானவை.

உதாரணத்திற்கு சில;

உண்டிக்கட்களுக்காள,
குளிர்சானப் பெட்டி
பரிசுகள் நுறு
பெயனானாயும்

விற்பனையானரி
பமோ அபிலிருத்தி
அபிவிறுத்தி லோதிதர்
வாக்குறுதிதளை
நிறைவேற்றும்.

இது தற்செயலாய் ஏற்பட்ட தவறாகத் தெரியவில்லை. தமிழிலும் பிரசுரம் அடிப்பதாக காட்டியபடியே ஏனோ தானோ போக்குக்கு எடுத்துக்காட்டாகவே இப்பிரசுரம் அமைந்துள்ளது.


## BRIGHTன் கல்வித்திட்டம்

**90 DAYS SPOKEN ENGLISH & SINHALA**

**3 ஒலிப்பதிவு நாடாவுடன் கூடிய தபால் மூலக்கல்வி**
**POSTAL TUITION WITH THREE AUDIO CASSETTES**

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்துள் இலகுவாக எளிய நடையில் மாணவர்களின் விருப்புக்கு ஏற்றமுறையில் நவீன உளவியல் முறையில் ஆங்கில/சிங்கள பேச்சு மொழி கற்றுத்தரப்படும்.

எமது பாடத்தொகுப்புடன் ஒவ்வொரு மாதமும் ஒரு கசெட் ஆக 3 ஒலிப்பதிவு நாடாவும் இணைவதனால் உங்களை ஓர் ஆங்கில/சிங்கள சூழலிலேயே இருப்பவர்கள் போன்ற இயல்பை உருவாக்கி, உங்களின் வெட்கம், பயப்பாடு ஆகியவற்றை அகற்றி ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி காட்டுகின்றது.

**METHOD OF BOOK KEEPING**
**கடைக் கணக்கு எழுதும் முறை**

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு பேணப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும். இப் பயிற்சிநெறியை மேற்கொள்வது மூலம் Book-Keepers, Accounts Clerk, Audit Clerks, Bank Clerks, Cost Clerks ஆகிய தொழில்களை பெற்றுக்கொள்ளக் கூடிய தொழில். நுட்பகல்வி நெறியாகும். இப்பயிற்சியை திறம்பட முடிப்பவர்கட்கு நற்சான்றிதழும் வழங்கப்படும்.

**G.C.E. (O/L) முன்னோடி பயிற்சி - 1000 வினாவிடை**
**ஆண்டு 5 புலமைப்பரிசில் முன்னோடிப்பயிற்சி – புதியபாடத்திட்டம்**

பரீட்சை எடுக்கும் மாணவர்கட்கு சிறப்பு சித்தியை (D) பெற்றக்கொடுக்கும் பாடப்பொழிப்பு, விளக்கம் ஒவ்வொரு பாடத்திற்கும் 1000 வினாவிடை கொண்ட பாடத்திட்டம். ஆண்டு 5 மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திற்கேற்ற முறையில் அதிக புள்ளியை பெற்றுத்தரும் முன்னோடிப் பயிற்சித் திட்டம். பரீட்சையில் சித்திபெறும் அனைத்து மாணவர்களுக்கும் BRIGHT ன் வெகுமதி வழங்கப்படும்.

**இத்தோடு வெளிவந்துவிட்டன**
**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான**

ஆரம்ப பொதுவிவேகம் ஆண்டு 4,5 குரிய பாடநூல் 75/=

ஆரம்ப பொதுவிவேகம் ஆண்டு 5 செயல்முறைப் பயிற்சி 60/=

800 மாதிரி வினா, 500 பொது அறிவு கேள்வி பதில், 250 விவேக கணக்குகள் 9 பாடங்களை உள்ளடக்கிய கேள்வி களுடன் கூடிய மாதிரி வினா நூல் 100/=

(புத்தகங்களை 20/- பெறுமதியான முத்திரை அனுப்பி V.P.P யில் பெற்றுக்கொள்ளலாம்)
மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
S - 27, FIRST FLOOR, P. O. BOX - 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO - 11. T.P 434770



இலங்கைக் குடியரசின் தொழில் வாய்ப்பு கல்வி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது R/NO. W/A 3596

## DIPLOMA IN FINANCIAL TECHNIQUES

## நிதித்துறையில் டிப்ளோமா பயிற்சிப் பாடநெறி

**யாருக்கு?**

1. தொழில் தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு. பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு
2. சுய தொழில் பார்ப்பவர்களுக்கு அல்லது சுயதொழிலில் ஈடுபட விரும்புகின்றவர்களுக்கு.
3. தொழில் செய்து கொண்டிருப்பவர் எனினும் முன்னேற வாய்ப்புக்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு தமிழ் மொழி மூலம் முதன் முறையாக இப்படியான ஒரு பாடத்திட்டத்தை வகுத்து, இதுவரையில் ஏழு தொகுதியினர்களை வெற்றிகரமாகப் பயிற்றுவித்த, அனுபவமிக்க பட்டயக் கணக்கறிஞர்களால் (CHARTERED ACCUNTANTS) இந்த 06 மாதகாலப் பயிற்சிப் பாடநெறி மீண்டும் 28.5.95 இல் ஆரம்பமாகின்றது. ஆகக் குறைந்த கல்வித் தகைமை G.C.E. O/L உயர்தர வகுப்பில் கற்போருக்கான உசாத்துணை பாடநெறி.

மாணவர் பதிவும் புலமைப்பரிசில் பரீட்சையும் 28.5.95 அன்று காலை 9.00 மணியளவில்
இடம்:- பிரின்ஸ் கல்லூரி (கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தையடுத்து)

**500 புலமைப் பரிசில்கள்**

**இலவச ஆங்கில பாடநெறி Business English**

பொது விவேகம், எளிய கணிதம் கொண்டமைந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு இலவசமாகவும், அரை கட்டணத்திலும் இப்பயிற்சி பாடநெறியினை பின்பற்றலாம்.

பின்வரும் தொழில்களைப் பெறவும் பதவி உயர்வ பெறவும் இப்பயிற்சி நெறி பெரிதும் உதவும்

| | | |
|---|---|---|
| * Accounts Clerks | * Tax Assistants | * Accounts Executives |
| * Bank Clerks | * Wages Clerks | * Accounts Assistants |
| * Cost Clerks | * Store Keepers | * Audit Clerks |
| * Stores Clerks | * Book Keepers | * General Clerks |

**கற்பிக்கப்படும் பாடங்கள்**

| | |
|---|---|
| • நிதிக்கணக்கியல் | Financial Accounting |
| • கணக்காய்வு | Auditing |
| • வரி விதிப்பு | Taxation |
| • கிரயக் கணக்கியல் | Cost Accounting |
| • ஆங்கிலம் | Business English |

• ஞாயிறு தினங்களில் மட்டும் வகுப்புக்கள் நடைபெறுவதால், தூர இடங்களில் இருப்பவர்களும் இலகுவில் பங்குபற்றலாம்.
• பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்வோருக்கு (பெறுமதியான) சான்றிதழ்.
• செயன்முறை பயிற்சியும் வழங்கப்படும். • தமிழ் மொழி மூலமான பூரண விளக்கம்.

இலவசமாக **ETF., EPF., GRN, PRO, MRF, INVENTORY RECORD, LEDGER SHEETS, VOUCHERS, CASH MEMOS, CREDIT INVOICE** போன்றவை வழங்கப்படும். இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவோர் இடையில் வேறு ஏதேனும் பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் (உ+ம்) **GOVERNMENT CLERICAL EXAM, GOVT., TEACHERS EXAM, BANKERS ENTRANCE EXAM etc.** எவ்வித கட்டணமும் இன்றிப் பயிற்சி அளிக்கப்படும்.

**DIRECTOR OF STUDIES,**
**FINANCIAL TRAINING BASE**
S-71, 3rd Floor, (Central Super Market Complex)
**Colombo - 11.**

விபரங்களைக் கொண்ட கையேட்டினைப் பெற விரும்புவோர் தெளிவாக சுயமுகவரியை எழுதி ரூபா 8/- முத்திரையுடன் தொடர்பு கொள்ளவும். (நேரில் பெற விரும்புவோர் ஞாயிறு தினங்களில் மட்டும் பிரின்ஸ் கல்லூரிக்கு வருகை தரவும்)

முக்கிய கவனிப்பு : இலங்கையில் எமக்கு வேறு எந்த இடத்திலும் கிளைகள் கிடையாது.

# யுத்த முனையில் திருப்பம்!

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

பலாலியில் புலிகள் பாவித்த ஏவுகணை பாரதத்தையும் தன் வானவெளிப் பாதுகாப்பை நினைத்து யோசிக்க வைத்திருக்கிறது.

இந்தியாவிலும் தீவிரவாத இயக்கங்கள் இருக்கின்றன. பஞ்சாப் மாநிலத்தில் இருந்த தீவிரவாதிகளை இந்திய மத்திய அரசு ஒரு விதமாக சமாளித்தது.

இப்போது காஷ்மீர் தீவிரவாதிகள் தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாகிஸ்தான் உதவியோடு காஷ்மீர் தீவிரவாதிகள் களத்தில் இறங்கியிருப்பதாக இந்தியா சொல்லிக் கொண்டிருக்கிறது.

இந்தியா பலமாக இருப்பதை பாகிஸ்தான் சகிக்காது. பாகிஸ்தான் இராணுவபலம் திரட்டுவதை இந்தியா ரசிக்காது.

இந்த மோதலில் இரு நாடுகளிலும் உள்ள தீவிரவாதிகளை எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் இரு நாடுகளுமே தமது சதுரங்கக் காய்களாக நகர்த்த நினைப்பது ஆச்சரியமல்ல.

எனினும், இந்தியாவில் உள்ள தீவிரவாத இயக்கங்கள் எதுவும் இதுவரை ஏவுகணைகளை பயன்படுத்தியது கிடையாது.

தரைமார்க்க தாக்குதல்கள் மட்டுமே அவற்றின் உத்திகளாக இருக்கின்றன.

தரை மார்க்க தாக்குதலில் கூட 'தற்கொலை தாக்குதல்' உத்தியை அவை எதுவும் இதுவரை கையாளவில்லை.

அதனால்தான் தனது நாட்டில் உள்ள தீவிரவாத இயக்கங்களை விட புலிகளைப் பற்றியே இந்தியா அதிகம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

புலிகள் தொடர்பாக இந்தியா போட்ட கணக்குகள், இரண்டு முக்கிய விடயங்களில் மிகத் தப்பானவையாக முடிந்திருக்கின்றன.

ஒன்று-புலிகளுக்கு ஆயுதம் கொடுப்பதன் மூலமாக தம்மைச் சார்ந்திருக்க வைக்கலாம் என்று நினைத்தது.

இந்தியப் படைக்கு எதிராக புலிகள் துணிச்சலாகப் போரைத் தொடங்கிய தினத்தன்று அந்த நினைப்புப் பொய்த்துப் போனது.

இரண்டு புலிகளை தனது இராணுவத்தால் சுலபமாக துடைத்தெறிந்து விடலாம் என்று போட்ட கணக்கு.

இந்தியப் படையால் புலிகளை முறியடிக்க முடியாமல் போனது ஒரு புறமிருக்க, இந்திய இராணுவ அதிகாரிகள் சிலரே புலிகளது கெரில்லா நடவடிக்கைகளைக் கண்டு மலைத்துப் போனார்கள். தமது வியப்புக்களை புத்தகமாக எழுதியும் முடித்திருக்கிறார்கள்.

இங்கே ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். இந்தியாவோடு புலிகள் யுத்தம் தொடங்கியதை தமிழ் மக்கள் முதலில் விரும்பவேயில்லை.

யாழ்ப்பாணத்தில் சுதுமலையில் ஒரு கூட்டம் நடந்தது. இந்தியாவிடம் ஆயுதத்தை ஒப்படைக்கப் போவதாகப் பிரபா கூறினார். கூடியிருந்த பொது மக்கள் கரகோசம் செய்து வரவேற்றனர்.

**ஆனால்-யுத்தத்தை புலிகளோடு நடத்திய இந்தியப் படை தமிழ் பெண்களின் சட்டைகளுக்குள் "குண்டு இருக்கிறதா?" என்று தேடியபோது இந்தியப் படை, மீதான நம்பிக்கை குண்டு வைக்கப் படாமலேயே தகர்ந்து போனது.**

தங்களை அவமதிப்பவர்களை திருப்பி அடிக்க முடியாத சாதாரண மக்கள், அவமதிப்பவர்களை யார் அடிக்கிறார்களோ அவர்களை ஆதரிக்கவே செய்வர்.

இந்தியப் படை-புலிகள் யுத்தத்தில் மட்டுமல்ல, இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடக்கும் யுத்தத்திலும் மேற்கண்ட விடயம் பொருந்தவே செய்யும்.

இந்தியா போட்ட கணக்குகள் பிழைத்ததோடு தனது முன்னாள் பிரதமரையும் புலிகளிடம் இழந்தது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவை புலிகள் பறித்தபோதே புலிகளின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் தனக்கும் ஆபத்து என்பதை இந்தியா உறுதியாகத் தீர்மானித்துக் கொண்டது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா இந்திய எதிர்ப்பாளர் என்று முத்திரை குத்தப்பட்டார்.

தனது இறுதிக் காலத்தில் பிரேமதாசா இந்திய எதிர்ப்பை குறைத்துக் கொண்டபோது இந்தியாவும் நட்புக் கரத்தை நீட்டவே செய்தது.

**இலங்கையில் பிரேமாவை விட பிரபாதான் இந்தியாவுக்கு ஆபத்தானவராகத் தெரிந்தார். எனவே எதிரிக்கு எதிரி நண்பன் என்ற கோட்பாட்டின் படி இந்தியா பிரேமாவோடு கை குலுக்கிக் கொண்டது.**

பிரேமாவின் பின்னால் பதவிக்கு வந்தவர் டிங்கிரி பண்டா விஜயதுங்கா.

அவருக்கு அணைக்கவும் தெரியாது; அடிக்கவும் தெரியாது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அவரது தலைமைத்துவம் எந்த விதமான சாதுரியமான காய் நகர்த்தலையும் மேற்கொள்ளாமல் முற்றுப் பெற்றது.

பிரதமராக வந்து ஜனாதிபதியாகி 'சமாதானப் புறாவாக' சித்தரிக்கப்பட்டவர் இன்றைய ஜனாதிபதி.

சர்வதேச சமூகத்தின் கவனத்தை கவரக்கூடிய புதிய நம்பிக்கை நட்சத்திரமாக அவரது வருகை அமைந்தது.

உப்புச் சப்பில்லாத ஒரு ஜனாதிபதிக்குப் பின்னர் சந்திரிக்கா அறிமுகமானதுதான் அவரது வரவுக்கு பலத்த ஆரவாரத்தையும் ஏற்படுத்தியது.

அவர் புலிகளோடு பேசினார்.

பேச்சு வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையை உருவாக்கினார். தனது இராணுவம் மற்றும் படைகள் குறித்தே அதிருப்தி கொண்ட ஒருவராக அவர் பேசியது பாதிக்கப்பட்ட மக்களிடம் பலத்த நம்பிக்கையைக் கட்டி எழுப்பியது.

புலிகளோடு ஜனாதிபதி சந்திரிக்கா பேசியது தொடர்பாக இந்தியா வெளிப்படையாக எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

ஏற்கனவே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் சுட்டிக்காட்டியது போல, சந்திரிக்கா அனுபவப்பட்டுவிட்டு திரும்பி வருவார் என்று இந்தியா நம்பியிருந்தது.

பேசாதே என்று தடுப்பதைவிட 'பட்டு அறிந்து வந்த பின்னர் அடுத்த கட்டம் பற்றி புத்தி சொல்வது நல்லது' என்றே இந்தியா பார்த்துக் கொண்டிருந்தது.

அந்தக் கட்டம் இப்போது வந்து விட்டது. ஆனால் இந்தியாவும் சந்திரிக்காவும் எதிர்பார்க்காத திருப்பம் ஒன்று போர் முனையில் ஏற்பட்டு விட்டது.

புலிகள் 'அவ்ரோ' விமானங்களை தாக்கியது மூலம் இங்கு இராணுவ சம நிலையை ஏற்படுத்தியதோடு, இந்தியாவிலும் அதன் வான் பாதுகாப்பு தொடர்பான பதட்ட நிலையை ஏற்படுத்தி விட்டனர்.

இந்தியப் பிரதமர் கூட "புலிகளது ஏவுகணை அச்சுறுத்தல்தான்" என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அச்சுறுத்தல் என்று பகிரங்கமாகவே சொல்லிவிட்டு இந்தியா கையைக் கட்டிக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆனால், அதற்காக இந்தியப் படை மீண்டும் வரும் என்று எழுந்துள்ள புரளிகளில் உண்மையில்லை.

பரபரப்பான செய்திகள் சில சமயம் சில செய்தியாளர்களால் சொந்தமாகத் தயாரிக்கப்படுவதுண்டு. அப்படித்தான் இந்தியப் படையை அனுப்புமாறு சந்திரிக்கா கேட்டுள்ளார் என்ற செய்தியும் சில வெளிநாட்டு செய்தி நிறுவனங்களது சொந்த தயாரிப்புத்தான்.

சமீப எதிர் காலத்தில் இலங்கைக்குள் நேரடியாக 'தலையை வைக்க இந்தியா விரும்பாது. இந்திய அரசியல் நிலவரமும் அதற்கு சாதகமானதாக இல்லை.



19.04.95 அன்று திருமலை கடற்படை கப்பல் தாக்குதலில் பலியான பெண் கடற்கரும்புலிகளோடு பிரபாகரன்.

## சமபல நிலையும் சமாதான முயற்சிகளும்

**நாரதர்**

ராஜீவ் கொலைக்கு பதிலடி என்று அரசியல் லாபம் தேட இந்தியப் பிரதமர் நினைக்கலாம். அல்லவா? என்று ஒரு கேள்வி எழலாம்.

பதிலடி கொடுத்தால் கிடைக்கும் லாபத்தைவிட மீண்டும் அவசரப்பட்டு மூக்கறுபட்டால் என்ன நிலை ஏற்படும் என்றுதான் இந்தியா யோசிக்கும்.

எனவே-இராணுவ தொழில்நுட்ப தார்மீக உதவிகள் என்றளவில் அரசுக்கு உதவ மட்டுமே இந்தியா தயாராக இருக்கிறது என்று நம்பலாம்.

தற்போதைக்கு இலங்கை அரசும் அதனைத்தான் எதிர்பார்க்கும்.

இந்தியா இன்னொரு விடயத்தில் இனி விழிப்பை அதிகரிக்கலாம். தமது நாட்டுக்குள் புலிகள் ஊடுருவாமல் தடுப்பதில் கூடிய கவனம் செலுத்துவதே அதுவாகும்.

கடலில் கூட்டு-ரோந்து நடவடிக்கைகளில் இலங்கை கடற்படையோடு இந்தியா ஒத்துழைக்க முன்வரும் சாத்தியம் உண்டு.

புலிகளால் கொல்லப்பட்ட முன்னாள் கடற்படை தளபதி கிளன்சி பெர்னாண்டோ காலத்திலேயே கூட்டு ரோந்து முயற்சி செய்யப்பட்டது. அவர் கொல்லப்பட்டதோடு அந்த முயற்சி கைவிடப்பட்டது. மீண்டும் அது ஆரம்பிக்கப்படலாம்.

தற்போதைய நிலையில் தனது நாட்டுக்குள் புலிகளை நுழைய விடாமல் பார்த்துக் கொள்வது, இலங்கை அரசுக்கு யுத்தத்தில் உதவுவது என்ற வரையறைகளுக்குள்தான் இந்தியாவின் நடவடிக்கைகள் அமையும்.

எது எப்படியோ நேரடியாக தனது படைகளை முன்புபோல அனுப்பி வைக்க இந்தியாவால் தற்போதைக்கு முடியாது.

•••

**யு**த்த முனையில் ஏற்பட்டுள்ள சமபல நிலை பற்றி கணக்கில் எடுக்காமல் சமாதான முயற்சிகள் பற்றிப் பேச இயலாது.

மூன்றாம் கட்ட ஈழப் போரில் முன்பிருந்ததைவிட புலிகள் தமது இராணுவ பலத்தை உரத்துக் காட்டியிருக்கிறார்கள்.

வடக்கில் தமது முகாம்களை பாதுகாப்பதே அரசுக்கு பெரும் தலையிடியாக மாறியிருக்கிறது.

'வரையறுக்கப்பட்ட யுத்தம்' என்று அரச தரப்பு சொல்லிக் கொண்டாலும் ஒரு வரையறைக்கு மேல் படைகள் நகரமுடியாமல் புலிகள் வடக்கில் கட்டுப்படுத்தியிருப்பதே உண்மை.

யாழ்ப்பாணத்திற்குள் சுலபமாக செல்ல முடியும் என்றால் 'வரையறை யுத்தம்' என்றெல்லாம் அரசு சொல்லிக் கொண்டிருக்காது.

போர் செய்ய விரும்பவில்லை என்று அரசு ஓயாமல் சொல்லிக் கொண்டாலும் கூட கிழக்கில் படையினரது நடவடிக்கைகள் எதிர்மாறானவையாகவே தெரிகின்றன.

விமானத் தாக்குதல்கள் கூட வடக்கில் நடந்துள்ளன. ஷெல் அடிகளும் விழுந்திருக்கிறது.

படைகள் முன்னேற முயற்சி செய்துள்ளன. பொருளாதாரத் தடை மீண்டும் போடப்பட்டு, சைக்கிள் கொண்டு செல்லவும் தடை செய்யப்பட்டுள்ளது.

தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன. அரசுக்கு ஆதரவான தமிழ் கட்சிகள் கூறினாலும் கூட கைது செய்யப்பட்டவர்களை பொலிசார் விடுதலை செய்ய மறுக்கின்றனர்.

கிழக்கில் துறைநீலாவணையில் பெண்களோடு சேஷ்டைகள் செய்யுமளவுக்கு பொலிசார் சிலர் நடந்து கொண்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இவையெல்லாம் 'வரையறுக் கப்பட்ட யுத்தம்' என்ற கருத்தை பொடிப் பொடியாக்கி வருகின்றன.

புலிகளை பலவீனப்படுத்தி இராணுவ சமபல நிலையை உடைக்கவே அரசு விரும்பும்-விரும்புகிறது.

ஆனால், புலிகளை பலவீனப் படுத்துவது அத்தனை சுலபமாக இருக்காது.

அதே சமயம் பலமான நிலையில் இருந்து கொண்டு குறைந்த மட்ட தீர்வுகளுக்கு வரவேண்டிய தேவை புலிகளுக்கு ஏற்படாது.

சமபலம் கொண்ட இரு அணிகள் மத்தியில் சமரசம் ஏற்பட வேண்டுமானால் சமதரத்தை நிச்சயம் செய்யும் தீர்வு தேவை.

அதனைச் செய்ய அரசால் முடியுமா?

**தம்மோடு சமபலம் கொண்ட புலிகளை திருப்தி செய்வது ஒரு புறமிருக்க, முதலில் தமிழ் பேசும் மக்களை திருப்தி செய்யக் கூடிய தீர்வையாவது அரசு முன்வைக்க வேண்டும். அப் போதுதான் சமரச முயற்சிகள் வெற்றியளிக்குமா என்ற கேள்விக்கு விடைகிடைக்கும்.**

•••

**யு**த்தம் மீண்டும் ஆரம்பித்துள்ளதால் உள்நாட்டில் உள்ள அகதிகளது எதிர்கால நம்பிக்கைகள் மேலும் தொலைவுக்குச் சென்றுள்ளன.

ஏற்கனவே அகதிகளான மக்களின் எதிர்காலமே கேள்விக்குள்ளாகியுள்ள நிலையில் மேலும் அகதிகளாகப் போகின்ற மக்களை தாங்குவது யார்?

இதே சமயம் வெளிநாடுகளில் புகலிடம் மறுக்கப்பட்டுள்ள நம்நாட்டு தமிழ் அகதிகள் பலர் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கலாம்.

இலங்கையில் புயலுக்கு முன் நிலவிய சூழலை வைத்து அகதிகளை திருப்பி அனுப்ப சில மேற்குலக நாடுகள் சுறுசுறுப்பாயின.

இப்போது அந்த நாடுகள் தமது முயற்சிகளை பின்போட்டுள்ளன.

வெளிநாடொன்றில் உள்ள தமிழ் அகதி நண்பர் ஒருவர் இரு மாதங்களுக்கு முன்னர் எனக்கு சொன்ன கருத்தை உங்களுக்கும் சொல்லுகிறேன்;

**"புலிகள் தமிழீழத்தைக் கைவிடார்கள். அரசும் தீர்வு வைக்காது. யுத்தம் எப்படியோ தொடங்கத்தான் போகிறது. தொடங்கும் ' யுத்தம் இப்போது தொடங்கினால் என்ன, சற்றுத் தள்ளித் தொடங்கினால் என்ன? இப்போதே தொடங்கினால் எமக்கு நல்லது. நாமும் உங்கே வந்து அவதிப்பட நேரா தல்லவா."**

உள்ளூர் அகதிகளின் ஏக்கத்தில் மட்டுமல்ல, வெளிநாட்டு நம் அகதிகளது கருத்திலும் ஓரளவு நியாயம் உண்டுதான் என்று தோன்றுகிறது.

---

## அதிரடி அய்யாத்துரை



**க**ளிமண்ணும் ஒரு கலக்குக் கலக்கும் எண்டு யார்தானுங்கோ நினைச்சது? மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடேலாது எண்டுதான் இத்தனை காலமும் நினைச்சுக் கொண்டிருந்தனான். ஆனால் களிமண் கொழும்பை காலி பண்ண வந்தது எண்டு சூப்பர் தகவலை கஷ்ரப்பட்டுக் கண்டுபிடிச்சு சொன்னவர் முடிச்சுப் போட்டுக் காட்டிப் போட்டாரல்லோ. எனக்கு என்ன ஒரு சந்தோசம் எண்டால், ஸ்கொட்லாந்துக்கு அனுப்பாமல் இலங்கையில வச்சே களிமண் எண்டு கண்டு பிடிச்சுப் போட்டினமல்லோ. அதுதான் சந்தோசம். இல்லாட்டி ஸ்கொட்லாந்திலிருந்து முடிவு வர முன்னர் களிமண் கொண்டுவந்த பஸ் நடத்துநரும் சாரதியும் ஒரு வழியாகியிருப்பினமல்லோ!

**தே**டுதலுக்குப் போனவை ஒரு வீட்டிலை பொம்பிளைப் பிள்ளையிட்டை நீ ஏன் ரெண்டு எழுத்தாரோடு சேரேல்லை? எண்டு கேட்டவையாம். அவையாப் போகாட்டிலும் இவையாப் போக வைப்பினம் போலக் கிடக்கு.

**தி**ருவான மலையிலை சனம் ஒடுப்பட்டுத் திரியேக்கை வெகுஜன பிரதிநிதி தங்கமானவர் கொழும்பிலை நிண்டவராம். "ஏன் ஐயா இஞ்சை நிக்கிறியள்?" எண்டு கேட்டால் "சுகமில்லை" எண்டு சொன்னவராம். ஏன் பாருங்கோ திருவான மலையிலை ஆசுபத்திரி இல்லையோ? சும்மா போங்கோ அங்கை என்ன தேர்தலோ நடக்குது? தேடுதல் அல்லோ நடந்தது. அதுதான் உடம்பைப் பார்த்துக் கொண்டு ஆறுதலாய்ப் போயிருப்பார்.

**'பொட்டோடு'** வந்தால் பொட்டம்மானின் ஆட்கள் எண்டு அர்த்தம். (ரேடியோவில் ஒரு பாட்டுக் கேட்டனான். "கண்ணும் கண்ணும் சந்தித்தால் காதல் எண்டு அர்த்தம்." அந்த பாதிப்பிலை எழுதிப்போட்டன்.) பெரும்பான்மை மொழிப் பத்திரிகை. ஆனால் அரச கட்டுப்பாட்டு மாலைப் பத்திரிகை போட்ட செய்தி தான் அது பொட்டோடு வந்த தமிழ்ப் பிள்ளைகளை படம் எடுத்துப் போட்டு "பொட்டம்மானின் ஆட்கள்" எண்டு செய்தி போட்டிருந்தது. இதுவும் களிமண் ரக செய்தி தானோ தெரியாது.

**நா**டே ஒரு நாள் இருட்டடிப்புக்கு உள்ளானதல்லோ? இருட்டடிப்புக்கான காரணத்தை உடன் அறிய முடியாத தலைநகர் அரசியல் வாதிகள் சிலர் வீடுகளை விட்டு மெல்ல நழுவி ஓடத் தொடங்கினவையாம். வெளிச்சம் சம்பந்தப்பட்ட அதிகாரமுடையவருக்கும் காரணத்தை உடன் கண்டறிய முடியேல்லையாம்.

**வி**யதானவர்கள் பாடு பாதுகாப்பு காரணங்களுக்காக நெருக்கடிக்குள்ளாகியிருக்குப் பாருங்கோ. என்ன விசயம் எண்டால், எச்சில் துப்ப சிரட்டையிலை மணபோட்டு வைச்சா பிள்ளைகள் அதை தூக்கி எறிஞ்சு போடுதுகளாம். துப்புவானேன், துப்புத் துலக்கலுக்கு உள்ளாவானேன் எண்டு பிள்ளையள் செல்லுறதிலையும் நியாயம் இருக்கல்லோ பாருங்கோ!

**ஈ**யடிச்சான் கொப்பி எண்டால் என்னெண்டு தெரியும்தானே. சில 'கத்தரிகைகள்' முரசைப் பார்த்து ஈயடிக்கத் தொடங்கியிருக்கினம். உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் நம்மூர் கத்தரிகையாளர்கள் சிலர் முரசு முன்பக்கம் நாலுகோடு போட்டா தாங்களும் எண்ணி நாலுகோடு போடுவதில் தொடங்கி ஈயடிக்கினம். எல்லாம் முரசுக்கு கிடைச்சிருக்கிற அமோக மதிப்பின் அடையாளம்தான் பாருங்கோ.

கவிஞர் வாலி எழுதிய கவிதை ஒன்றில் இருந்து 'நச்' என்று குத்தும் வரிகள்.

"மரம்
பட்டை உரிக்கிறது.
பாம்பு
சட்டை உரிக்கிறது.
தன்னைப்-
புதுப்பித்துக் கொள்ளப்
பிரியப்படாதவன்
மனிதன் மட்டுமே."

# கூட்டணி உருவாக்கிய ஆயுதப்படை

## நம்பிக்கை இல்லை

ஏற்கெனவே ஐக்கியப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ், ரெலோ 'அமைப்புக்களோடு இணைய வேண்டும் என்ற அழைப்பை பிரபாகரன் ஏற்றுக்கொண்டார்.

ஆனாலும் ஈரோசிலோ, ரெலோவிலோ பிரபாவுக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீது ஏற்பட்ட நல்லெண்ணம் காரணமாகவே ஐக்கிய முயற்சிக்கு பிரபா உடன்பட்டார்.

இதற்கிடையே நடைபெற்ற சுவார சியமான நிகழ்வொன்றைக் கூறிவிட்டு ஐக்கிய முயற்சி பற்றி தொடருகிறேன்.

பாரதப் பிரதமர் இந்திராகாந்தி இயக்கங் களை விட தம்மையே அதிகம் நம்புவ தாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூறித் திரிந்தனர்.

அமுதரின் இல்லத்தில் ஒரு புகைப்படம் இருந்தது. இந்திராவை அமுதர் சந்தித்த போது எடுக்கப்பட்ட புகைப்படமே அது. அழகாக ஃபிறேம் போட்டு அதனை வைத் திருந்தார்.

இந்திய அரசும், மிதவாதத் தலைவர் கள் என்ற வகையில் கூட்டணியை ஆரம் பத்தில் தட்டிக்கொடுத்து வந்தது.

இயக்கங்கள் தமது சொற்படி நடக்கா விட்டாலும் கூட்டணியினர் தாம் சொல்வதை கேட்கக்கூடியவர்கள் என்று இந்திய அரசு நினைத்திருக்கலாம்.

இந்த நேரத்தில் தான் அமுதருக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

இந்தியா இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுப்பதால் குறிப்பிட்ட இயக்கங்கள் பலமாகிவிடும். ஆயுதங்களும் பெற்றுக்கொண்டு எதிர்காலத்தில் கூட்டணிக்கு மேலும் சவாலாகிவிடலாம்.

எனவே-கூட்டணிக்கும் ஒரு ஆயுதப் படையை உருவாக்குவதுதான் புத்திசாலித் தனம் என்று அமுதர் நினைத்தார்.

## இளைய மகன் தலைவர்

அமுதருக்கு இரண்டு பிள்ளைகள். அதில் காண்டீபன் இலண்டனில் அரசியல் புகலிடம் பெற்றிருந்தார் . இளைய மகன் பகீரதன் அமுதரோடு இருந்தார்.

பகீரதனை தலைவராக வைத்து கூட்டணியின் ஆயுதப்படையை உருவாக்கத் திட்டமிடப்பட்டது.

இந்தியா கூட்டணிக்குத் தான் பெரும் உதவிகளை செய்யப்போகிறது என்று கூறி பகீரதனும் சிலரும் சேர்ந்து இளைஞர்கள் சிலரை திரட்டினார்கள்.

இயக்கம் என்று இருந்தால்தானே இந்தியா பயிற்சி கொடுக்கும்;

'அகிம்சையே எங்கள் மூச்சு; ஆயுதங் களை தூர வீசு' என்பதுபோலப் பேசிய கூட்டணியின் பெயரில் பயிற்சி பெறுவதோ, ஆயுதம் கேட்பதோ நன்றாகவா இருக்கும்? இருக்காதல்லவா?

அதனால் பகீரதனின் தலைமையிலான ஆயுதக் குழுவுக்கு தமிழீழ தேசிய விடுதலை இராணுவம் (ரெனா) என்று பெயரிடப் பட்டது.

## கிடைத்தது அடி

தமிழ்நாட்டில் ஒரு முகாம் அமைத்து இளைஞர்களை வைத்திருந்தார்கள்.

பயிற்சி முகாம் என்று பெயர்தானே தவிர பயிற்சியும் இல்லை; ஆயுதங்களும் இல்லை இந்திய பயிற்சிக்கு அனுப்பப் போவதாகக் கூறிக் கொண்டிருந்தார்களே தவிர அனுப்புவதாகத் தெரியவில்லை.

இன்று போகலாம், நாளை போகலாம் என்று நாட்களைக் கடத்தினார் பகீரதன். பொறுத்துப் பார்த்து வெறுத்துப்போன இளைஞர்கள் முகாமில் பொறுப்பாக இருந்தவரை அடித்துப் போட்டு விட்டு முகாமை விட்டு வெளியேறிச் சென்று விட்டார்கள்.

அந்த அடியோடு தமிழீழ தேசிய இராணுவம் (ரெனா) இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

கூட்டணியின் ஆயுதப்படை கட்டும் முயற்சி -'சீச்சி. இந்தப் பழம் புளிக்கும்' கதையாக மாறிப்போனது.

காந்தீயவாதிகள் கத்தி எடுக்க நினைத் தார்கள். ஆனால் முயற்சி சித்தியடை யவில்லை.

இனி-ஐக்கிய முயற்சிக்கு செல்வோம்.

## சிறீயைக் கொல்ல சதி?

பிரபாகரன் ரெலோ-ஈரோஸ் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. அதுபோல ரெலோவுக்கும் புலிகள் மீது நம்பிக்கையோ நல்லெண்ணமோ இருக்கவில்லை.

# இயக்க மோதலைத் தவிர்க்க பிரபா கூறிய யோசனை

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

**அற்புதன் எழுதுவது**

**அரசியல் தொடர்**

**26**

ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினத்தை கொல்வதற்கு பிரபாகரன் சதி செய்தார் என்று அப்போதுதான் ரெலோ குற்றம் சாட்டிக் கொண்டிருந்தது.

இக் குற்றச்சாட்டுக்கு காரணமான சம்பவம் பற்றியும் கூறவேண்டும்.

1984 இன் ஆரம்பத்தில் ரெலோவுக்குள் உள் முரண்பாடுகள் ஏற்பட்டன. ரெலோவின் இரண்டாம் கட்ட தலைமையில் இருந்த உறுப்பினர்கள் சிறீ சபாரத்தினத்தை கடுமையாக விமர்சனம் செய்தனர்.

அரசியல் ரீதியாக இயக்கத்தை வழி நடத்தாமல் இராணுவவாதக் கண்ணோட்டத் தோடு சிறீ செயற்படுவதாக அவர்கள் கூறினார்கள்.

உள் இயக்க பிரச்சனையில் ஈடுபட்ட வர்கள் பிரபாகரனிடம் உதவி கோரினார்கள்.

### பிரபா உதவி

இதனைத் தொடர்ந்து ரெலோ ஒரு அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில் பின்வரும் தகவல்கள் இருந்தன:

05.05.84 அன்று ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினத்தை கொலை செய்ய திட்ட மிடப்பட்டது.

பிரபாகரனிடமிருந்து கைத்துப்பாக்கியும், குளோரஃபோம் போத்தலும் பெற்றுக்கொண்ட ரெலோ உறுப்பினர்கள் சிறீ சபாரத்தினத்தை கடத்திச் செல்ல திட்டமிட்டனர்.

இதனை ஏற்கெனவே அறிந்து கொண்ட சிறீ சபாரத்தினம் தனது இருப்பிடத்தை மாற்றிக்கொண்டார்.

மீண்டும் 09.05.84 அன்று ரெலோ இயக்கத்தினர் சிலர் தமது தலைவரைக் கொல்ல சதித்திட்டத்தோடு காத்திருந்தார்கள்.

அந்தத் திட்டத்தையும் முறியடித்து சதித்திட்டம் போட்ட உறுப்பினர்களை சிறீ சபாரத்தினத்தின் விசுவாசிகள் கைது செய்தனர்.

ரெலோவின் பாதுகாப்பில் இருந்த சிறீ சபாரத்தினத்தின் விரோதிகள் 16.06.84 அன்று அதிகாலை புலிகளின் உதவியோடு தப்பிச்சென்றனர்.

சிறீ சபாரத்தினத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்தவர் வரதன் என்னும் உறுப்பினர்.

அந்த வரதனும் புலிகளோடு இரகசியத் தொடர்பு வைத்திருந்தார். அவரது தகவலின் படியே ரெலோவின் மறைவிடத்தில் புலிகள் புகுந்தனர். சிறீயைக் கொல்ல முயன்றவர் களை மீட்டுச் சென்றனர்.

இதுதான் ரெலோ சார்பாக வெளியே சொல்லப்பட்ட தகவல்கள்.

இச் சம்பவத்தின் பின்னர் ரெலோவும் புலிகளும் விரோத நிலைப்பாட்டில் இருந்தனர்.

இதனால் ஒற்றுமை முயற்சிக்கு பிரபா உடன்பட்டபோதும் ரெலோ குறித்து சந்தேகம் கொண்டிருந்தார்.

### முதல் சந்திப்பு

அதனால் மூன்று இயக்கப் பிரதிநிதி களையும் சந்திப்பதற்கு தனது சார்பில் அன்ரன் பாலசிங்கத்தையும், இராசநாய கத்தையும் அனுப்பிவைத்தார். (இராசநாயகம் முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர வைத் தலைவர்)

கோடம்பாக்கத்தில் இருந்த ஈ.என்.எல்.எஃப் அலுவலகத்திற்கு அவர்கள் இருவரும் சென்றனர்.

மூன்று இயக்கங்கள் ஒன்று பட்டு ஈ.என்.எல்.எஃப் கூட்டமைப்பு உருவாகியது ஏப்ரல் 1984இல், புலிகள் கூட்டமைப்போடு பேச வந்தது மார்ச், 23. 1985இல்.

"ஒற்றுமை முயற்சி என்றால் இயக்கத் தலைவர்கள் கலந்துகொள்வதுதான் முறையாக இருக்கும். அதனால் பிரபாகரன் கூட்டத்திற்கு வரவேண்டும்" என்று ஈரோஸ் சார்பாக வே.பாலகுமார் கருத்துத் தெரிவித்தார்.

"தம்பி (பிரபா) வருவதில் பிரச்சனை கிடையாது. பாதுகாப்புக் காரணம் கருதி பொது இடத்தில் சந்திப்பை வைத்துக் கொள்ளலாம்."

என்று அன்ரன் பாலசிங்கம் கூறினார். சென்னையில் இருந்த பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டல் 'பிரசிடென்சி'.

நான்கு இயக்கத் தலைவர்களும் 'பிரசிடென்சி' ஹோட்டலில் சந்திப்பதற்கான ஒழுங்கு செய்யப்பட்டது.

ரெலோ சார்பில் சிறீசபாரத்தினம், மதி, ஈ.பி.ஆர்.எல்.எஃப் சார்பில் பத்மநாபா, குணசேகரன், ரமேஷ், ஈரோஸ் சார்பில் பாலகுமார், முகிலன், புலிகள் சார்பில் பிரபாகரன், இராசநாயகம், அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் சந்திப்பில் கலந்து




சென்னை 'பிரசிடென்சி' ஹோட்டலில் நடந்த சந்திப்பின்போது எடுக்கப்பட்ட புகைப்படம்
இடமிருந்து வலம்-பிரபா-பாலகுமார்-பத்மநாபா-சிறீ

கொண்டனர்.

**1985 ஏப்ரல் 10ம் திகதி முக்கியத்துவம் வாய்ந்த அந்த சந்திப்பு நடைபெற்றது.**

பேச்சு ஆரம்பித்தவுடன் பிரபாகரன் முதலில் எழுப்பிய கேள்வி இது:

"உருவாகப்போவது தமிழீழமா? ஈழமா? கூட்டமைப்புக்கு ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்று பெயரிட்டுள்ளீர்கள். நாமும் ரெலோவும் தமிழீழம் என்றுதான் கூறிவருகின்றோம். அதனால் கூட்டமைப்பு பெயரை மாற்றினால் என்ன?"

அதற்கு வே.பாலகுமார் பதிலளித்தார். "நாமும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்பும் ஈழம் என்றுதான் கூறிவருகிறோம். ரெலோவுக்கும் பெயர் ஒரு பிரச்சனை இல்லை."

இந்த இடத்தில் குறுக்கிட்ட பத்மநாபா, "எமக்கு பெயர் ஒரு பிரச்சனையல்ல. ஐக்கியம்தான் முக்கியம். கூட்டமைப்பு பெயரை மாற்றுவது என்றாலும் பிரச்சனை யில்லை."

என்று கூறிவிட்டார். இதனை எதிர்பார்க்காத பாலகுமார் சொன்னது இது;

"ஈ.பி.ஆர்.எல்.எஃப்பிற்கு பெயர் ஒரு பிரச்சனையில்லாமல் இருக்கலாம். நாங்கள் ஈரோஸ் அப்படி சொல்ல முடியது. நான் எனது ஆட்களோடு பேசிவிட்டுத்தான் முடிவு சொல்ல இயலும்."

பெயர் பிரச்சனைக்கு தீர்வு காணும் வரை ஈ.என்.எல்.எஃப் - விடுதலைப்புலிகள் சந்திப்பு என்று கூட்டறிக்கை விடுவதாக முடிவு செய்யப்பட்டது.

### பிரபா சொன்னவை

அதனைத் தொடர்ந்து பிரபா சில கருத்துக்களைத் தெரிவித்தார்.

"சரவணன், மைக்கேல் போன்றவர் களை நான் சுட்டது உண்மைதான். ஆனால் இயக்க முடிவின்படி தான் செய்தேன். உமா, நாகராசா எல்லோரும் உடன்பட்டுத்தான் அந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. இப்போது நான் தன்னிச்சையாகச் செய்ததாகக் கூறுகிறார்கள்.

"கட்டுப்பாட்டை மீறினால் தண்டிப்பது பிழையல்ல. இப்போது கூட என்னை பெடியள் விலகிப் போகலாம். ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, பிரச்சனை இல்லாமல் போனால் அனுமதிப்பேன்.

"ஆயுதங்களோடு போனால் விடமாட்டேன். இயக்கத்தை விட்டு வெளியேறி வேறு இயக்கங்களுக்கு போனால் அதனால் பிரச்சனை வரும்.

"என்னோடு இருந்த ஒருவர் உங்களோடு சேர வந்தால் நீங்கள் சேர்க்கக்கூடாது. உங்களோடு இருக்கும் ஒருவர் என்னோடு சேரவந்தால் நானும் சேர்க்க மாட்டேன்.

இப்படியான அணுகுமுறை இருந்தால் இயக்கப் பிரச்சனைகள் வராது. என்னோடு இருந்து விலகி வந்தவரை நீங்கள் சேர்த்தால் அவர் எங்களைப் பற்றி தவறாகப் பேசும்போது நாங்கள் பிடிக்க வேண்டிவரும். அல்லது உங்களோடு இருந்தவர் எங்களிடம் வந்து இருந்துகொண்டு உங்களைப் பற்றி தவறாக கதைத்தால் நீங்கள் பிடிக்க வருவீர்கள். ஏன் இந்த தேவையற்ற பிரச்சனை.

**"நாங்கள் நான்கு இயக்கங்களும் ஒருவரிடமிருந்து விலகுபவரை இன்னொருவர் சேர்ப்பதில்லை என்ற முடிவுக்கு வரவேண்டும்."**

"பிரபா அவ்வாறு சொன்னவுடன் அதனை பத்மநாபா மறுத்துப் பேசினார்.

"இயக்க உறுப்பினர்களுக்கு ஜனநாயக உரிமையை மறுக்க முடியாது. விலகவும், விரும்பிய இயக்கத்தில் சேரவும் அவர்களுக்கு உரிமை உண்டு."

என்று வாதிட்டார் பத்மநாபா. ரெலோவும், ஈரோசும் அதனை ஏற்றுக் கொண்டன.

பிரபாவின் கருத்து சரியானது என்று கூட்டம் முடிந்தவுடன் பத்மநாபாவிடம் கூறினார் ரமேஷ். எதிர்காலத்தில் இயக்கப் பிரச்சனைகளை தவிர்க்கலாம். பிரபா சொன்ன கருத்தை ஏற்று அதனை ஒரு முடிவாக எடுக்கலாம் என்பது ரமேஷின் கருத்தாக இருந்தது. எனினும் பத்மநாபா அதனை ஏற்கவில்லை.

1985ல் பிரபா சொன்ன கருத்து அது. தற்போது 95ம் ஆண்டு.

இந்த இடைப்பட்ட பத்து வருட காலத்தில் ஒரு விடயம் தெளிவாகியிருக்கிறது.

எந்த ஒரு இயக்கத்திலும் முக்கிய பொறுப்பில் இருந்துவிட்டு விலகி வேறு இயக்கத்தில் சேர்ந்தவர்கள் தாமும் உருப்பட்டதில்லை. தாம் சேர்ந்த இயக்கங் களையும் உருப்படவிட்டதில்லை. மாறாக இப்படியானவர்களால் இயக்கங்கள் மத்தியில் ஏற்பட்ட கசப்புக்களே மிஞ்சியிருக்கின்றன.

### கோவையும்-பிரபாவும்

கூட்டணியில் முக்கியமானவராக இருந்தவர் கோவை மகேசன். சுதந்திரன் பத்திரிகை ஆசிரியராக இருந்து அவர் எழுதிய எழுத்துக்கள் எழுச்சியை விதைத்தன.

பின்னர் கூட்டணியோடு அவர் முரண் பட்டு தமிழீழ விடுதலை அணியை உருவாக் கினார். இது பற்றி முன்னரே விளக்கமாக கூறி இருந்தேன்.

கோவை மகேசனுக்கு பிரபாகரனில் நல்ல பிரியம் இருந்தது. கோவை மகேசன் மீது பிரபாவுக்கும் ஒரு பிடிப்பு நிலவியது.

தமிழ் நாட்டில் இருந்த கோவை மகேசன் கஷ்ரப்பட்டார். அவருக்கு உதவி செய்தார் பிரபாகரன். கோவை மகேசன் பிரபாவின் உதவியோடு 'வீரவேங்கை' என்ற பத்திரி கையை சென்னையில் இருந்து ஆரம்பித்தார்.

அப்போது புலிகள் அமைப்பினர் 'விடுதலைப் புலிகள்' என்னும் பத்திரிகையை வெளியிட்டு வந்தனர்.

பிரபா நினைத்திருந்தால் கோவை மகேசனை 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையை பொறுப்பேற்றுச் செய்யுமாறு கூறியிருக்கலாம். இயக்கத்திலும் அவரை சேர்த்திருக்கலாம்.

ஆனால் செய்யவில்லை. கோவை மகேசன் நல்லவராக இருக்கலாம், தமிழீழ விடுதலை உணர்ச்சி மிகுந்தவராக இருக்கலாம்-ஆனால் இயக்க கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடக்கக்கூடியவரல்ல. தவிர அவரை கட்டுப்படுத்துவதிலும் சங்கடங்கள் ஏற்படும்.

அதனை உணர்ந்தே கோவை மகேசனுக்கும் இயக்கத்திற்கும் இடையே கௌரவமான ஒரு இடைவெளி வைத்துக் கொண்டார் பிரபா.

எவரை- எங்கே- எந்த இடத்தில் வைத்து பயன்படுத்துவது என்ற நுட்பம் தலைமைத் துவத்திற்கு தேவை. அதுவும் ஆயுதப் போராட்ட சூழலில் மிகவும் முக்கிய தேவை.

### பரா-பாலகுமார்

இன்னொரு உதாரணம் கூறுகிறேன்;

ஈரோஸ் அமைப்பை கலைத்துவிட்டதாக கூறிவிட்டு வே.பாலகுமார், பரராஜசிங்கம் போன்றோர் புலிகளோடு சேர்ந்தனர்.

பராவுக்கோ, பாலகுமாருக்கோ இயக்க உறுப்பினர்களை ஆளுமை செய்யும் பொறுப்பு எதனையும் பிரபா கொடுக்க வில்லை.

பாராவை அவரது திறமைக்கு ஏற்ப சிவில் நிர்வாகப் பொறுப்பு கொடுத்து தனது நேரடி கண்காணிப்பில்தான் பிரபா வைத்திருக்கிறார். இயக்க உறுப்பினர்களுக்கு பரா கட்டளை போட முடியாது.

இதிலிருந்து தெரிவது பிரபா 85இல் தெரிவித்த கருத்தில் இன்றுவரை அவரிடம் மாற்றம் இல்லை என்பதுதான்.

இப்போது மீண்டும் ஒற்றுமை முயற்சி கட்டத்திற்கு செல்லலாம்.


### ஓடிவந்த உறுப்பினர்

'பிரசிடென்சி ஹோட்டலில்' சந்திப்பு முடிந்து பிரபா விடைபெற்றுச் சென்றார். அவரோடு பேசியபடி சென்ற பத்மநாபாவும் மற்றவர்களும் தமது காரில் ஏற ஆயத்தமானபோது ஈரோஸ் உறுப்பினர் ஒருவர் ஓடிவந்தார்.

(தொடர்ந்து வரும்)

# அடி விழுந்தது

அலசுவது– இராஜதந்திரி



# இராணுவ முஸ்தீபுகளுக்கே தவிர அரசியல் அணுகு முறைகளுக்கல்ல!

இராணுவ ரீதியாக அரசாங்கம் மீது எல்.ரி.ரி.ஈயினர் பலத்த நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கக் காணப்படுகின்றனர்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்ததையடுத்து இடம்பெற்ற மோதல்கள் இலங்கையின் முப்படையினருக்கும் பலத்த இழப்புக்களை உண்டுபண்ணியுள்ளன.

இந்நிலையில் முப்படைகளின் பிரதம தளபதி என்ற பொறுப்பைக் கொண்டுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கக் காணப்படுகின்றார். வடக்கு-கிழக்கு பிரதேசம் கடந்த பத்துவருடகாலமாக கெடுபிடி யுத்தத்துக்குள்ளாகியுள்ளது. இந்த யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து நிரந்தர சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்துவது என்ற வாக்குறுதியுடனேயே சந்திரிகா அரசு சிம்மாசனம் ஏறியது.

ஆயினும் எதிர்பார்த்ததைப்போல உறுதியான முறையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையில் சந்திரிகா அரசு காணப்படுகின்றது.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியனவற்றில் பெருவெற்றியீட்டிய ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளை முதன்மைப்படுத்தி எல்.ரி.ரி.ஈயினருடன் பேச்சுக்களை ஆரம்பித்திருந்தார்.

இருந்த போதிலும் அப்பேச்சுகள் மூலம் இரு சாராருக்குமிடையே மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மட்டும் மேற்கொள்ளப்பட்டதே தவிர வேறெதும் உருப்படியாக இடம் பெறவில்லை. இம்மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில் நிலைமை தற்போது மிக மோசமான கட்டத்தை எட்டியுள்ளது.

இத்துடன் வெடித்த மோதல் ஈழப்போர்-3 என்று வர்ணிக்கப்படுகின்றது.

திருமலைக் கடலில் இரு பீரங்கிப்படகுகளை எல்.ரி.ரி.ஈயினர் தகர்த்ததுடன் கிழக்கே இராணுவத்தினர் மீதும் தாக்குதல்களை நடத்தி பாரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து வடக்கே இரு விமானப்படை 'அவ்ரோ' போக்குவரத்து விமானங்களையும் எல்.ரி.ரி.ஈயினர் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

வடக்கே சுடப்பட்ட விமானங்களில் படையினர் மட்டும் கொல்லப்படவில்லை. மூன்று பத்திரிகையாளர்களும் கொல்லப்பட்டமை மிகவும் வேதனையளிப்பதாக இருக்கின்றது.

அம்மூன்று பத்திரிகையாளர்களும், வடக்கே பலாலி விமானத்தளத்தில் முதலில் வீழ்ந்து நொருங்கிய விமானம் குறித்த தகவல்களைச் சேகரிப்பதற்காகச் சென்று கொண்டிருந்த போதே அனர்த்தத்துக்குள்ளாகி மரணத்தைத் தழுவினர்.

இன்றைய யுத்தத்தில் ஆயுதமேந்திப் போராட்டங்களில் குதித்துள்ளவர்கள் மட்டுமல்ல, அப்பாவி மக்களும் பெருமளவில் உயிரிழக்கின்றனர் என்பதைப் புலப்படுத்துவதாகவே இம் மூன்று பத்திரிகையாளர்களின் மரணங்களும் விளங்குகின்றன.

வடக்கு-கிழக்கு யுத்தம் இன்றுவரை முப்பதினாயிரத்துக்குமதிகமான மக்களைக் கொன்றுள்ளது. இது தவிர பல கோடிக்கணக்கான பெறுமதியுள்ள சொத்துக்கள், உடமைகள் என்பனவும் இக் கொடிய யுத்தத்தில் நாசமாகியுள்ளன.

கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக நீடித்துவரும் இந்த யுத்தத்தின் நாசகாரத்தன்மையை ஜனாதிபதி சந்திரிகா நன்குணர்ந்திருக்கக்காணப்படுகின்றார்.

தமது கணவர் விஜயகுமாரதுங்க உயிர் வாழ்ந்த நாட்களில் அவருடன் சேர்ந்து வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு எதிராக சந்திரிகா குரல் கொடுத்திருந்தார்.

அமரர் விஜயகுமாரதுங்க யாழ்குடா நாட்டுக்கு ஒரு சமாதானத் தூதராகச் சென்று யுத்தம் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். அத்துடன் தென்னிந்தியாவுக்கும் சென்று அப்போது அங்கு அஞ்ஞாத வாசம் மேற்கொண்டிருந்த தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் தலைவர்களையும் விஜயகுமாரதுங்க சந்தித்தார். அச்சந்திப்புகளின் போது சந்திரிகாவும் அன்று உடனிருந்தார்.

தமிழ் ஆயுதப் போராட்டக் குழுக்கள், தாம் ஏன் போராடுகிறோம், தமது நோக்கமென்ன என்று விஜயகுமாரதுங்க தம்பதிக்கு அன்று எடுத்துரைத்திருந்தனர். அப்போது அவற்றைச் செவிமடுத்து தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்; வடக்கு-கிழக்கில் மனிதாபிமான ரீதியில் அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டுமென்று விஜயகுமாரதுங்க குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இன்று விஜயகுமாரதுங்க உயிருடனில்லை. அவர் வாழ்ந்த காலத்தில் வடக்கு-கிழக்கு யுத்தம் அதன் ஆரம்பக் கட்டங்களிலேயே இருந்தது.

எனவே அன்று அந்த ஆரம்ப நிலையிலிருந்த யுத்தத்தையே முற்றிலுமாக நிராகரித்து அப்போது வடக்கு-கிழக்கில் காணப்பட்ட மனிதாபிமானமற்ற சூழ்நிலைகளுக்கெதிராக விஜயகுமாரதுங்க குரல் கொடுத்திருந்தார்.

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு மனிதாபிமானத்தின் அபடிப்படையில் அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டுமென்பதே விஜயகுமாரதுங்கவின் வலியுறுத்தலாக இருந்தது.



## சமாதானப் பேச்சுக்களை அரசு மீண்டும் ஆரம்பிக்கவேண்டியது அவசியமாகிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் ஒத்துழைக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

விஜயகுமாரதுங்க வடபகுதிக்கு விஜயம் செய்திருந்த காலப்பகுதியில் யுத்த நிலவரம் படிப்படியாக ஆரம்பித்திருந்த போதிலும், மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடோ அல்லது பற்றாக்குறையோ இருக்கவில்லை.

மின்சாரம் இருந்ததுடன், வடக்கிற்கும் தெற்கிற்குமிடையிலான போக்குவரத்துக்கூட இன்றிருப்பதை விட சுமுகமானதாக இருந்தது.

ஆனால் இன்று அனைத்துமே தாறுமாறாகவும், தலைகீழாகவும் இருக்கக்காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு மக்களின் நாளாந்த வாழ்க்கை நாசமாகிப்போயுள்ளதுடன், பிரச்னைக்கான தீர்வென்பது சாத்தியப்பட்டு வராததொன்றாகவே இருக்கின்றது.

இந்நிலையில் இன்று விஜயகுமாரதுங்க உயிருடனிருந்திருப்பாரானால் நிச்சயம் வடபகுதி மக்களின் மனிதாபிமானப் பிரச்னைகள் முதலில் தீர்க்கப்பட்ட பின்னரே அரசியல் அணுகுமுறைகள் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பார் என்று கருத முடியும்.

பொருளாதாரத் தடை, இராணுவ முகாம்களின் விஸ்தரிப்பு, மின்சாரத்துண்டிப்பு என்பன அனைத்துமே அன்றைய ஆட்சியாளர்களால் அன்று நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டவையாகும்.

இன்று வடக்கு-கிழக்கில் நிலவுகின்ற இன்றைய சூழ்நிலைகளுக்கு அன்றைய ஆட்சியாளர்களே பொறுப்பாளிகளாவர்.

அரசியல் அணுகுமுறைகளை விடுத்து, வடக்கு-கிழக்குப்பிரச்னையை இராணுவ மயப்படுத்தியவர்களும் அவர்களே.

சந்திரிகா, முன்னைய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட கெடுபிடி நிலைமைக்கு எவ்வகையிலும் பொறுப்பாளியல்ல. இருந்த போதிலும் அக்கெடுபிடிகளை நீக்காதவரை, அல்லது அவற்றை அகற்றுவதற்கான தகுந்த அணுகுமுறைகளை மேற்கொள்ளாதவரை நிறைவேற்றதிகாரத்தைக் கொண்டவர் என்ற ரீதியில் ஜனாதிபதி சந்திரிகா இன்றைய வடக்கு-கிழக்கின் கெடுபிடி நிலவரத்துக்குப் பொறுப்பேற்க வேண்டியவராகின்றனர்.

எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரன் அண்மையில் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில், "வடக்கு-கிழக்கு நெருக்கடி தொடர்பாக வெறுமனே வாக்குறுதிகளை மட்டுமே வழங்கியிருந்தாரே தவிர,அந்த வாக்குறுதிகளை சந்திரிகா நடைமுறைச் சாத்தியமாக்குவதில் தாமதத்தை காட்டியிருந்தார்" என்று தெரிவித்திருந்தார்.

வடக்கு-கிழக்குப் பிரதேசம் ஒரு முற்றுமுழுதான தீர்வையே எதிர்பார்த்திருக்கின்றதே தவிர, அரைகுறையான-அரைவேக்காடான தீர்வு எதனையும் எதிர்பார்க்கவில்லை.

கடந்த பத்து வருட காலத்தில் தமது பொலிவு, பொறுமை அனைத்தையும் இழந்து விரக்தியின் விளிம்பில் வாழ்ந்து வரும் வடக்கு-கிழக்கு மக்களுக்கு விடிவென்பது விரைந்து வரவேண்டியதாக இருக்கின்றது.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்போது அரசியல் அணுகுமுறைகள் முன்னெடுக்கப்படும், சமாதானமே முடிந்த முடிவு என்றெல்லாம் சந்திரிகா ஆட்சியாளர்கள் முழக்கமிட்டனர்.

ஆனால் அரசியல் தீர்வையும், சமாதானத்தையும் நோக்கி மிக மெதுவாக நகர்ந்ததுடன், தாமதமாகவே ஆட்சியாளர்கள் முடிவுகளையும் எடுத்து வந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் ஒரு பலம்மிக்க ஆயுதப் போராட்ட அமைப்பாக இருந்து வருகின்றனர். இப்பலம் என்பது, வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வு தொடர்பாக முக்கிய தீர்மானங்களை எடுக்கும் தகுதியையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கக் காணப்படுகின்றது.
இந்நிலையில் வடக்கு-கிழக்கில் கப்பல்களைக் கவிழ்த்தும், விமானங்களைச் சுட்டுவீழ்த்தியும், இராணுவ முகாம்களைத்தாக்கியும் இராணுவ ரீதியாக தமது வல்லமையை உணர்த்தியிருக்கும் எல்.ரி.ரி.ஈயினர் அரசியல் ரீதியான அணுகுமுறைகளில் அரசாங்கத்தை மட்டும் தங்கியிராது, தமது பங்களிப்பையும் பலப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகின்றது.

1958ம் ஆண்டிலும் தொடர்ந்து 1977ம் ஆண்டு, 1983ம் ஆண்டுகளில் தமிழ் பேசும் மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனரீதியான அடாவடித்தனங்கள், மற்றும் 1983ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக தமிழ் பேசும் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ ரீதியான அடக்கு முறைகள் என்பனவே, வடக்கு-கிழக்கில் ஆயுதரீதியிலான போராட்டத்துக்கு வழிவகுத்தன.

தமது பாதுகாப்பு, தாம் வாழும் பிரதேசத்தின் பாதுகாப்பு ஆகியனவற்றை உறுதிசெய்யும் வகையிலேயே தமிழ் பேசும் மக்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் இராணுவ ரீதியிலான அணுகுமுறைகள் இருக்கும் வரை மறுபுறத்தே ஆயுதபாணிகளாக இருப்பவர்கள் தமது ஆயுதங்களை கீழே வைத்து விட்டு சரணாகதியடைவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

ஜனாதிபதி சந்திரிகா கூட எல்.ரி.ரி.ஈயினரின் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொண்ட நிலையிலேயே அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வந்திருந்தார்.

எனவே இராணுவ ரீதியிலான அழுத்தங்கள், விஸ்தரிப்புகள் இருக்கும்வரை, எல்.ரி.ரி.ஈ.யினர் ஆயுதப் போராட்டத்தை கைவிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

அரசின் ஒவ்வொரு நடவடிக்கையையும் அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கவே செய்வர்.

எனவே தற்போது தொடரப்பட்டுள்ள யுத்தம் அரசின் இராணுவ அணுகுமுறைகளுக்கெதிரானதே தவிர, அரசியல் அணுகுமுறைகளுக்கெதிரானதல்ல என்பதனை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

இந்நிலையில் மீண்டும் அரசியல் அணுகுமுறைகளையே அரசு முன்னேடுக்க வேண்டியது அவசியமானதாகின்றது. இதற்கு எல்.ரி.ரி.ஈயினரும் முழுமனதுடன் ஒத்துழைக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

தருவது

ரசிகன்



# இரும்புமனிதனின் இறுதி நாட்கள்

இத்தாலியின் சர்வாதிகாரியாக இருந்தவன் முசோலினி. அவன் பெயர் கேட்டால் போதும் இத்தாலிய மக்கள் மூச்சுவிடவே தயங்குவார்கள். அவனது இறுதி நாட்கள் எப்படியிருந்தன என்று அறிய வேண்டாமா? அறிவோமே!

முசோலினியின் முகத்தில் இதற்கு முன் இப்படியொரு சோர்வை கிளாரா பார்த்ததே இல்லை.

கிளாரா அழகானவள். சர்வாதிகாரி இரும்பு மனிதன் என்றெல்லாம் பேசப்பட்ட முசோலினியின் இதயத்தை தன் வசீகரத்தால் வளைத்துப் போட்டவள். வசமாக்கிக் கொண்டவள். கிளாரா முசோலினியின் துணைவி.

"கிளாரா! என் நாட்கள் எண்ணப் படுகின்றன."

என்றான் பிசிறடித்த குரலில் முசோலினி.

கிளாரா கண் கலங்கினாள்.

"நோ! வெற்றி தோல்வி வீரனுக்கு சகஜம். நீங்கள் இணையற்ற வீரர். தற்காலிகம் இந்தத் தோல்வி. வெற்றிச் செய்தி விரைவில் வரும்!

தைரியம் சொன்னாள். தனக்குள் கிளாராவும் கலங்கினாள்.

கிளாராவை அணைத்து முசோலினி முத்தமிட்டான்.

"அன்பே கிளாரா! இது அனேகமாக என் இறுதி முத்தமாக இருக்கலாம்."

கிளாரா பதில் சொல்வதற்கிடையில் வெளியே காலடிச் சத்தம். முசோலினி தன் முகத்தில் வலிந்து ஏற்படுத்திய மலர்ச்சியோடு வருபவனை எதிர்கொண்டான்.

வந்தவன் முகத்தில் பீதி நிறைந்திருந்தது.

"எல்லாம் போய்விட்டது. 20 ஆண்டுகள் இத்தாலிக்காக நீங்கள் பட்ட கஷ்டம் யாவும் மணலில் கயிறு திரிக்கும் முயற்சியாகி விட்டது."

தொண்டன் கலங்கலாம். தலைவன் கலங்கக்கூடாது. முசோலினி வந்தவனை தைரியப்படுத்தினான்.

"கவலைப்படாதே. உன்னைப் போன்ற விசுவாசிகள் என்னைச் சுற்றி வியூகமாக இருக்கும் போது விரோதிகள் என்னை நெருங்கவா முடியும்?"

"ஆபத்து அருகில் வந்துவிட்டது. அதையுணராமல் பேசுகிறீர்கள். தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள்."

முசோலினி அமைதியாக அவனைப் பார்த்தான்.

"சரி சொல்லு: நான் என்ன செய்ய வேண்டும் இப்போது?"

"இங்கிருந்து முதலில் வெளியேற வேண்டும். இது எதிரிகளுக்கு தெரிந்த இடம்!"

முசோலினி உடன்பட்டான்.

□□

ஜெர்மன் இராணுவ உடைக்குள் முசோலினி தன்னை மறைத்திருந்தான்.

முசோலினியின் காவலர்களும் ஜெர்மன் இராணுவ உடையில் அவரைச் சுற்றி நின்றிருந்தார்கள்.

7 வேன்களில் கிளாராவுடன் முசோலினி உட்பட தப்பிச் சென்று கொண்டிருந்தார்கள்.

வேகமாய்ச் சென்று கொண்டிருந்தன வேன்கள். முசோலினி கிளாராவை திரும்பிப் பார்த்தான். அவள் தன் கண்களால் ஆறுதல் சொன்னாள்.

திடீரென்று வேன்கள் நின்று விட்டன. முசோலினி வெளியே எட்டிப்பார்த்தான்.

ஆயுதங்கள் சகிதம் விவசாயிகள் வழி மறித்து நின்றார்கள்.

விவசாயிகள் மத்தியில் இருந்து ஒருவன் உரத்த குரலில் கட்டளையிட்டான்.

"எல்லோரும் கீழே இறங்குங்கள். நாங்கள் சோதனையிட வேண்டும்."

கதை முடிந்தது என்று நினைத்தார்கள் முசோலினியும் கிளாராவும்.

எதிர்த்துப் போராடக்கூடிய தருணமல்ல, கீழே இறங்கினார்கள்.

எல்லோரையும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தான், கீழே இறங்கச் சொன்னவன். அவன்தான் அந்த விவசாயிகள் குழுவின் தலைவனாக இருக்க வேண்டும்.

கூர்ந்து கவனித்தபடி வந்தவன் கிளாராவை பார்த்ததும் சற்றுச் சந்தேகமாக அவள் முகத்தில் தன் விழிகளை நிலைக்க விட்டான்.

கிளாராவின் இதயம் தட், தட் என்று வேகமாய் பயத்தில் துடித்தது.



கிளாரா



முசோலினி

குழுத் தலைவன் இப்போது கிளாராவை தன் பார்வையில் இருந்து விலக்கிவிட்டு அடுத்ததாக நின்ற முசோலினியை நோக்கினான்.

நோக்கிவிட்டு விழிகளை அகற்றி முசோலினிக்கு அடுத்த இடத்தில் நின்றவனை நோக்கியபோது,

'அப்பாடா தப்பித்தோம்' என்று நினைத்தான் முசோலினி.

அவனது நினைப்பு ஒரு நிமிடம் கூட உயிர்வாழவில்லை.

குழுத் தலைவன் சட்டென்று மீண்டும் முசோலினியை திரும்பி உற்று நோக்கினான்.

தன் ஆட்களை அருகில் அழைத்தான்.

"இவரைப் பார்த்தால் முசோலினி மாதிரி தெரியவில்லையா?"

"ஆம். ம்.ம்.ம்.!"

பல குரல்கள் ஒரே நேரத்தில் எழுந்து வியந்து ஆமோதித்தன.

குழுத்தலைவன் சிரித்தான்.

"உடையை மாற்றினாலும் உங்கள் முகத்தை மாற்றவில்லையே! பயப்படாதீர்கள்! உங்களைக் கொல்வது எங்கள் கொள்கையல்ல."

முசோலினியும் கிளாராவும் காவலர்களும் விவசாயிகள் குழுவால் கிராமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு ஒரு மூன்று மாடிக் கட்டிடம் இருந்தது. அதில் ஒரு தனியறையில் முசோலினியும் கிளாராவும் அடைக்கப் பட்டனர்.

மற்றவர்கள் வேறு அறைகளில் அடைக்கப் பட்டனர்.

"நாளைக் காலையில் நாம் பேசிக் கொள்ளலாம்."

குழுத் தலைவன் முசோலினியிடம் கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

□□

அதிகாலை நாலு மணி. முசோலினி சிறைவைக்கப்பட்டிருந்த கிராமத்துக்குள் புகுந்தது ஒரு படை.

கிராமம் பயந்து பணிந்தது. படைக்கு தலைமை தாங்கிவந்தவன் முசோலினி அடைத்துவைக்கப்பட்டிருந்த மாடிக்கு சென்றான்.

தூங்காத விழிகளோடு முசோலினியும் கிளாராவும் இருந்தனர்.

"என் பெயர் வோல்டர்! உங்களை காப்பாற்றி அழைத்துச் செல்லவே வந்திருக்கிறேன். நம்பினால் என்னோடு இருவரும் வரலாம்."

முசோலினிக்கு எல்லாமே ஒரு கனவு போலத் தெரிந்தது.

பிடிபட்டால் உயிர் பிரியும் என்று நினைத்து கொண்டிருந்தபோது இப்படியொரு வாய்ப்பா?

"நம்புகிறேன்-நம்புகிறோம்."

இருவரும் வோல்டருடன் புறப்பட்டனர். வெளியே தயாராக நின்ற காரில் சிலர் உள்ளே இருந்தனர்.

முசோலினியையும்-கிளாராவையும் காருக்குள் ஏறுமாறு கூறிவிட்டு தானும் ஏறிக் கொண்டான் வோல்டர்.

சீறிக் கிளம்பி உச்ச வேகத்தில் கிராமத்தை ஊடுருவி முன்னேறியது கார்.

கிளாரா மகிழ்ச்சியோடு முசோலினியைப் பார்த்தாள். முசோலினி முகத்திலும் அதே மகிழ்ச்சி!

"நன்றி மிஸ்டர் வோல்டர்! நன்றி மட்டும் நீங்கள் செய்யும் இந்த உதவிக்கு போதாது. ஆனால், தற்போதைக்கு என்னால் தரக்கூடியது நன்றி என்ற வார்த்தை மட்டும்தான்!"

அசனோ கடற்கரைக் கிராமம் நோக்கி கார் விரைந்து கொண்டிருந்தது.

"காரை நிறுத்து!"

என்றான் வோல்டர்.

கடற்கரை காற்று காருக்குள் நுழைந்து அனைவரையும் வருடி சிலிர்க்கவைத்தது.

பொழுது விடியத் தொடங்கியிருந்தது.

"எதிரிகளின் நடமாட்டம் இருக்கிறதா என்று நான் அறிந்து வருகிறேன். நீங்கள் இருவரும் அதுவரை கீழே இறங்கி நில்லுங்கள்"

வோல்டரும் காரை விட்டு இறங்க, அவன் பின்னால் முசோலினியும் கிளாராவும் இறங்கினார்கள்.

"வோல்டர் எங்களால் நீங்கள் ஆபத்தில் சிக்கிக்கொள்ளாதீர்கள்!"

முசோலினி சொல்ல, வோல்டர் விசித்திரமாய் சிரித்தான். தன் கையில் இருந்த துப்பாக்கியை முசோலினிக்கு நேராக நீட்டினான்.

"ஆபத்து எனக்கல்லவே பிரிய சர்வாதிகாரியே! உனக்குத்தான்!"

முசோலினியும் கிளாராவும் ஒன்றாக அதிர்ந்து,

"நீ....நீ...யார்?"

வோல்டர் மீண்டும் சிரித்தான்.

"இத்தாலிய கம்யுனிஸ்ட் கட்சியின் விசுவாசமுள்ள உறுப்பினன்! அதனால் உன் மீது விரோதமுள்ள வாலிபன்!"

"வேண்டாம் எங்களைக் கொல்லாதே!"

"விட்டால் பொதுவுடைக் கொள்கை வாழாதே!"

அவன் துப்பாக்கி விசையை அழுத்தும்போது கிளாரா அலறியபடி குறுக்கே வர,

"உன் உயிர் வேண்டுமானால் விலகு!"

பிடித்து தள்ளிவிட்டு விசையைத் தட்டினான்.

ஆனால், துப்பாக்கி வெடிக்கவில்லை. மீண்டும் விசையை அழுத்த துப்பாக்கி, ஒத்துழைக்க மறுத்தது.

அதைக் கீழே எறிந்தான்.

தன் அருகில் நின்றவனின் துப்பாக்கியை வாங்கினான்.

முசோலினியின் நெஞ்சுக்கு குறி பார்த்துச் சுட்டான்.

"டுமீல்"!

இம்முறை துப்பாக்கி ஒத்துழைத்தது.

இத்தாலிய சர்வாதிகாரியின் உடலை சல்லடை போட்டது.

முசோலினி இரத்தத்தில் மிதக்க, கிளாரா அலறினாள். முசோலினியை நோக்கி ஓடினாள்.

வோல்டர் மிக நிதானமாக கிளாராவை குறிவைத்து வேட்டுக்களைத் தீர்த்தான்.


கிளாராவும் முசோலினி அருகே விழுந்து மூச்சைவிட்டாள். தனிப்பந்தி பொழுது நன்றாகப் புலர்ந் திருந்தது.

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## டின் உணவால் ஆபத்து!



நம் நாட்டில் பட்டினியால் இறப்பவர்களைவிட மிதமிஞ்சிய சாப்பாட்டினால் இறப்பவர்கள் அதிகம்! நம் உடம்புக்கு எவ்வளவு உப்பு தேவையோ அதுபோல இருபது மடங்கு உப்பை நாம் சாப்பிடுகிறோம். அதனால் அதிக இரத்த அழுத்தம், இருதய நோய்கள் ஆகியவை உண்டாகின்றன. டின்களில் அடைக்கப்பட்டு வரும் உணவுகளை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அந்த உணவு கெட்டுப் போகாமல் இருப்பதற்காக அவைகளில் அதிகமான உப்பு சேர்க்கப்படுகிறது.

பச்சை உருளைக்கிழங்கில் இருப் பதைவிட 78 மடங்கு உப்பு உருளைக்கிழங்கு சிப்ஸில் இருக்கிறது!

## பாம்பு விஷம் குடிக்கலாமா?

பாம்பு விஷம் சுத்தமான, ஒட்டும் தன்மையுள்ள, ஒளி ஊடுருவக்கூடிய, மஞ்சள் அல்லது இளம் பச்சையான திரவமாகும். இது சுவையற்ற, மணமற்ற, அமிலத்தன்மை உடைய திரவமாகும். இதில் சில விஷப் பொருட்களும், பாஸ்படேஸஸ், புரோடிஸ், வைரபாலு ரோனய்டாஸ் போன்ற என்ஸைம்களும், துத்தநாகம், செம்பு, கந்தகம் போன்ற தாதுப் பொருட்களும் குறைந்த அளவில் உள்ளன. விஷம் எளிதில் ஜீரணக்கப்படும் தன்மை உடையது. நமது இரத்தத்தில் கலந்தால்தான் தீய விளைவுகள் ஏற்படும். ஆனால் விஷத்தை வாயில் புண்ணோ, காயமோ இல்லாத ஒருவர் குடித்தால், விஷம் செரித்து கழிவுப் பொருளாகி விடும். ஆனால் வாயில் சிறு காயம் அல்லது புண் இருந்தால் விஷம் இரத்தத்தில் கலந்து தீய விளைவுகளை ஏற்படுத்தும்.

பாம்பு விஷம் சிறந்த ஒரு மருத்துவப் பொருளாகும். விஷம் உறைய வைக்கப்பட்டு பவுடராக்கப்பட்டு பலவித நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. இது மிகவும் விலை உயர்ந்ததாகும்.

# சிரிப்போ சிரிப்பு

சிரிப்பானது நம்முடைய காற்றுப்பையில் தொடங்கி ஈரல், இதயம், வயிறு ஆகியவற்றை எல்லாம் குலுங்கி தெம்பு ஊட்டுகிறது. இரத்த நாளங்களில் குருதி துள்ளிக் குதித்து உடல் முழுவதும் பாய்ந்தோடுகிறது.

இதயம் வேகமாய்த் துடிக்கிறது. ஜீரண சக்தி துரிதமாக வேலை செய்கிறது. அதனால் பசி ஏற்படுகிறது. சிரிக்கும் போது கண்களும் அழகு பெறும்.

என்னதான் பெரிய இன்னல் ஏற்பட்ட போதிலும், காந்தியடிகள் சிரித்துக் கொண்டே இருப்பார். அவர் மேலும் "நான் சிரித்து மகிழ்ச்சியோடு இருக்கா விட்டால் எப்போதோ செத்திருப்பேன்" என்று கூறினார்.



சிரிப்பதன் மூலம் துன்பங்களை எல்லாம் விரட்டி விட முடியும். முகலாய பேரரசரான பகதூர்ஷாவின் மனத்தைப் பெரிதும் துன்புறுத்தி அவரை அடிபணிய செய்ய வேண்டும் என்று ஆங்கிலத் தளபதி எண்ணினார். பகதூர்ஷாவின் இரண்டு புதல்வர்களையும் கொன்று அவர்களின் இருதலைகளையும் பீங்கானில் வைத்து மூடி பகதூருக்கு அன்பளிப்பாக அனுப் பினார்.

பகதூர்ஷா அதைப் பார்த்து மயங்கி விழுந்து விடவில்லை. அதற்கு மாறாக 'கலகல'வென்று சிரித்தார்.

இதைப் பார்த்ததும் பீங்கான் கொண்டு வந்த வீரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"உன் தளபதி என் மனதை துன்புறுத்துவதற்காக இவ்விதம் செய்துள்ளார். ஆனால்....நான் அவரை தன்னுடைய விருப்பத்தில் வெற்றியடைய ஒருபோதும் விடமாட்டேன்" என்று கூறி மீண்டும் சிரித்தார்.

அவருடைய மனநிலை மகத்தானது. அதன் காரணமாகத்தான் ஆங்கிலேயருக்கு அடிபணியாமல் வாழ்ந்தார். இந்த திடமான வைராக்கியம் நமக்கு வேண்டாமா?

வாழ்க்கைப் பயணத்தில் எந்தப் பாதையும் வருத்தம் என்னும் முட்புதர்களின்றி மலர்களாலேயே அலங்கரிக்கப் படவில்லை.

அதிலே பள்ளங்களும் படுகுழிகளும் இருக்கும். ஆனால் அவற்றையெல்லாம் நாம் ஒரே தடவையில் தாண்டி செல்ல வேண்டும். எப்படி தாண்ட வேண்டும்? அவற்றைப் பார்த்து சிரிக்க வேண்டும் சிரித்து விட்டால் பள்ளம் படுகுழியெல்லாம் மறைந்துவிடும். நாம் சிரிக்கும்போது நம் மரணம் தள்ளிப் போகிறது.

சிரிக்க வாய்ப்பு கிடைக்கும் போதெல் லாம் சிரியுங்கள்..!

# ஐஸ் கிரீம்....

குட்டிப்பாப்பா முதல் தடுதடு கிழவர் வரை ஐஸ்கிரீம் என்றாலே கொள்ளைப் பிரியம்....(குஞ்சுகளுக்கும் ஐஸ்கிரீம் என்றால் பிடிக்கும்...)

13-ம் நூற்றாண்டில் சீனர்கள் தான் இதை முதன் முதலில் கண்டறிந்து பனிக் குழம்பு என் பெயரிட்டனர்.

சீன மன்னர்களாலும் மேட்டுக் குடியினராலும் மட்டுமே பயன் படுத்தப்பட்ட இந்தப் பனிக் குழம்பை எளிய மக்களும், நடுத்தரமக்களும் தயாரிக்கவும் உண்ணவும் கூடாதென



'குப்ளக்கான்' என்ற மன்னன் தடை விதித்தான்.


அமெரிக்க நியூயோர்க் செய்தி ஏடு ஒன்று இதுபற்றி செய்முறை விபரத்தை வெளியிட்ட பிறகே உலகெங்கும் ஐஸ்கிரீம் உண்ணும் பொருளாக பரவியது.....

ஐஸ்கிரீமில் பாலைவிட விட்டமின் அதிகம்......A, $B_1$, $B_2$ சத்துக்கள் உள்ளன. 63.2% நீரும், 10.67% கொழுப்பும், 14.2% புரதமும் உள்ளன.

மேலைநாடுகளில் பால் கொழுப்பிற்கு பதிலாக தாவரக் கொழுப்பை சேர்த்து 'மெலோரின்' என்ற ஐஸ்கிரீம் தயாராகிறது.


கண்ட கண்ட கம்பெனிகள் சுகாதார மற்ற முறையில் செய்யும் ஐஸ்கிரீம்கள் உடம்புக்கு தீமை பயக்கும். இவ்வகை அசுத்த நீரில் தயாராகும் ஐஸ்கிரீம்களில் மஞ்சள் காமாலை, டைபாய்டு நோய் கிருமிகள் அதிக அளவில் இருக்கிறதாம்.

# கெட்டித்தனத்தோடு சுட்டித்தனம்!



மனிதருக்கு மட்டுமா ஒய்வு, இங்கிலாந்தில் உள்ள இராணுவப் பொலிசில் பணியாற்றும் குதிரைக்கும் ஒய்வுண்டு. ஒய்வில் செல்லும் போது பிரியமான தன் பயிற்சியாளரை கண்டுவிட்டது. கூப்பிட்டிருக்கலாம். குதிரைக்கு மொழியில்லையே. என்ன செய்யலாம். முடியும்வரை கழுத்தை நீட்டி கொடுத்தது பாருங்கள் ஒரு கெட்டிக்காரத்தனமான முத்தம்! அப்போது வியந்த வீரர் ஒருவர் சட்டென்று செய்த 'கிளிக்'! குதிரைக்கும் குறும்புதான். கொடுத்துவைத்த குதிரை என்று பொறாமைப்பட வேண்டாம்.

## என் உயிர் தோழன்



இலண்டன் மிருகக் காட்சிச்சாலையில் பூனைக் குட்டியோடு ராசியான நண்பராகிவிட்டார் கரடிக் குட்டியார். இருவரும் இணைபிரியாத தோழர்களாகி காண்போரை மூக்கின்மேல் விரல் வைக்கச் செய்கிறார்கள். நடபே வலியது.

## சபாஷ் சரியான போட்டி



விளம்பரங்களுக்கு போஸ் கொடுக்கும் சிம்பான்சி குரங்காரும் அவரது கூட்டாளியான சிறுமியும்! கூட்டாளிகள் என்றாலும் தொழிலில் போட்டியில்லாமல் போகுமா? ஒரே விதமாய் போஸ் கொடுத்து அசத்தப் பார்க்கிறார்கள். அட்டகாசமான 'கிளிக்'.

தகவல் பெட்டி

## குறும்புக்கு வரம்பில்லை



நூடில்ஸ் நன்றாக வெந்துவிட்டதா என்று கரண்டியில் எடுத்து பார்த்தவருக்கு அதிர்ச்சி! கரண்டியில் வந்தது பூனைக்குட்டி. குறும்புப் பூனையார் கொதிக்கும் பாத்திரத்தில் குதித்து தொலைத்துவிட்டார்.. ஐயோ பாவம் என்று நினைக்கிறீர்களா? இரக்கப்படாதீர்கள். இது ஒரு படப்பிடிப்புக்காக செய்த வித்தியாச முயற்சி மட்டுமே! இப் புகைப்படம் பரிசுகள் பலவற்றை தட்டிக்கொண்டது. எதிலும் ஒரு வித்தியாசம், வியக்க வைக்கும்தானே!

## ஓவிய யானை!

22 வயது யானை! பெயர் கரோல். கலிபோர்னியாவைச் சேர்ந்த 'சான் டீஜோ வனவிலங்கு' நிலையத்தில் வசிக்கும் 'கரோல்' தனது தும்பிக்கையில் தூரிகை பிடித்து படம் வரைகிறது. கரோல் தானாகவே தூரிகையை எடுத்து, சாயத்தில் தோய்த்து, கன்வாஸ் துணியில் வர்ணம் தீட்டுகிறது. ஒரு விதமாய் சித்திரம் உருவானதும் திருப்திப்பட்டு வரைவதை நிறுத்திவிடும். சுமார் 100 படங்கள் இதுவரை வரையப்பட்டு நல்ல விலைக்கு விற்பனையும் ஆகிவிட்டது.



## பெயர் மாறிய பிரபு படம்

பிரபு - சுகன்யா நடிக்க 'ஊட்டி பாட்டி' என்ற பெயரில் உருவாகும் படம் பற்றி சென்றவார சினிவிசிட்டில் செய்தி வந்தது அல்லவா?

அந்தப் பெயரை தற்போது மாற்றிவிட்டார்கள். 'மிஸ்டர் மெட்ராஸ்' என்று பெயர் மாற்றம் செய்துள்ளனர். படப்பிடிப்பு ஊட்டியில் தொடங்கியுள்ளது.

பெயர் மாறினாலும் ஊட்டி பாட்டியாக மனோரமா நடிப்பதில் எந்த மாற்றமும் இல்லை.



ரஞ்சிதா
படம் - தமிழச்சி

## இனித் திரையில்

விஜய்-புதுமுகம் இந்திரஜா நடித்துள்ள 'ராஜாவின் பார்வையிலே' படத்தின் படப்பிடிப்புக்கள் முடிவடைந்துவிட்டன. திரைக்கு வரும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

விஜய் நடித்து கடைசியாக திரைக்கு வந்த 'தேவா' படம் வசூலுக்கு பாதகம் இல்லாமல் ஓடியிருப்பதால் விற்பனையாகியிருக்கிறது.

## 101 அவ...

சென்ற வா...
வருட தொட...
இருந்தும் தி...
தாசா இ...
சொல்கிறார்க...
இது ரசிகர்க...

## முதல் கட்ட...

விஜய்-வனிதா விஜயகுமார் ஜோடி ந...
முதல் கட்டப் படப்பிடிப்பு 20 நாட்கள் நட...
இந்து-முஸ்லீம் காதல் ஜோடிகளை ...
முஸ்லீமாக நடிக்கிறார். 'ரசீ...
சந்திரலேகாவாக ந...
'முன்த...

# சினிவிசி...

## கர்ணா

ஆக்ஷன் கிங் அர்ஜுன் இரு வேடங்களில் நடித்துள்ள படம். கதை என்று புதிதாகச் சொல்ல எதுவுமில்லை. காட்சியமைப்புக்கள், சண்டைக் காட்சிகளில் விறுவிறுப்பு என்பவற்றை மட்டுமே நம்பி எடுத்திருக்கிறார்கள்.

கால் ஊனமானவராக வரும் அர்ஜுன்தான் கர்ணா. தன்னால் அடிதடி மட்டுமல்ல அழுது நடிக்கவும் முடியும் என்று அர்ஜுன் நிரூபித்துள்ளார்.

'கலைநாயக்' பட கதாநாயகன் ஸ்ரைலில் வரும் கவுண்டமணியும் திட்டு வாங்கும் செந்திலும் வழமைபோல வந்து போகிறார்கள்.

ரவிச்சந்திரன் - சுஜாதா இருவருமே பாத்திரத்திற்கு ஏற்ப நடிப்பை இட்டுச் செல்லுகிறார்கள்.

இசை வித்யாசாகர். ஏ.ஆர்.ரகுமான் ஜாடை தெரிகிறது. பாடல்கள் வைரமுத்து. பரவாயில்லை ரகம்.

தமிழ் நாட்டில் சென்னையில் 5 திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ளது. ஒன்றில் பகல் காட்சி மட்டும். சித்திரை புத்தாண்டுக்கு திரையிடப்பட்டது. இதுவரை வசூல் நிலவரம் நன்றாக இருப்பதாகத் தகவல்.

## சரத் ஜோடி நக்...

'ரகசிய பொலிஸ்' படத்தில் சரத்கும...
கலைஞன் படத்தில் கமலுடன் ந...
'ரகசியப் பொலிஸ்' படத்தில் ஒரு பாட...
பிந்தியா.

திரைப்படக் கல்லூரி மாணவர் ...
வசனம், பாலகுமாரன். பிரபல இந்...
பியாரிலால் இசையமைக்கிறார்.

## மினி சினி

• 'நாட்டாமை', 'பெரோசனி' படத்தின் [illegible] அம்மாவாக [illegible] 'முத்து' படத்தில் நடிக்கிறார். [illegible] ரஜினிக்கு அம்மாவாக நடிக்கிறார்.

• தெலுங்கில் கே.விஸ்வநாத் இயக்கத்தில், கமல் நடிக்கும் 'சுபசங்கல்பம்' தமிழில் 'பாசவலை' என்ற பெயரில் மொழிமாற்றப்படவிருக்கிறது.

• 'பம்பாய்' படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ள ராஜீவ் மேனன் விரைவில் ஒரு படத்தை இயக்கவுள்ளார். ராஜீவ் மேனன் பிரபல பின்னணிப் பாடகியான சுஜாதா மேனனின் மகனாவார்.

• பிரபு நடிக்கும் 'பெரிய குடும்பம்' படத்தில் நடிப்பதற்காக முதலில் வினிதாவும் ரஞ்சிதாவும் ஒப்பந்தமானார்கள். பின்னர் ரஞ்சிதாவுக்குப் பதிலாக சுகன்யா, குஷ்பு என வரிசையாக மாற்றப்பட்டனர். தற்போது ரஞ்சிதாவின் வேடத்தில் கனகா நடித்துக் கொண்டிருக்கின்றார்.

• பாண்டியராஜனுக்கு ஜோடியாக 'நல்ல மனக்காரன்' படத்தில் நடித்து வரும் ஜெயராகினி, இந்தப்படம் வெளிவருவதற்கு முன்பே முரளிக்கு ஜோடியாக 'சந்தனக் கருப்பன்', ராம்கிக்கு ஜோடியாக 'கருத்தப்பாண்டி' ஆகிய படங்களில் நடிக்கவுள்ளார்.

• 'ராஜமுத்திரை' படத்தைத் தொடர்ந்து மீண்டும் ஆர்.கே.செல்வமணி இயக்கும் படமொன்றில் நடிக்கவிருக்கிறார் நெப்போலியன். இந்தப் படத்தில் முதன் முறையாக இரட்டை வேடத்தில் நடிக்கவிருக்கிறார் நெப்போலியன்.

• ஜெயராம் - சுகன்யா இணைந்து நடிக்கும் புதிய படமொன்றை டி.கே.ராஜேந்திரன் இயக்கவுள்ளார். இவர் அரவிந்தசாமி நடித்த 'தாலாட்டு' படத்தை ஏற்கனவே இயக்கியுள்ளார்.

• 'வீரா', 'நாட்டாமை' வெற்றிக்குப் பின்னர் தமிழில் அதிகப் படங்களில் நடித்து வரும் மீனா, தற்போது தெலுங்கில் ஒரே ஒரு படத்தில் நடித்து வருகிறார்.

• 'செங்கோட்டை', 'மிஸ்டர் ரோமியோ' ஆகிய படங்களைத் தயாரித்து வரும் சூப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனம் அடுத்து 'சுந்தரபுருஷன்' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளது. இதில் கதாநாயகனாக லிவிங்ஸ்டன் நடிக்கிறார்.

• 'கல்யாணப்பரிசு', 'காதலிக்க நேரமில்லை' போன்ற படங்களை இயக்கிய ஸ்ரீதர் இந்திப்படமொன்றை இயக்கவுள்ளார். அக்ஷய்குமார் - மாதுரி டிக்ஷித் ஜோடியாக நடிக்கும் இப்படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கிறார்.

## 'முஸ்தபா' நெப்போலியன்

'சீவலப்பேரி பாண்டி' மூலம் கதாநாயகன் பட்டியலில் தனக்கொரு இடத்தை உறுதிப்படுத்தியவர் நெப்போலியன்.

'சீவலப்பேரி பாண்டி' படத்தை தயாரித்த பி.ஜி.ஸ்ரீகாந்த் புதிதாக தற்போது தயாரிக்கும் படம் 'முஸ்தபா' நாவலாக வெளிவந்த கதை ஒன்றையே படமாக்கப் போகிறார்கள். படத்தின் நாயகன் நெப்போலியன்.

'கருப்பு நிலா' படத்தை இயக்கிய அரவிந்தராஜ் 'முஸ்தபா'வை இயக்கப் போகிறார். மே 5ம் திகதி படப்பிடிப்பு ஆரம்பித்தது.

## காலில் ஒ...

மலையாளப் படவுலகத்தின் பக்கம் ...
அங்கு அதிஷ்டம் காத்திருப்பதாக நம்...
சுரேஷ் கோபியுடன் ஒரு காட்சியி...
சறுக்கி விழுந்துவிட்டார் ரஞ்சிதா. அ...
படப்பிடிப்பை இரத்துச் செய்துவிட்டா...

## மம்தா என்ன...

மம்தா குல்கர்னி இப்போதெல்லாம் ...
முற்றும் துறந்தவர்களையே மோ...
போதனை தேவைதானா? தேவையி...
வேண்டாமோ? அதனால்தான் தி...
மூடிக்கொண்டு தியானம் செய்யும்போ...
பாருங்கள்" என்கிறார் மம்தா.

இப்போதெல்லாம் மாலை ...
பகிர்ந்துகொள்ளாமல் தியானத்தில் ...
நாளைக்கு?

## ரோஜா அ...

'அதிரடிப்படையில்' நடித்தது போல் ...
படத்தில் 'ஆக்ஷன்' பாத்திரத்தில் நடிப்...
ரோஜாவிடம் கேட்டுப்பாருங்கள் அவர் அ...

ஒரு முறை பட்டது போதாதோ? இ...
மீண்டும் முறிக்க வேண்டுமா? என்று கே...

கொஞ்சம் நடிப்பு, கொஞ்சம் நடனம் ...
கவர்ச்சி, கொஞ்சம் சிரிப்பு, இப்படியான ...
நடித்தால் போதும் என்கிறார். ரோஜா.

## காண்-எனப் படை...

"ஆணைப் படைத்தான், ...
அழகெனப் படைத்தா...
விண்ணைப் படைத்தா வி...
விரும்பத்தான் படைத்தா...
காணெனப் படைத்தான் ...
கலக்கத்தான் படைத்தா...
'நாளென்ன வெட்கம் என...
நாமும்தான் வாழ்ந்து ...



நக்மா
படம் - வில்லாதி வில்லன்



மனோரமா
படம் - நிலக்குயில்

## ...ம் ஏன் தாமதம்?

...தம் 'அவதாரம்' படப்பிடிப்பை ஆரம்பித்து இந்த ...தை ரெடியாக்கிவிட்டார் நாசர். படம் திரையாக ...ஏன் தாமதம் என்றுதான் தெரியவில்லை. ...-ரேவதி ஜோடி அமர்க்களமாக நடித்திருப்பதாக ...ரையில் திரையிட்டால் அதனை நாமும் அறியலாமே.

## ...ருப்தி

...ந்திரலேகா' படத்தின் ...விட்டது. ...ருவாகியுள்ளது. விஜய் ...ரின் பெயர் வனிதா ...மலன் பொன்னம்பலம் ...பெயரில் விஜயின் ...னாவாக நடிக்கிறார்.

...வாக நடிக்கிறார் நக்மா. ...ந்தி நடிகை பிந்தியா. ...வந்து ஆடிப்போகிறார்.

...படத்தை இயக்குகிறார். ...மைப்பாளர் லட்சுமிகாந்த்

## ...சுளுக்கு

...திரும்பியிருக்கிறார் ரஞ்சிதா ...ளுக்கு கஷ்டகாலம். ...கொண்டிருந்தபோது கால் ...ஷூட்டிங்குக்கு எடுக்கும்வரை ...

## ...சான்னார்?

...போலப் பேசுகிறார். ...மைக்கும் மம்தாவுக்கு தத்துவ ...ஆனால் மனதுக்கு அமைதி ...வருகிறாராம். "கண்களை ...கிடைக்கும். தீங்களும் செய்து

...ஆண் நண்பர்களுடன் ...மம்தா. இது எத்தனை



## சரத்குமாரில் அரசியல்வாடை!

எம்.ஜி.ஆர். நடித்து வெற்றி பெற்ற படங்களின் பெயர்கள் மீது இன்றைய கதாநாயகர்களுக்கு பிரியம் ஏற்பட்டிருக்கிறது. அதில் ஒருவர் சரத்குமார்.

ஏற்கனவே 'நாடோடி மன்னன்' படத்தில் சரத் நடித்து வருகிறார்.

இப்போது புதிதாக ... ஒப்பந்தமாகியுள்ள படம் 'ரகசிய போலீஸ்'.

'ரகசிய போலீஸ் 115' என்னும் எம்.ஜி.ஆர். படப் பெயரில் 115 மட்டும் இதில் மிஸ்ஸிங்.

எம்.ஜி.ஆர். படப் பெயர்கள் மீது மட்டுமல்ல அரசியல் மீதும் சரத்குமாருக்கு சின்னதாய் ஒரு பிரியம் ஏற்படத் தொடங்கியிருப்பதாக திரையுலக வட்டாரம் முணுமுணுக்கிறது.

'நாடோடி மன்னன்' படத்தில் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா புகழ்பாடும் வாசகங்களை சரத் பேசியுள்ளார். படப்பிடிப்பை ஆரம்பித்து வைத்ததும் ஜெயலலிதா தான்.



## யுவராணிக்கு அறை!

'பசும்பொன்' படத்தில் நடித்துக்கொண்டிருந்தபோது காட்சிக்காக அழுகை வரவில்லையாம். உடனே பாரதிராஜா வந்து கன்னத்தில் அறைந்தபின்னர்தான் உண்மையாகவே அழுகை பொங்கித் தள்ளியதாம். இப்படிக் கூறியுள்ள யுவராணி பாரதிராஜாவின் கையால் அடிவாங்கியதை பாக்கியமாகக் கருதுகிறார். அடிக்கு மரியாதை.



## அனுசரிக்கும் சங்கவி

தமிழ் நடிகைகளில் கவர்ச்சி விடயத்தில் தற்போது ரசிகர்களை கிளு கிளுப்பாக்கி வருபவர் சங்கவிதான்.

"எனது உடல் அமைப்புக்கு நான் உலக அழகிப் போட்டியில் மோதியிருந்தால் ஜெயித்திருப்பேன்" என்கிறார் சங்கவி.

கவர்ச்சியை நம்பும் சங்கவிக்கு வாய்ப்புகளுக்கு மட்டும் குறைவில்லை.

கவர்ச்சி உள்ள போது அதை வைத்து ... வேண்டும். சங்கவி அதிக படங்களில் ...வருவதன் இரகசியம் அதுதான்.

தயாரிப்பாளர்கள், இளம் கதாநாயகர்கள், இயக்குநர்கள் என்று சகல மட்டத்திலும் 'அனுசரித்துப் போகும்' நடிகை என்று நல்ல பெயர் சங்கவிக்கு.

தயாரிப்பாளர்களைப் போதும் என்றளவுக்கு சங்கவி கவனிப்பதால் அந்தச் செய்தியறிந்த தயாரிப்பாளர் வட்டாரம் சங்கவியின் பின்னால் அலைகிறதாம்.

## ஷில்பா மறுத்தாலும்

நடிகை ஷில்பா ஷெட்டியை நடிகர் அக்ஷய் குமாரோடு மட்டுமல்ல கோவிந்தாவோடும் சேர்த்து கிசு-கிசுக்கள் வருகின்றன.

பிரபல தொழிலதிபர் ஒருவரோடும் இணைத்துப் பேசுகிறார்கள்.

'எல்லாமே பொய்' என்று ஷில்பா ஷெட்டி மறுத்தாலும் நெருப்பில்லாமல் புகையுமோ என்ற கேள்வியில் நியாயம் இருப்பது போலத் தெரிகிறது.

## ராசி நல்ல ராசி

விஜயகாந்த்-ரேவதி ஜோடியாக நடித்தால் அந்தப்படம் வெற்றிகரமாக ஓடும் என்றொரு நம்பிக்கை இருக்கிறது.

சமீபத்தில் வந்த 'என் ஆசை மச்சான்' படமும் அந்த நம்பிக்கையைக் காப்பாற்றியது. அதனால் விஜயகாந்த்-ரேவதி ஜோடி தற்போது நடித்துவரும் 'காத்தி பிறந்த மண்' படமும் வெற்றியாக அமையும் என்று நம்பப்படுகிறது.

*







முகப்பில்
குஷ்பூ-ஜெயராம்
படம் - முறைமாமன்

## மனிதா மனிதா

'இதுதாண்டா போலீஸ்' என்னும் மொழிமாற்றுப்படம்தான் டாக்டர் ராஜசேகரின் புகழை தமிழில் ஏற்றிவைத்தது. அதனைத் தொடர்ந்து டாக்டர் ராஜசேகரின் தெலுங்கு வெற்றிப் படங்கள் பல தமிழில் மொழிமாற்றப்பட்டன.

தற்போது மொழி மாற்றப்படும் படம் மனிதா-மனிதா. இதில் ராஜசேகரின் ஜோடி நக்மா. இசை-ஏ.ஆர்.ரகுமான்.

டாக்டர் ராஜசேகரின் தம்பியான நடிகர் செல்வாவும் 'மனிதா மனிதா' படத்தில் நடித்துள்ளார்.

டாக்டர் ராஜசேகர் தமிழராக இருந்தும் தெலுங்கில்தான் கொடிகட்டிப் பறக்கிறார்.

# முகத்தை அழகு படுத்த முத்தான யோசனை!

## லேடீஸ் ஸ்பெசல்

## முக ஒப்பனை—நீங்களும் செய்யலாம்

ருக்கா நாதன்

மேக்கப் செய்யும் முன் முகத்திற்கு கிளன்சிங் கிரீம் (CLEANSING CREAM) போட்டு முகத்தை நன்றாக ரிஷ்யு தாளினால் துடைக்க வேண்டும். பின் சருமத்தின் நிறத்திற்கு ஏற்றது போல ஃபவுண்டேஷனைப் போட வேண்டும். ஃபவுண்டேஷன் போடும் போது நெற்றியில் இருந்து தொடங்கி பின் முகம் முழுவதும் போட வேண்டும். எல்லா இடமும் ஒரே மாதிரி அழுத்தமாக இருக்கும் வகையில் போட வேண்டும். அதன் மேல் பிறகு லூஸ் பவுடர் போடவேண்டும்.

1. ஃபவுண்டேஷன் போட்டு முடிந்தவுடன் அதன் மேல் பவுடர் போட வேண்டும். பவுடர் போட்டவுடன் முதலில் ஐப்ரோ பென்சிலால் ஐப்ரோ போட வேண்டும். போடும் போது ஒரே நீளமாகக் கோடு போடக்கூடாது. ஒரு பக்கமாகக் கீறிக் கொண்டு போக வேண்டும். படத்தி லுள்ளவாறுதான் கீற வேண்டும்.





2. பின்னர் ஐஷடோ போட வேண்டும். ஐஷடோ போடும் போது அணிந்திருக்கும் உடையைப் பார்த்துத்தான் அந்த நிறத்திற்கு தேவையான மாதிரி போட வேண்டும். முதலில் கடும் வர்ணத்தில் போட்டு பின்னர் வேறு கலரைச் சேர்க்கலாம்.



3. மூன்று நிறம் கலந்து ஐஷடோ போட்ட பின்தான் அவுட்லைன் போட வேண்டும். மூன்று நிறங்களும் சேர்ந்து ஐஷடோ போட்டபின் முழுத் தோற்றம் காணப்படும்.

4. ஐசடோ போட்ட பின் உடனே மஸ்காரா கண் இமைகளுக்கு போட வேண்டும்-மஸ்காரா இமைகள் தொடக்கத்தில் இருந்து மற்ற இடங்களில் படாமல் போட வேண்டும்.

சகல நிறங்களிலும் 'மஸ்கரா' கிடைக்கும்.



5.அதன் பின் கன்னத்திற்கு ரூச் போட வேண்டும். ரூச் போடும் போது காதில் இருந்து கன்னத்திற்கு பிரஷின் பின் பக்கத்தால் அளவெடுத்து, மேல் நோக்கிப் போட வேண்டும்.





6. பின்னர் லிப்ஸ்ரிக் போட வேண்டும். லிப்ஸ்ரிக் போடும் போது சேலையின் நிறத்திற்கு ஏற்றவாறு லிப்ஸ்ரிக் போட வேண்டும். முதலில் உதடுகளைச் சுற்றி கடும் நிறத்தில் லைன் போட வேண்டும். அதன் பின் தான் லிப்ஸ்ரிக் போட வேண்டும்.

7. உதட்டைச் சுற்றி லைன் போட்ட பின் லிப்ஸ்ரிக்கை உதடு முழுவதும் படக்கூடியதாக போட வேண்டும். பின்னர் அதன் மேலே 'லிப் குளோஸ்' போட வேண்டும்.



## விவகாரமான விளம்பரம்


TIMES MATRIMONIALS

EX- CAPTAIN ...ing reputed com... ...wry no bar Write Lt Salunke Vihar, Pune (FN806)

HINDU 33/ 172 WELL- SET- ...ing in California seeks el- ...gant preferably Medicos ...te Dowry no bar Write ...elhi 110002 (80094544)

SENIOR SYSTEMS ENGI- 178/ 74, Gujarati Vanik ...inationals abroad status seeks compatible, tall, ...ife partner treasuring ...No 58351 TOI New- (80095452)

...MPLE LIFESTYLE ...ualified lady ...op-

PUBLIC SECTOR EMPLOYED PROFESSIONALLY qualified widower 36/ 92000 with two young kids invite correspondence from issueless bride write Box 12623, Times of India Baroda 390 005 (BDR2839)

SUITABLE MATCH FOR GRADUATE SAXENA boy 27/ 171 handsome running own business homely educated beautiful girl preferred Caste no bar Reply with photograph Early ... Write Box No 59244, T O I, NewDelhi (80097894)

ALLIANCE INVITED FOR HANDSOME PUNJ Arora engineer Govt. service gazetted ... in Madhya Pradesh 28½ years ... retired chief Engineer desired slim ... beautiful professionally qualified sweet ... girl Send biodata recent photograph ... Write Box 60276 TOI New 110002 (M101)

ALLIANCE INVITED FOR 28/ 175 FAIR ...some Computer Engineer North India... boy employed with AT & T ... beautiful fair slim ...

இன்று தினசரிப் பத்திரிகைகளில் மணமகன்/மணமகள் தேவை விளம்பரப் பகுதி சக்கை போடுபோடுகிறது. உலகில் முதன் முதலாக இந்த மாதிரி விளம்பரம் கொடுத்தவர் யார் தெரியுமா? ஒரு பெண் தான். தனக்கு கணவன் தேவையென்று முதன் முதலாக பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தாள். 1635-ம் ஆண்டு இங்கிலாந்தில் ஒரு தினசரியில் இந்த விளம்பரம் வந்தது. "கடவுள் முதல் மனிதனான ஆதாமுக்காக ஏவாள் என்ற பெண்ணை படைத்தார். நான் தனியான ஒரு பெண். என்னிடம் அன்பு செலுத்த ஒரு கணவன் தேவை!" என அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த விளம்பரம் அந்தக் காலத்தில் ஒரு புரட்சியையே உண்டாக்கியது. இதற்கு பலத்த எதிர்ப்புகள் ஏற்பட்டன. அந்தப் பெண்ணுக்குக் கணவன் கிடைக்கவில்லை. இறுதியில் மூன்று மாதச் சிறைத் தண்டனைதான் அப் பெண்ணுக்கு கிடைத்தது. 1856-ம் ஆண்டு வரையில் சில நாடுகளில் திருமண விளம்பரத்திற்கு தடையே விதித்திருந்தார்கள்.

## என்றென்றும் இளமையுடன்...! என்ன செய்ய வேண்டும்?

டிவைஸ்

இளமைத் துடிப்புடன் நீண்ட நாட்கள் ஆரோக்கியமாக வாழ எல்லா வயதினரும் விரும்புவார்கள். இதை யெல்லாம் தவிர்த்துச் சிலர் இளமையிலேயே முதுமைத் தோற்றத்துடன் காட்சி தருபவர்களும் உண்டு.



இதையெல்லாம் எளிதில் தவிர்த்து, முதுமையிலும் இளமைத் துடிப்புடன் வாழ எளிய வழிகள் உள்ளன.

முதலில் எல்லா விதமான இறைச்சி வகைகளையும் தவிர்த்து விட வேண்டும். ஆசையாக இருந்தால் மாதத்தில் ஓரிரு நாட்கள் சாப்பிடலாம். எண்ணெயில் பொரிக்காத மீன் துண்டுகள் மற்றும் அவித்த கோழி முட்டையையும் சாப்பிடலாம்.

அரிசி, கோதுமை, சோயா மாவு முதலியவை எமது உணவில் 25% இடம் பெற வேண்டும். மீதி 75% உணவு, காய் கறிகளாகவும், பழங்களாகவும் இருக்க வேண்டும்.

தயிரில் இருக்கும் தாது உப்புக்கள்-நரம்புகள் தளர்ந்து விடாமல் பார்த்துக் கொள்கின்றன. இதனால் முதுமையான தோற்றம், சக்தி இழப்புக்கள் போன்றவை தடுக்கப்படுகின்றன. பழங்கள், காய்கறிகள் போன்றவற்றில் அதிகமாகக் காணப்படும் விட்டமின் சி, இரத்தக் குழாய்களின் சுவர்களை நன்கு பராமரித்து வைக்கின்றது. அத்துடன் காய்கறிகள், பழங்களில் காணப்படும் லெக்னின், பெக்டின் போன்ற நார்ப்பொருட்கள் இரத்தத்தில் கொழுப்பின் அளவைக் குறைக்கின்றன. இதனால் மாரடைப்பு போன்ற அபாயங்களுக்கு வாய்ப்பில்லை.

நரம்புத் தளர்ச்சி, இருதய நோய்களைத் தடுப்பதுடன் முகத் தோற்றமும் அழகாக

வயது ஆக ஆக நரம்புகள் தளர்ந்து முதுமைத் தோற்றத்தைத் தந்து விடும். உடலும் சக்தியை இழந்து விடும். இதைத் தடுக்க பால், தயிர், முட்டை, பழங்கள், பச்சைக் காய்கறிகள் போன்ற சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும்.

இருக்க வேண்டும். உடல் நன்கு தேகக்கட்டுடன், வனப்புடன் இருக்க வேண்டும் என்று பெண்கள் விரும்புகின்றனர்.

அதற்கும் வழி இருக்கின்றது. இரத்தம் நன்கு சுத்தமாக வேண்டும். அதன் மூலம் கல்லீரலில் பித்த நீர் சுரக்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

இரத்த உற்பத்தியும் தொடர்ந்து அதிகரிப்பதால் உடல் அழகாகப் பிரகாசிக்கும். முகம் பொலிவுடன் திகழும். இதற்கு மாம்பழம் உதவுகின்றது. மாம்பழசீசன் இல்லாத போது பப்பாளிப் பழத்தை உபயோகிக்கலாம். அல்லது எலுமிச்சம்பழச்சாறு அருந்தலாம். வெள்ளைப் பூண்டு, வெங்காயம் ஆகியவையும் கொழுப்பைக் (கொலஸ்ட்ரோல்) கட்டுப்படுத்தி இரத்தத்தைச் சுத்தப்படுத்தக் கூடியவை.

உடற்பயிற்சி தினசரி 20-30 நிமிடங்கள் செய்து வந்தால் உடல் இறுக்கத்தைத் தளர்த்தி உடலுக்குப் புத்துணர்ச்சி ஏற்படுத்தும்.

ஆழ்நிலை தியானம் தினமும் காலையிலும், மாலையிலும் 20நிமிடங்கள் செய்வதால் மன இறுக்கம் அகலுகின்றது. இதனால் இரத்த அழுத்த நோய் வராமல் தடுக்கப்படுகிறது.

பொறாமை உணர்ச்சியைக் கைவிட்டு, படபடப்புக்களை நீக்கிக் கொள்ள வேண்டும். எப்போதும் வெற்றியைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு நம் கடமையில் கருத்தாக இருப்பதும், உடல் நலம், உணவு முதலியவற்றிலும் திட்டமிட்டு வாழ்ந்தால் நீண்ட நாட்கள் ஆரோக்கியமாக இளமைத் துடிப்புடன் வாழலாம்.

## யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்

முரசின் 'பரிசுக் கூப்பன்' போட்டியில் அதிஸ்டசாலியான 50 பேரில் சென்ற வாரம் 10 பேரின் பெயர் விபரங்கள் இடம் பெற்றிருந்தன. இம் முறை மேலும் பத்து அதிஸ்டசாலிகள்.

21. திருமதி. மேரி பிரான்ஸிஸ், நீர்கொழும்பு.
22. செல்வி. என். சுந்தரலிங்கம், திருகோணமலை.
23. செல்வி. ஏ. வசந்தகுமாரி, மத்துகம.
24. திருமதி. நஸ்மியா செய்னுலாப்தீன், மன்னார்.
25. செல்வி. சுகந்தினி சண்முகராஜா, ஆக்கரப்பத்தன.
26. செல்வி. ஜனூன் றிபாயா, பத்தளம்.
27. திருமதி. ஜீவரமணி தேவராஜன், இரத்தினபுரி.
28. எம்.எச்.எம். பிர்தௌசியா, குருநாகல்.
29. திருமதி. பரீஸா நஸீர், பேராதனை.
30. செல்வி. ஏ. அகல்யா, நுவரெலியா.

(மறுவாரமும் வரும்)


பரிசுக் கூப்பன்
மகளிர் மட்டும்
இல 12

## மகளிர் மட்டும் —பரிசுப் போட்டி—

முதல் அதிஷ்டசாலிக்கு
தங்க நகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.


## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது - சுகந்தினி

### பூசணிக்காய் பச்சடி

**தேவையானவை:**

நீற்றுப்பூசணி - 1/4 கிலோ
தேங்காய் எண்ணெய் - 50 கிராம்
தயிர் - 1/2 கப்
உப்பு - அளவாக
மஞ்சள் தூள் - சிறிது
மிளகாய்த் தூள் - சிறிது
கடுகு - சிறிது
கறிவேப்பிலை - சிறிது

**செய்முறை:**

நீற்றுப் பூசணியை தோல் நீக்கி விட்டுப் பொடியாக நறுக்கி உப்பு, மஞ்சள்தூள், மிளகாய்த்தூள் சேர்த்து கலந்து வேக வைக்க வேண்டும். நன்றாக வெந்ததும் இறக்கி வைத்து அதில் தயிரைக் கொட்டி கிளற வேண்டும். கிளறி வைத்துக் கொண்டு எண்ணெய்ச் சட்டியைச் சூடாக்கி எண்ணெய் ஊற்றி கடுகு, கறிவேப்பிலை போட்டுத் தாளித்து அதில் கொட்டிக் கிளற வேண்டும். சாப்பிடச் சுவையாக இருக்கும். உடம்புக்கும் நல்லது.

## முடிவுவரை காதல்

### இலக்கிய விருந்து

**இதை எழுதியவர் யாராக இருக்கும்? படித்துக் கொண்டே ஊகித்துவிட்டு இறுதியாக விடையைப் பாருங்களேன்.**

உலகம் இறுகி ஒரு பொருளாய் நிற்பது; ஒரேயொரு தெய்வம் முடிவுவரை விரிந்து நிற்பது;

இது காதல்.

காதலர் பிரிந்திருக்கும் போது அவர்களை ஒருவருக்கொருவர் ஓலையெழுதலாகாதென்று தடுத்தால், அவர்கள் நமக்குத் தெரியாதபடி ஆயிரம் ஆச்சரிய வழிகள் கண்டுபிடித்துப் பேசிக் கொள்கிறார்கள்.

பறவைகளின் பாட்டையும், மலர்களின் சுகந்தத்தையும், குழந்தையின் சிரிப்பையும், ஞாயிறின் ஒளியையும், காற்றின் உயிர்ப்பையும், விண்மீன்களின் கதிர்களையும் காதலர்கள் தூது விடுகிறார்கள்.

ஏன் கூடாது? தெய்வத்தின் படைப்பு முழுவதும் காதலுக்குத் தொண்டு செய்யும் பொருட்டே அமைந்திருக்கிறது.

உலகம் முழுவதையும் தூது போகச் செய்கிற திறமை காதலர்க்குண்டு.




இளவேனிற் காலமே, நான் அவனுக்கு எழுதுகிற ஓலை நீ.

உயிரே, நீ கல்லாய் பிறந்தால் காந்தக் கல்லாய் பிற.

செடியானால், தொட்டால் வாடிச் செடியாகிவிடு.

மனிதனானால்
காதல் செய்!
காதலர் இல்லாவிடின்
ஞாயிறு என்றதோர்
தீப்பந்தம் அவிந்து போய்விடும்!"

# 'யுவ'த்தில்...




நமது பூமி
இன்னும்
இருண்டு கொண்டிருக்கிறது!
மனித கொடூரங்கள்
சூரியனை மறைப்பதால்
பூமி இன்னும்
இருண்டு கொண்டிருக்கிறது!

போன இருட்டில்
தொலைக்கப்பட்டவர்களை
எலும்புத் துண்டுகளால்
தொகைப் படுத்துகிறோம்!
இந்த உதயத்திலும்-பலர்
காணாமற் போகிறார்களே!

புதிய வரவுகளை,
புதிய யுகங்களை
எதிர் பார்த்து, பார்த்து
புதிர்களுக்கு
விடை தேடித் தேடி
புண்ணாகிப் போனவை
பாமர மூளைகளே!

அடகு வைத்த மூளைகளை
அப்படியே தொலைத்து விட்டு
அடிப்படையை மாற்ற வேண்டும்!
புரிந்துணர்வில்
மனிதர்களைத் தேடவேண்டும்!
யுவத்தில்
மறு மலர்ச்சி காணவேண்டும்!

**மாவை வரோதயன்.**



## கேள்விக்குள்ளாகும் நாளை

தொட்டில் ஒன்று
தேடித்தாருங்கள்.
நானே இந்த உலகில்
ஜனித்திருக்கிறேன்
ஜீவிப்பதற்கு......

▫▫

ஓ...
பாவிகளே!
பயணப்பட்டு விட்டீர்களே?
பாதை தேடி....
மனம் அழுகிறது.

▫▫

கஷ்டமான கனவுகளும்;
சோக சொட்டுக்களும்
சொந்தமாகிப்போன ஜீவிதம்!

▫▫

அழுது புலர்கிறது
அதிகாலைப் பொழுது;
சோகம் சொல்லி
விசும்புகிறது–
சூரியன்.

▫▫

நீண்ட நாட்களாக
நிம்மதி இழந்து
கண்ணீரில் குளித்து
கவலையில் தலை துவட்டி
காலம் கழித்து வருகிறேன்.

▫▫

ஓ...!
நாளை நாம்–
சிரித்து சந்தோஷிப்பது
சந்தேகம்.

▫▫

நாளை–
இருக்கும் என்பதும்
சந்தேகம் போல்...

▫▫

**இஸ்லாஹிய்யா-கே. முனாஸ்.**

## 94ன் கலண்டர் நான்!

நெஞ்சறைக்குள்
ஒரு வித்தியாசமான
இன்பத்தை
இனம் காட்டியவளே!

★

வாய்க்குள்
விரலை வைத்தால்
கடிக்கத் தெரியாத
பச்சைக் குழந்தையென்று
திட்டி...
தலையில் குட்டி.......
காதலைக் கற்பித்தவளே!

★

கொடி மல்லிகைப் பூவை
ஒவ்வொரு
பாடசாலை நாட்களிலும்
மணக்கத்தந்து
மகிழ்வித்தவளே!

★

சில்லறைக்காகச்
சிரிக்கும்
யாசகனைப்போல்
உன் வீட்டிற்கு
அலைய விட்டவளே!

★

என் உயிராய்
இருந்து விட்டு
உடலை விட்டு
பிரிந்து போனவளே!

★

ஈரக்களியாய் கிடந்த
எனக்கு
உன்
ரசனைக் கேற்ப
உருவம் கொடுத்துவிட்டு
ஒதுக்கிவிட்டவளே!

★

உன் மென் கரத்தில்
ஒட்டியிருக்கும்
கடிகாரத்தைப்போல்
அடிக்கடி
பார்த்துச் சிரித்தவளே!
இப்பொழுது ஏனடி.....
94இன் கலண்டரைப்போல்
ஒதுக்கி
தள்ளி விட்டாய்.....?

★

சந்திக்க முடியாத
நாட்களில்.....
நிலவில் உங்களைக் கண்டேன்
என்று
சொல்லிச்
சிரிப்பாயே
நினைவிருக்கிறதா?
இப்பொழுது சொல்
95ன் நிலவில்
யாரைப்
பார்த்துக் கொண்டிருக்கிறாய்?

**மீராவோடையான்.**



## சொட்டுச் சொட்டாய் பாவப்பட்ட உதடு...



கன்னத்திலுருந்து
உதடு வரை
என–
பாவத்தை
போக்குகிறேன்.

ரோஜாவின–
நறுமணம் வீசும்
சிற்றுதடு காய்ந்து
சகாராவாய்–
செத்துப் போகிறது.

அவ்வுதடு ரெண்டு
கன்னம் வருடியதில்
கூந்தல் கோதி,
சிக்கெடுத்த ராத்திரி....
அள்ளிக் கொட்டிய
சுகானுபவத்தில்,
நிலாத் தேய்ந்து போனதும்
மிச்சமில்லாத இரவுகளில்
நினைவுக்கு வந்து போனது....

இருள் கவிந்து கிடந்த
உன்–
ரோஜா வதனம்.

பாளை வெடித்தது போலான
முத்து முத்துச் சிரிப்பு
மெல்லென –
உள்ளத்துள் பேசிய பேச்சில்
'இனிமை' தோய்ந்து கிடந்த
வேளை...

என்–
வாழ்க்கையை
நாசமாக்கியது;
இதழ்களினூடே–
சொட்டுச் சொட்டாய்
நீ–இறக்கிய விஷம்.

கோபத்தில் உதடு சப்பி
சிரிக்கத் தெரிந்தவர்களின்
உதடு பாவப்பட்டது.

கண்ணீரினால் கழுவப்பட்ட
ஆத்மாவினூடே....
என்
பாவம் போக்கியது
உன் உதடு எனினும்.....

மிச்சப் பாவத்தையும் அது,
எனக்காகத் தந்துவிட்டுப் போனது.

ஆத்மா..!
பிரிவு என்ற பெயரால்
நான் ஒரு முறை
செத்தது போதும்.

வா...!
விஷம் குடித்துநீ?
சொட்டுச் சொட்டாய்
என் பாவத்தை
போக்கு!

**முழுமதி எம். முர்தளா.**



# தேன் கிண்ணம்



## துப்பாக்கி முனையில்...



இதய துடிப்பு
இரு மடங்கானது.
கண்கள்
கண்ணீருடன் சிவந்தன.
கை கால்கள் உதறியது.
உதடு பிதுங்கியது.
விரல்கள்
வயதை எண்ணியது.
மனது
விநாடிகளை எண்ணியது.

***

செவ்வீதி
மறக்கவில்லை–திருட்டு
செவ்விளநீர்
மறக்கவில்லை–அந்தி
செவ்வானம்
மறக்கவில்லை–அந்த
செவ்விதழை
மறக்கவில்லை–அதிலூறும்
செந்தமிழையும்
மறக்கவில்லை.

***

பழகியவர்களை
பல தடவை நினைத்தேன்.
அயலவரை
பழகியவரை நினைத்தேன்.
சகோதரங்களை நான்
சார்ந்தவரை நினைத்தேன்.
அவளையும்
அன்புடன் நினைத்தேன்.

***

இறுதி நொடியில்
இறைவனையும் ஈன்றாளையும்
காணும் சந்தோசத்தில்
பெற்ற தாயையும்.....

***

**கே. தினேஸ் -மட்டக்களப்பு.**

## விடைகொடு!



என்
ஜீவனை
நீ
தவிக்கவிட்டு
ஜீவிக்க நினைத்தால்
நான்
இறந்து போவேன்
உன்
நினைவுகளோடு!

மௌனங்களை
விலக்கிவிட்டு
வார்த்தைகளை
பிரசவித்து
ஒரு சந்திப்பை
அறிமுகஞ்செய்
நம்
தொடர்புகளின்
விருத்திக்காக!

உன்
புன்னகைப் படிவுகளில்
தேங்கிப் போன
என் நினைவுகள்
ஏங்கியும் போனது
எதிர்பார்ப்புகளோடு!

மொழிகளை
சிறைவைத்துவிட்டு
விழிகளால்
என்னை துரத்துகிறாயே.....
நான்
என்ன வேற்று மொழிக்காரனா?

உன்
காதலுக்காக
காத்திருக்கும்
என்
இதயம்
இறந்து போவதற்குள்
விடை கொடு!

**நாரளையூரான் கே. கனகராஜா.**

## வழி சொல்லிவிட்டுப் போ

இன்றைய விடியலில்
வானம்
இடம் மாறியதாகவே
உணர்ந்தேன்.
வாசல்படியில் நீ...
திருமண அழைப்பிதழுடன்.

நீ
இல்லாத பூமி
எங்குண்டு சொல்...
அங்கு போய்விடவேண்டும்!

வேர்கள் இல்லாத
மரம் உண்டா?
மரணம் வரினும்
உன்
ஞாபகம் உயிர் கொண்டு
வரும்.

நெஞ்சம் மறக்குமோ?
கடல் நீர் தொடும்
கரை கூட மறக்கு...
உன் நினைவுகள்
மறக்கின்ற உயிர்
என்னிடமில்லை.....
உன்னால் முடிந்திருக்கிறது!
வாழ்வதற்கல்ல..
மண்ணில் மரணிப்பதற்கு
வழி சொல்லிவிட்டுப் போ....!

**முல்லை அமுதன்-சவுதி அரேபியா.**

## கைத்தடிப்பயணம்!

கைகள் இரண்டும் அகப்பைக் காம்பாய்
காட்சி தருகிறது!–என்
'மெய்'யில் மெய்யாய் எலும்புந் தோலும்,
மிஞ்சி இருக்கிறது!

கன்னம் இளமை அழகை இழந்து
காட்சி தருகிறது!–இரு
கண்கள் பார்வை குறைந்து பார்வைக்
'கண்ணாடி' கேட்கிறது!

கருமை நிறத்தை இழந்து சிகையும்,
காட்சி தருகிறது!–ஒரு
முதுமை நிலைக்கு ஆளாய் போனேன்,
முகத்தோல் சுருங்கியது!

நடையில் வேகம் குறைந்து, களைப்பு–
நடையைத் தடுக்கிறது! – 'கைத்
தடி'யைப் பற்றி பயணம் செய்யும்

**மனைவி:**-ஏங்க சேலை மேலே பூவை வச்சுக் கொண்டு வர்றீங்க?
**கணவன்:**- நீதானே பூப்போட்ட சேலை வேணும்னு கேட்டே.

▫▫

**வந்தவர்:**- என்ன டாக்டர் என் உடலை டெஸட் பண்ணிப் பாராமலே ஆப்பரேஷன் செய்ய வேணுமுன்னு சொல்லுறீங்களே?
**டாக்டர்:**- பரவாயில்லை. நீங்க ரொம்ப வசதியானவர் என்று எனக்குத் தெரியும்.

••

**அவன்:**- அந்த எழுத்தாளர் நாய் கடிச்சதுக்குப் பிறகு ரொம்பத்தான் மாறிட்டார்.
**இவன்:**- எப்படி?
**அவன்:**- இனி கடிஜோக்ஸ் மட்டும் தான் எழுதுவாராம்.

## புதிய பற்று

எல்லாம் இழந்தார்
துறவி–
அடையாள அட்டையைத் தவிர!



## நம்நிலை

ஐவர் இருந்தென்ன?
ஒருவனிடம்
பறிபோனாள் பாஞ்சாலி.

## இறுதிச் சமாதானம்

இறங்கி
தரைகளை தொடாமல்
திரும்பப்பறந்தன
வெண்புறாக்கள்.

**கநேஷ் எம் தர்மலிங்கம்.**

# கத்தரித்த கடி ஜோக்ஸ்

••

**ஒருவர்:**- ஹலோ! வாங்க-வந்து சாப்பிட்டுட்டு போங்க.
**மற்றவர்:**- என்மேல் உங்களுக்கு சரியான பிரியம்!
**ஒருவர்:** அதெல்லாம் ஒன்றுமில்லை. 20 பிச்சைக் காரர்களுக்கு அன்னதானம் வழங்குவதென்று வேண்டுதல். 19 பேர் இருக்கிறாங்க. இன்னும் ஒருவர் குறையுது அதான்.

••

**பாபு:**- என்ன அந்த எழுத்தாளர் எழுத்தாணியால் பனையோலையில் எழுதிக்கிட்டிருக்கிறார்?
**கோபு:**- அவர் சரித்திர நாவல் எழுதுறார்.

••

★ இதுக்கு முதல் டாக்டர் வீட்டிலை வேலை செய்திருக்கிறேன்னு சொல்லுறியே... இதை எப்பிடி நான் நம்பிறது?
* நீங்க நம்பமாட்டீங்க என்று தெரிஞ்சு தான் அவர் வீட்டில் எடுத்த தேர்மோமீற்றரையும், ஸ்டேதஸ்கோப்பையும் கொண்டு வந்திருக்கிறேன்.

••

# ★ இந்த வாரம் உங்கள் பலன் ★

**(14.05.95 முதல் 20.05.95 வரை)**

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், கேது, வெள்ளி |
| இடபம் | - புதன் |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |

★ சந்திரன்–துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★
15.05.95ல் இடபச் சூரியன்.

### மேடம்: | சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | தொழில் கஷ்டம், பணவரவு தடை. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| **செவ்வாய்**- | உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| **புதன்**- | வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- | பணக்கஷ்டம், செய்தொழில் மந்தம். | காலை 7 மணி |
| **வெள்ளி**- | வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| **சனி**- | செலவு மிகுதி, கடன் தொல்லை. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2**

### இடபம்: | சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | தொழில் மந்தம், பணவிரயம். | பகல் 12 மணி |
| **திங்கள்**- | வெளியிட வாழ்க்கை, மனப் போராட்டம். | காலை 7 மணி |
| **செவ்வாய்**- | புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 4 மணி |
| **புதன்**- | தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- | அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை 7 மணி |
| **வெள்ளி**- | பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |
| **சனி**- | பணக்கஷ்டம் நீங்கும், ஆடம்பரச் செலவு. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6**

### மிதுனம்: | சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| **திங்கள்**- | வீண் சந்தேகம், குடும்பப் பிரச்சனை. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- | தொழில் மந்தம், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| **புதன்**- | மனக் கிலேசம், பணச்சிக்கல். | பகல் 12 மணி |
| **வியாழன்**- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 9 மணி |
| **வெள்ளி**- | அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **சனி**- | தொழில் கேடு, பலவித பிரச்சனை. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### கர்க்கடகம்: | சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | மனக்குறை நீங்கும், எதிர்பார்த்த சிறப்பு. | காலை 7 மணி |
| **திங்கள்**- | பயனற்ற செயல், மனக்கவலை. | பகல் 11 மணி |
| **செவ்வாய்**- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| **புதன்**- | புதிய முயற்சி, அந்நியர் சகாயம் | பகல் 12 மணி |
| **வியாழன்**- | வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| **வெள்ளி**- | வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| **சனி**- | எதிர்பார்த்தது வெற்றி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7**

### சிம்மம்: | சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **திங்கள்**- | துயர் நீங்கும், பூமியால் இலாபம். | பி.ப. 1 மணி |
| **செவ்வாய்**- | தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | காலை 8 மணி |
| **புதன்**- | வீண் குறை கேட்டல், மனப்பயம். | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- | துயர் நீங்கும், கருமங்களில் வெற்றியுண்டு. | பி.ப. 3 மணி |
| **வெள்ளி**- | காரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| **சனி**- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4**

### கன்னி: | சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| **திங்கள்**- | வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | காலை 9 மணி |
| **செவ்வாய்**- | பொருள் வரவு, தெய்வானுகூலம். | காலை 8 மணி |
| **புதன்**- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **வியாழன்**- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- | துயர் அதிகம், பொருள் இழப்பு. | பி.ப. 1 மணி |
| **சனி**- | மனமகிழ்ச்சி, கௌரவ மிகுதி. | பி.ப. 3 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9**

### துலாம்: | சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | தொழில் சிறப்பு, கடன்படல். | காலை 7 மணி |
| **திங்கள்**- | வெளியிடப்பயனம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- | காரிய சித்தி, பொருள்வரவு. | காலை 8 மணி |
| **புதன்**- | பயனற்ற செயல், மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| **வியாழன்**- | பெரியோர் உதவி,பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| **வெள்ளி**- | உயர்ந்த எண்ணம், சுபகாரிய மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **சனி**- | பயனற்ற செயல், பணச் செலவு. | பகல் 11 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7**

### விருட்சிகம்: | சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| **திங்கள்**- | பொருள் விரயம், பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- | பெரியோர் உதவி, அரச சன்மானம். | காலை 10 மணி |
| **புதன்**- | காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 11 மணி |
| **வியாழன்**- | பொருள் வரவு, பலவித பேறு. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- | மனக்குறையதிகம், தேகசுகம் பாதிப்பு . | காலை 7 மணி |
| **சனி**- | உயர்ந்த நிலை, தொல்லையதிகம். | பகல் 11 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6**

### தனு: | சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 9 மணி |
| **திங்கள்**- | பொருள் வரவு, மகிழ்ச்சி நிலை. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- | துயர் நீங்கும், காரியசித்தி. | காலை 8 மணி |
| **புதன்**- | பொருள் நஷ்டம், மனக்கிலேசம். | பகல் 11 மணி |
| **வியாழன்**- | வீண் குறைகேட்டல், பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| **வெள்ளி**- | காரிய சித்தி, பொருள் சேர்க்கை. | பகல் 12 மணி |
| **சனி**- | தொழில் சிறப்பு, கௌரவம். | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -1**

### மகரம்: | சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- | தொழிலில் பிரச்சனை, முயற்சிக்கேடு. | காலை 7 மணி |
| **செவ்வாய்**- | அந்நியர் நட்பு, பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| **புதன்**- | தொழிலில் மந்தநிலை, மனக்கவலை. | காலை 7 மணி |
| **வியாழன்**- | வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| **வெள்ளி**- | உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **சனி**- | அந்நியர் சகவாசம், பணக்கஷ்டம். | காலை 7 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -7**

### கும்பம்: | சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | தொழிலில் சிறப்பு, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| **திங்கள்**- | கௌரவக் குறைவு, தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| **செவ்வாய்**- | புதிய முயற்சி, பணச்செலவு. | பகல் 11 மணி |
| **புதன்**- | காரிய சித்தி, பொருள்வரவு. | பகல் 12 மணி |
| **வியாழன்**- | வீண்குறை கேட்டல், மனவேதனை. | காலை 6 மணி |
| **வெள்ளி**- | தனலாபம், பெரியோர் நட்பு. | பகல் 11 மணி |
| **சனி**- | பொருள் இழப்பு, செலவு மிகுதி. | காலை 8 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9**

### மீனம்: | சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)


| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- | பொருள் நட்டம், மனக்கவலை. | பி.ப 2 மணி |
| **திங்கள்**- | அந்நியர் உதவி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- | வீண்கவலை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| **புதன்**- | பயனற்ற செயல், பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |
| **வியாழன்**- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| **வெள்ளி**- | மனக்கவலை குறையும், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| **சனி**- | தொழில் சிறப்பு, பொருள் நிலை கஷ்டம். | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5**



காற்றை யடைப்பது மனதாலே-இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையிலே,
சோற்றைப் புசிப்பது வாயாலே-உயிர்
துணி வுறுவது தாயாலே.

-சுப்பிரமணிய பாரதியார்.



## நேரம் ஒதுக்குங்கள்

- ★ சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்:- அது இதயத்தின் இசை.
- ★ சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்:- அது சக்தியின் பிறப்பிடம்.
- ★ விளையாட நேரம் ஒதுக்குங்கள்:- அது இளமையின் இரகசியம்.
- ★ படிக்க நேரம் ஒதுக்குங்கள்:- அது அறிவின் ஊற்று.
- ★ நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள்:- அது மகிழ்ச்சியின் வழி.
- ★ உழைக்க நேரம் ஒதுக்குங்கள்:- அது வெற்றியின் விலை.

கந்தப்பெருமாள்-நிமலதீர்சன்-மட்.மாங்காடு, ச.வி.செட்டிபாளையம்.

# நானூறுகாய்....!

### பாப்பா முரசு சிறு கதை

ஓர் ஊரில் தணிகாசலம் என்ற வியாபாரி இருந்தார். அவர் எண்ணெய் மிளகாய், புளி வியாபாரம் செய்து வந்தார். அவரது தோட்டத்தில் மா, பலா, தென்னை, எலுமிச்சை என்று பல மரங்கள் இருந்தன. அவைகள் தரும் காய்களையும், கனிகளையும் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பார்.

அவருக்கு பக்கத்து ஊரில் சிறுங் குன்றனார் என்னும் ஒரு நண்பர் இருந்தார். சிறுங்குன்றனார் ஒரு தமிழ்ப் புலவர். சிறுங்குன்றனார், தணிகாசலத்தின் வீட்டிற்கு வருகின்ற போதெல்லாம் அவருக்கு விருந்தளிப்பார்.

ஒருமுறை அவர் தணிகாசலத்தின் வீட்டிற்கு வந்தபோது, தணிகாசலத்தின் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தார். அங்கிருந்த எலுமிச்சை மரங்கள் பூத்துக் காய்க்கத் தொடங்கியிருந்தன. இதைப் பார்த்த சிறுங் குன்றனார்,

"நண்பரே! இச்சிறுகாய்கள் எல்லாம் பெரிய காய்களாக நன்கு வளர்ந்து ஊறுகாய்போட ஏற்றதானதும் எனக்கு நூறு காய்கள் அனுப்பி வைக்க முடியுமா?" என்று கேட்டார்.

"சரி நான் நூறு காய் அனுப்பி வைக்கிறேன்" என்று கூறினார் தணிகாசலம். சிறுங்குன்றனார் மகிழ்வுடன் தன் ஊக்குப் புறப்பட்டுச் சென்றார்.

சில நாட்களில் சிறிய காய்களாக இருந்த எலுமிச்சங்காய்கள், பெரிதாயின. எலுமிச் சங்காய்களைப் பறித்து அவற்றில் மிகவும் பெரிதான காய்களாக தம் நண்பர் சிறுங்குன்ற னாருக்காக எடுத்து வைத்தார் தணிகாசலம்.

அந்த நூறு காய்களை ஒரு பையில் போட்டுக் கட்டி, ஒரு கடிதமும் தம் நண்பருக்காக எழுதினார். 'நான் நூறுகாய் அனுப்பியிருக்கிறேன்.' என்று எழுதிய கடிதத்தையும், எலுமிச்சங்காய் பையையும் தம் வேலையாள் ஒருவனிடம் கொடுத்து, சிறுங்குன்றனாரிடம் இரண்டையும் சேர்ப் பித்து விட்டு வரச்சொன்னார்.

அவைகளை எடுத்துக்கொண்டு சிறுங் குன்றனாரின் ஊரையடைந்த வேலையாள், அவரிடம் முதலில் எலுமிச்சங்காய் நிறைந்த



பையைக் கொடுத்தான். அதை வாங்கிப் பிரித்துப் பார்த்த சிறுங்குன்றனார் பேரானந் தமடைந்தார்.

வேலையாள், "ஐயா! என் முதலாளி தங்களுக்கு ஒரு கடிதமும் கொடுத்துள்ளார்," என்று சொல்லி மடியிலிருந்த கடிதத்தை எடுத்துக்கொடுத்தான்.

கடிதத்தைப் படித்துவிட்டு, வேலையாளையும், எலுமிச்சங்காய்களையும் மாறிமாறிப் பார்த்தார் சிறுங்குன்றனார். அவரது முகம் கோபத்தால் சிவந்தது.

"என்னை ஏமாற்றவா பார்க்கிறாய்?" என்று கத்தினார் அவர்.

வேலையாள் நடுநடுங்கிப் போய் விட்டான். முதலாளி கொடுத்த நூறு காய்களையும் ஒன்று கூடக் குறையாமல் அப்படியே கொண்டுவந்து கொடுத்துவிட்ட தன்னை சிறுங்குன்றனார் ஏன் கோபிக்கிறார் என்று புரியவில்லை.

"ஐயா என்ன சொல்கிறீர்கள்? நான் உங்களை ஏமாற்றி விட்டேனா?" என்று பதறியபடி கேட்டான்.

"ஆமாம்," என்றார் சிறுங்குன்றனார்.

"புரியும்படி சொல்லுங்கள் ஐயா!" என்று கெஞ்சினான் வேலையாள்.

"என் நண்பர் தணிகாசலம் மிளகாய் வற்றல், உப்பு, புளி, எண்ணெய் எல்லாம் வியாபாரம் செய்யும் ஒரு வியாபாரி. செல்வந்தர். நானோ ஏழைப் புலவன். நூறு எலுமிச்சங்காயை நான் ஊறுகாய் போட வேண்டுமென்றால் அதற்கு மிளகாய், உப்பு எல்லாம் எவ்வளவு வேண்டும்? என்னால் அவ்வளவு முடியாதே. அதனால் நான் கஷ்டப்படக் கூடாதென்று எண்ணிய என் அருமை நண்பர், எல்லாக் காய்களையும் ஊறுகாயாகவே, 'நானூறுகாய் அனுப்பி யிருக்கிறேன்' என்று கடிதத்திலும் எழுதியுள்ளார். நீயோ அவ்வளவு ஊறு காயையும், உன் வீட்டில் மறைத்து வைத்து விட்டு வெறும் நூறு காய்களை மட்டும் என்னிடம் கொண்டு வந்து கொடுத் திருக்கிறாய். என்னை இப்படி ஏமாற்றி யல்லவா இருக்கிறாய்?" என்று படபடவென்று கூறினார் சிறுங்குன்றனார்.

அதைக் கேட்ட வேலையாள், தான் இதை எப்படி புலவருக்கு விளங்க வைப்பது என்று தெரியாமல் தவித்தான்.

கடிதத்தையும், எலுமிச்சங்காய்களையும் எடுத்துக்கொண்டு அவ்வூரில் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லும் பெரியவரிடம் சென்றான் வேலையாள். உடனே, சிறுங்குன்றனாரை அழைத்து வரச் சொல்லி ஆள் அனுப்பினார் அந்தப் பெரியவர். சிறுங்குன்றனாரும் வந்து சேர்ந்தார்.

தன் முதலாளி வெறும் நூறு காய்களைத் தான், தன்னிடம் கொடுத் தனுப்பியதாக வேலையாள் சொன்னான்.

"இல்லையில்லை. என் கஷ்டம் அறிந்து என் நண்பர் ஊறுகாய் தான் அனுப்பியுள்ளார்" என்று சொன்னார் சிறுங்குன்றனார்.

அக்கடிதத்தைப் படித்த பெரியவர், "நீங்கள் இருவரும் சொல்வதுபோல் தணிகாசலம் வெறும் நூறுகாயையும் அனுப்பவில்லை, ஊறுகாயையும் அனுப்பவில்லை!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

"பிறகென்ன அனுப்பினார்?" என்று வேலையாளும், சிறுங்குன்றனாரும் ஒரே குரலில் கேட்டனர்.

"நானூறு காய்கள் அனுப்பியிருக்கிறார் தணிகாசலம். ஆனால் இந்த வேலையாள் முன்னூறு காய்களை, தான் எடுத்துக் கொண்டு, மீதம் நூறு காயை மட்டும் கொண்டுவந்து கொடுத்திருக்கிறான்," என்றார் பெரியவர்.

வேலையாளின் பாடு திண்டாட்ட மாகிவிட்டது.

நல்ல வேளையாக, அவசர வேலை நிமித்தம் அவ்வூருக்கு வந்த தணிகாசலம், விபரம் அறிந்தார் அவர்.

நான் என் வேலையாளிடம் உண்மை யில் நூறு காய்கள்தான் அனுப்பினேன். அதை தனித்தனியாக ஒவ்வொரு வார்த்தை களாகப் பிரித்து எழுதாமல், 'நானூறுகாய் அனுப்பியிருக்கிறேன்' என்று எழுதி அனுப் பியதை, 'நான் ஊறுகாய் அனுப்பி யிருக்கிறேன்', நானூறு காய் அனுப்பி யிருக்கிறேன்,' என்று ஒவ்வொருவரையும் ஒவ்வொரு பொருள் கொள்ள வைத்து விட்டது", என்றார்.

வேலையாள் நிம்மதி அடைந்தான்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20.05.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 90
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 87

பரிசுக்குரியவர்:
அன்டனி டெக்ஸ்டர் பெர்னான்டோ.
சென். பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு 13.

பாராட்டுக்குரியவர்கள்

எஸ். வியூரகன்.
மட்/குருமண்வெளி சிவசக்தி மகாவித்தியாலயம்.

ஏ.எஃப். சஜீதா.
பு/பாத்திமா ம. மகா வித்தியாலயம்.

எஸ். பிலிப் ஏப்ரகாம்
சென். ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன்.

பாத்திமா சபானா சாதிக்
இரத்தினபுரி

ஏ.ஜி.எப். நிஸ்மியா
பாத்திமா மகளீர் மகா வித்தியாலயம். புத்தளம்

எம்.எச். பாத்திமா சிஃனாஸ்
கல்பிட்டி.

## வயதான கிளி



உலகில் 340 வகையான கிளிகள் உள்ளன. அவற்றில் பலவகையான கிளிகள் நீண்டநாள் வாழக் கூடியவை. லண்டன் நகர மிருகக் காட்சிச்சாலையில் உள்ள ஒரு கிளி 82 வயதுவரை வாழ்ந்தது. கூண்டுகளில் வளர்க்கப்படும் பறவைகளிலேயே அதிக காலம் வாழ்ந்த பறவை இதுதான்.

இதற்கு முன்னர் மொஸ்கோ நகரில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் வாழ்ந்த 'காண்டார்' கழுகு 77 வயதுவரை வாழ்ந்தது.

## விடுகதைகளும் விடைகளும்

01. ஏற்றம் இறைக்காமல் கிணறு வற்றுகிறது. அது என்ன?
02. கண்ணிருக்கும் மனிதனல்ல, பாலிருக்கும் பசு அல்ல. அது என்ன?
03. கண்டு பூப்பூக்கும், காணாமல் காய்காய்க்கும். அது என்ன?
04. மேலை வீதியில் இருப்பதென்ன? மாதர் கையில் ஜொலிப்பதென்ன?
05. ஒரு கிளையில் சோற்றுப்பிடி. என்ன அது?
06. ஆயிரம் கண்ணாள் ஆற்றிலே மூழ்கி வெயிலிலே காய்கிறாள். யார் அவன்?
07. உயிருக்குள் சடம். சடத்துள் உயிர். அது என்ன?

**விடைகள்**

01. விளக்கு 02. தேங்காய்
03. நிலக்கடலை 04. வளையல் 05. குருவிக்கூடு
06. மீன்பிடிவலை 07. முட்டை

மோ.தமிழரசி-மத்திய கல்லூரி-கிளிநொச்சி.

## வாரம் ஒரு நாடு

### பிரேஸில்

**அமைவிடம்:** பிரேஸில் தென் அமெரிக்காவின் கிழக்கேயுள்ள மிகப் பெரியதும் வளங்கள் நிறைந்ததுமான நாடு.

**பரப்பளவு:** 8,512,000 சதுர கி.மீ. (3,286,470 சதுரமைல்)

**மக்கள் தொகை:** 153,992,000

**தலைநகர்:** பிரேஸீலியா (1,980,000பேர்)

**ஆட்சிமுறை:** சமஷ்டிக் குடியரசு.

**பேசும் மொழி:** போர்த்துக்கீச மொழி



**மதம்:** உரோமன் கத்தோலிக்கம்

**சிறப்பம்சங்கள்:** தென் அமெரிக்காவிலுள்ள நாடுகளில் பரப்பளவாலும் மக்கள் தொகையாலும் கூடிய நாடு. இயற்கை வளங்கள் அபரிமிதமாகக் காணப்படுவதால் தனிநபர் வருமானமும் அதிகமாகும். இந்நாட்டின் பெரும் பகுதி வெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளது. அமேஸான் மற்றும் செளஃபிரான்சிஸ்கோ ஆகிய இரு பெரிய நதிகள் நாட்டின் வட பிரதேசத்தை செழிப்படைய உதவுகின்றன. நாட்டின் வடகிழக்கு, கிழக்கு மற்றும் தென் பகுதிகளை அத்லாந்திக் பெருங்கடல் அரவணைத்துக்கொண்டிருக்கிறது.

மக்கள் தொகையில் 35 சதவீதமானோர் நகரங்களிலேயே வாழ்கின்றனர். தேசிய உற்பத்தியை உருவாக்கும் தொழிற்சாலைகள் இந்நகரங்களில் அமைந்திருப்பதனால்தான் மக்கள் இந்நகரங்களில் அதிகமாகக் குவிந்து கிடக்கின்றனர்.

1960 ஏப்ரல் 21ம் திகதியன்றே - நவீனமாக வடிவமைக்கப்பட்ட பரேஸிலியா நகரம் தலைநகராகப் பிரகடனப் படுத்தப்பட்டது. கப்பல் கட்டும் தொழில், மோட்டார் உற்பத்தி, துணி ஆலைகள், உலோகங்கள், இரசாயனப் பொருட்கள் உற்பத்தி ஆகிய அனைத் தும் நகரங்களில்தான் குவிந்துள்ளன.

பிரேஸில் நாட்டின் கோப்பிக்கு உலகனைத்தும் பெரு மதிப்புண்ட. வாழைப்பழம், கரும்பு, மரவள்ளி ஆகியவையும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

எண்ணை உற்பத்தி தேசிய மயமாக்கப்பட்டுள்ளது. இரும்பு, பொஸ்ஃபேட் நிலக்கரி, செம்பு, மாங்கனீசு, பிளாட்டினம் மற்றும் தங்கம் ஆகிய கனிமப்பொருட்களும் இங்கு கிடைக்கின்றன.

**பார்க்கவேண்டியவை:** உலகிலுள்ள பெரிய நகரங்களில் ரியோ டி ஜெனரோவும் ஒன்றாகக் கணிக்கப்படுகிறது. நாட்டின் வரலாற்றுடன் தொடர்புடைய காட்சிச் சாலைகள் இங்குள்ளன. தடப வெப்ப நிலை இந்நகரில் சமமாக உள்ளமையினால் இங்குள்ள கடற்கரை உல்லாசப் பயணிகளின் சொர்க்கமாக திகழ்கிறது. இங்குள்ள இம்பீரியல் மியூசியம் எனும் காட்சிச் சாலையில் பண்டைய அரசர்களுடைய அணிமணிகள், சிம்மாசனங்கள் முதலியன வைக்கப்பட்டுள்ளன.

பல நகரங்களிலும் கேளிக்கைகளும் மத சார்புள்ள திருவிழாக்களும் கண்கவர் காட்சியாக விளங்குகின்றன.

பிரேஸிலின் தேசிய விளையாட்டாக உதை பந்தாட்டம் விளங்குவதால், உலகில் மிகப் பெரிய விளையாட்டரங்கம் ரியோ டி ஜெனரோவில் அமைந்துள்ளது.

ச ஓ பௌலோ எனும் நகரில் ஏறத்தாழ 11,000,000 மக்கள் வாழ்கின்றனர். இங்கிருந்து சுமார் ஒருமணி நேரம் மோட்டாரில் சென்றால், 'சிம்பா சபாறி' என்ற வனவிலங்கு காப்பரண் உள்ளது. இயற்கை வனச் சூழலில் சகல வன விலங்குகளையும் மிக அண்மையில் சென்று பார்க்கத்தக்க வசதிகளுண்டு.

ஒவ்வொரு அபசகுனங்களையும் ஒரு பகல் முழுக்க எதிர்கொண்டாயிற்று! எப்படியும் புறப்பட்டு விடலாம் என வெளியே காலடி வைத்தபோது எதிரியும் அவன் எடுபிடியும் வந்து நிற்கிறார்கள். நீலகண்டன் பற்களைக் கடித்துக் கொண்டார். பவத்ராதனோடு அவர் பேசியது அவ்வளவுமே ரோஷமுள்ளவன் கழுத்தில் தூக்கைப் போட்டு தொங்க வேண்டிய கடும் சொற்கள்!

அவ்வளவையும் புன்சிரிப்போடு காதில் வாங்கிக் கொண்ட பவத்ராதன் ஏதோ ஒரு திட்டத்தோடுதான் வந்திருக்கிறார் என்று தெளிவான பிறகுதான் மகனையும் இல்லத்தாரையும் எச்சரிக்கையுடன் இருக்கச் சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்தார்.

இரவாகி விட்டது!

எத்தனை பணமானாலும் சரி..... குதிரை வண்டிக்காரனைப் போய் அழைத்துக் கொண்டு உடனே அக்கினி மலைக்குப் போயாக வேண்டும்! மூன்று நாள் போக...மூன்று நாள் வர.

பவுர்ணமிக்கு இனியும் ஆறு நாள் தான் இருக்கிறது.

சந்திரன் சாவதானமாகத்தான் உதயமாவான். அதனால் நட்சத்திரங்களுக்கெல்லாம் ஏராளமான குதூகலம்! ஒவ்வொன்றும் மின்னி மின்னிப் பகட்ட ஆரம்பித்திருந்தது!

ஏதேதோ கணக்குப் போட்டுக் கொண்டுதான் குறுக்கு வழியாக வரப்பில் இறங்கி சம்மந்தியின் தென்னந்தோப்பு வழியாகப் போய்க் கொண்டிருந்தார் நீலகண்டன் திருமேனி.

பேயாட்டம் ஆடுகிற தென்னை மரங்களோ அங்கிருந்த கன்னங்கரிய இருட்டோ எதுவுமே அவருக்கு இப்போது ஒருபொருட்டு அல்ல! குதிரை வண்டிக்காரனும் அவரிடம் முரண்டு பண்ணக் கூடாது!

இதுதான் நீலகண்டனின் நெஞ்சுக்குள்.

போகிற அவசரம் தெரிந்து அவன் வேறு ஏதாவது சாக்குப்போக்குச்சொல்ல ஆரம்பித்தால் அவனது வண்டியையும் குதிரையையுமே ஒருவிலை போட்டு வாங்கி விடலாம் என்றுதான் தோளில் அவ்வளவு பணத்தையும் மூட்டை கட்டிப் போட்டுக் கொண்டிருந்தார் அவர்.

இப்போது பணம் முக்கியமல்ல! கோகுலைப் பிடிக்கப் போகிற ஆபத்து பாலேக்கல் பாரம்பரியத்தையே பூண்டறுத்துப் போடுகிற சமாச்சாரம்! அவனைக் காப்பாற்றியாக வேண்டும். என்றென்றும் அவன் நிம்மதியாய் இருக்க வேண்டும்! அதற்காக இவ்வளவும்.

அக்கினிபர்வதத்தைப் பற்றி நீலகண்டனுக்கும் கேட்டறிந்த அனுபவம் தான்! அங்கே முன் எப்போதும் போனதில்லை!

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அந்த மலைக்குப் போயே ஆகவேண்டும் என்று சொல்வார்கள். அதைக் கேட்ட போதெல்லாம் நீலகண்டன் சிரித்ததுண்டு. இப்போது? அவர்கள் சொன்னது தான் சத்தியவார்த்தை!

சாகும் முன்னால் போகாதவனும் செத்தபிறகு போய்ச்சேருகிற இடம்தான் அக்கினிமலை! கதிமோட்சம் இல்லாத ஆத்மாக்கள் எப்படியும் அந்த மலைக்குப் போன பிறகுதான் சாந்தி அடையும் என்றும் சொல்வார்கள். இதையெல்லாம் நீலகண்டன் நம்பியதில்லை.

ஆனால் இப்போது?

அவரையே விதி அக்கினி மலைக்கு இழுத்துப் போகிறது!

இதையெல்லாம் மனசுக்குள் போட்டுக் குழப்பிக் கொண்டே தென்னந்தோப்பைத் தாண்டுவதற்குள்-

யாரோ அலறும் சத்தம்!

சட்டென்று நின்றார் நீலகண்டன். பழக்கமே இல்லாத ஒருபெண் குரல். பச்சாதாபம் கொள்ளச் செய்கிற அவலம். காதுகொடுத்துக் கேட்டார்.

ஆபத்தில் மாட்டிக் கொண்டதைப் போன்ற அழுகை. இரக்கம் வந்தது நீலகண்டனுக்கு.

போகிற வழியில் ஒரு புண்ணியம்!

உதவிவிட்டுப் போகலாமென்று நினைத்தார் அவர்! இதற்கு அதிக நேரம் பிடிக்காது என்றால் ஒரு கை உதவுவது ஒன்றும் தப்பு இல்லை! ஒரு வேளை-இந்த உதவிக்குச் சம்பளமாக தனக்கும் ஏதாவது ஒரு உதவி அகப்படலாம்! முன்கை நீண்டால்தான் முழங்கை!

நீலகண்டன் இதை நினைத்துப் பார்த்தபிறகு....

அங்கே நின்று கொண்டிருக்கவில்லை. அழுகைச் சத்தம் கேட்ட திசையை நோக்கி ஓடினார்.

அது கொப்பரை போட்டு வைக்கிற இடம்!

காயப்போடவும், காய்களைக் கொண்டு வந்து போடவும் முன்னால் காரை போட்டு மெழுகிவிடப்பட்டிருந்தது. மொத்த இடமும் தூசு துப்பு இல்லாமல் சுத்தமாகத் தெரிந்தது! ஆனால் எதிரில் கிடங்கு போலிருந்த அந்த அறை...? அழுகையே அங்கிருந்து தான். யாரோ உள்ளிருந்து முக்கலும் முனகலுமாகப் புலம்பிக் கொண்டிருந்தார்கள்.....

"இந்தப் பூட்டை உடைச்சு என்னைக் காப்பாத்துங்களேன்! யாராவது வாங்களேன்...."

□□

குஞ்சன் வழியெல்லாம் பொருமிக் கொண்டே வந்தான். அவனுக்கு தனது எஜமான் மறுபடியும் அந்த மனைக்குப் போனது மானபங்கப் பட்டமாதிரி இருந்தது!

எவ்வளவு சொல்லியும் திருமேனி கேட்கவில்லையே!

"இனி என்ன திருமேனி? இத்தனை அவமானத்துக்கப்புறமும் மறுபடியும் எதுக்கு யோசிக்கறீங்க? அந்த மனுஷனுக்குப்போய் உதவப் போனீங்களே....."

மௌனமாகத் திரும்பிப் பார்த்தார் பவத்ராதன்.

மறுபடியும் ஒரு புன்னகை.

"அடேய்! நான் கோகுலை மட்டும் மனசிலே வச்சுட்டு உதவப் போகலேடா!"

"திருமேனி என்ன சொல்றீங்க?"

"நீலகண்டன் சரியான நேரத்துக்குப்போய் சரியான நேரத்துக்கு மகாசூலத்தோட திரும்பிவர முடியலேன்னா ஆபத்து கோகுலுக்கு மட்டுமில்லே!"

குஞ்சனின் முகத்தில் சந்தேகம்.

"திருமேனி!"

"ஆமாடா! அந்தப் பிசாசு 'அல்ப கல்பமான' பிசாசில்லே! இந்த உலகத்திலே ஆண் வர்க்கமே இருக்கக்கூடாதுன்னு பழிவாங்கத் துடிக்கிற பிசாசு! அதுக்குச் சக்தி வந்தா பத்ராவுக்கு இரண்டாம் ஜென்மம் வலுவாயிடும். அப்புறம்? மீசை முளைக்க ஆரம்பிக்கிற வாலிபன் எவனா இருந்தாலும் அவனை அழிச்சுட்டுத்தான் அது அடங்கும்."

பவத்ராதன் சொன்னதைக் கேட்டதுமே குஞ்சனின் முகத்தில் லேசான பயம்.

மிரட்சியோடு அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

"கேட்டதுமே எதுக்காகப் பயப்படறே? அந்த பத்ராவுக்கு இளமையும் துடிதுடிப்பும் இருக்கிறவங்க மேல தான் வெறி. உன்னைப் போல இருக்கிறவங்க எதுக்குப் பயப் படணும்?"

பவத்ராதன் சிரித்தார்.

"திருமேனி! உங்க கண்ணுக்கு நான் ஒருமாதிரியாத் தெரிஞ்சாலும்..என் வீட்டுக்காரி கண்ணுக்கு இனியும் இரத்தத் துடிப்புள்ளவனாத்தான் தெரியறேன் திருமேனி. அதனாலே தான் பயமா இருக்கு!"

வெட்கத்தோடு தலையைக் குனிந்து கொண்டான் குஞ்சன்.

அவனுடைய ஐம்பத் ஐந்து வயதுக்கு இனியும் இரத்தத் துடிப்பு இருந்த சமாச்சாரத்தை அறிந்து கொள்வதை விட திருமேனிக்கு வேறொன்றில் அப்போது அவசரம் இருந்தது!

அது ஆனந்த குரு தன்னிடம் சொன்ன விஷயம்.

"மகாசூலம் எடுக்கிற விஷயத்திலே பவத்ராதனும் சேர்ந்தாத் தான் பயன் ஏற்படும்னு எனக்குப் படுது. நீலகண்டனும் என் சீடன் தான். இருந்தாலும் அவன் மேல நம்பிக்கையில்லே! இப்ப முக்கியம் பத்ராவுக்கு மறுஜென்மம் வளரக் கூடாதுங்கறது மட்டும்தான்! இதை மனசில இருத்திக்க!"

அதனால் தான்-

இல்லத்துக்குள் நுழைந்ததுமே பரபரப்பானார் பவத்ராதன்.

"தமாஷ் அப்புறம். இப்ப நீயும் போய் தயாராயிடு. நாம உடனே அக்கினி மலைக்குப் புறப்படணும்."

"நானும் வரணுமா திருமேனி?"

"வரணும்!"

சொல்லிவிட்டு அவர் பூஜை அறைக்குள் வேகமாகப் போனதும்; அரை நாழிகை ஈஸ்வர பூஜை ஆரம்பித்ததும்... விக்கினங்கள் எதுவும் வந்து குறுக்கிடக் கூடாது என்பதற்காகத்தான்!

அப்புறம்?

எந்தத் தடையுமின்றி மேலிடம் மாந்த்ரீகனும் அவரது எடுபிடி குஞ்சனும் அக்கினி பர்வதத்துக்கு அன்று அந்திக்குள்ளாகவே புறப்பட்டு விட்டனர்! இது நீலகண்டன் நம்பூதிரிக்குத் தெரியாது! அதைவிட அக்கினி பர்வதத்துக்கு பலமுறை போயிருக்கும் பவத்ராதன் எந்தவழியில் போனால் எவ்வளவு சீக்கிரம் போகலாம் என்பதையும் தெரிந்து வைத்திருந்தவர். இதுவும் நீலகண்டனுக்குத் தெரியாது.

இதைச் சொல்ல வந்தவரையும் சொல்லவிடாமல் தடுத்து விட்டது நீலகண்டனின் தன்முனைப்பு உணர்வும், பகைமையும்!

இப்போது? போகிற பயணத்துக்குப் புண்ணியம் தேடுவதற்காகப் போயும் போயும் கொப்பரைக் கிடங்குக்குள்... மாட்டிக் கொண்டுவிட்டார் மகா மாந்த்ரீகன் நீலகண்டன் திருமேனி.

பூட்டிய அறைக்குள் யாரோ புலம்புவது கேட்கிறது...

"எழுந்து இப்படி வாம்மா....நீயாரு?"

"எப்படி வர....? பூட்டிப் போட்டுப் போயிருக்காங்களே!" திருமேனி பூட்டைப் பார்த்தார். உள்ளே விரிந்து கிடந்த இருட்டையும் பார்த்தார். சுற்று முற்றும் கண்களால் துளாவினார்! அந்தப் பூட்டைத் திறந்து விட்டு விட்டாலே கூடப் போதும்!

பாவம் அந்தப் பெண். தப்பியோடி விடுவாள் என்கிற கரிசனம் நீலகண்டன் திருமேனிக்கு.

அவர் கண்களில் ஒரு காட்சி.

தேங்காய் உரிக்கிற கட்டையொன்று ஓரமாய் உருண்டு கிடந்தது.

அதனைப் போய் எடுத்தார் நம்பூதிரி. மறுநிமிடமே பூட்டின் மீது ஒரே போடு!

பூட்டு மட்டுமில்ல.... கதவும் திறந்து கொண்டது!

"வா...வா..! கதவு திறந்தாச்சு! நான் பலகாதம் போகணும். உனக்காகக் காத்திருக்க நேரமில்லை...! ஓடி வாம்மா! வழியிலே உன்னைப் பத்திரமா ஒப்படைச்சுட்டுப் போறேன்...." கூப்பிட்டார் நம்பூதிரி.

"என்னாலே வர முடியலையே...."

மறுபடியும் கேட்டது புலம்பல்.

திடுக்கிட்டுப் போனார் நீலகண்டன்.

"பூட்டைத் திறந்தாப் போதும்னே...திறந்தாச்சு! ஏன் வெளியே வரமுடியலே...?"

"என்னை பூட்டி வச்சிருக்கிற அறை இதோ இந்தப்பக்கம்!"

கதவை எட்டி உதைத்து விட்டு உள்ளே புகுந்தார் அவர்.

"இங்கேயும் ஒரு பூட்டா?"

கையிலிருந்த கட்டையால் அடிக்கத் தான் அந்த உள்ளறைப் பூட்டைத் தேடினார். கையை விட்டுத் துளாவினார். இருட்டுக்குள் எதுவும் தெரியவில்லை. "எங்கேம்மா இருக்கு உள்ளே கதவு?"

கேட்டபடியே இருட்டில் தடவியபோது தான் நீலகண்டன் நம்பூதிரியின் கைகளில் ஸ்பரிசித்தது அந்தப் பெண்ணின் உடம்பு!

விருட்டேன்று விலக்கிக் கொண்டார் வலதுகையை.

அப்படியானால்...? அங்கே கதவு இருப்பதாகச் சொன்னதும்... பூட்டப் பட்டிருப்பதாகப் புலம்பியதும்...

"யாரு நீ...?"

கத்தினார் நீலகண்டன்! பதிலுக்கு வந்தது ஒரு பரிகாசச் சிரிப்பு.

"ஏய்...என்னை ஏமாத்தறியா? யாரு நீ...?"

பத்ராவின் கண்கள் அந்தப்பக்கம் இரண்டு கோழி முட்டைகளைப் போல உருண்டன.

கோகுலின் மீது காட்டமுற்பட்ட வெறியை இந்தக் கிழட்டுத் திருமேனியிடம் காட்ட எத்தனித்தாள் பத்ரா!

"ஐயா என்னை யாரோ பின்னால இழுக்கறாங்க! என்னை பிடியுங்க!"

# 20 மகாசூலம்



பத்ராவின் கட்டளைக்குச் சுமதிதான் மறுபடியும் அலறினாள்.

ஆனால் அது சுமதி என்பது நீலகண்டனுககுத் தெரியாது! எனவேதான் அவளை அந்த இக்கட்டிலிருந்து மீட்க நினைத்த திருமேனி மறுபடியும் கைகளை நீட்டினார். கட்டை தரையில் உருண்டது! இருட்டுக்குள் யாரோ ஒரு பெண்ணைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு போகிறார்கள் என்பது புரிந்தது. கைக்கு அகப்படாமல் அந்தப் பெண்ணின் உடம்பு பின்னுக்குப் போய்க் கொண்டே இருந்தது.

நீலகண்டன் விடவில்லை!

ஒரு மகாமாந்த்ரீகனோடு விளையாட்டா? கோபம் அவரது கண்களில் தீட்சண்யமாயிற்று.

"விடுடா அவளை!" கத்தியவர் அப்படியே தாவிப்பிடித்தார்.

பிடித்த பிறகுதான் அந்த உடலின் முழுப்பாரமும் அவரது கைகளுக்குள் அணைந்ததே புரிந்தது! தொட்டுத் தடவினார் திருமேனி.

தொடத் தொடத்தான் தெரிந்தது-அந்தப் பெண்ணுக்கு உடம்பில் எங்கேயும் ஆடையில்லை!

திருமேனியின் மனசுக்குள் சூடுஏறியது.

காரணம் அவள் அவரைப் பற்றிப்பிடித்திருந்த விதமும், பதமும்!

ஒரே ஒரு நிமிசம் தான்! தான் புறப்பட்டது எங்கே? போக வேண்டிய இலட்சியம் எது....?எல்லாமே மறந்தது அவருக்கு!

யாரோ அங்கிருந்து தப்பி ஓடுவதைப் போலிருந்தது!

ஓடியது பத்ரா மட்டுமில்லை! திருமேனியின் நினைவுகளும் தான்! அவர் அப்போது வெறும் ஒரு மிருக சுபாவத்தோடு..! அந்தப் பெண்ணுக்குள் சுகம் தேடும் பரபரப்போடு...! பலகாலம் மறந்து விட்ட விரகத்தின் வெறியோடு!

திருமேனியும் வெறும் மேனியானார்! அவர் அப்படியே வெகுநேரம் அந்தக் கிடங்குள் தன்னை மறந்து கிடந்தபோதுதான் ஒன்பதாம் சத்திரப் பிறையை அதுவரை மூடியிருந்த மேகம் விலகியது. அந்த அறைக்குள் வெளிச்சமும் பரவியது.

திருமேனி-கட்டிக் கொண்டுவந்த மூட்டையைத் தேடி எடுக்கச் சுற்று முற்றும் தடவியபோதுதான் தரையில் கிடந்தவளையும் முகாமுகம் பார்க்க நேர்ந்தது! அவள் மூக்கையும் வாயையும் பொத்தியபடி உடம்பைச் சுருட்டிக் கொண்டு படுத்திருந்தாள். அந்த முகத்தில் அவருக்குப் பாதிதான் அடையாளம் தெரிந்தது. சட்டென்று ஓர் ஆவல். மொத்த முகத்தையும் பார்த்து விடலாமென்கிற வேகம்!

அவள் கைகளைத் தொட்டார். அவை குளிர்ந்து போயிருந்தன. என்றாலும் பலங்கொண்டமட்டும் இழுத்தார். முடியவேயில்லை!

முகமும் சரியாகத் தெரியவில்லை!

அவருக்குள் அப்போதுதான் பயமும் கலக்கமும் வந்தன. தனது மிருக வெறி எவளோ ஒருத்தியை இந்த இரவில் இப்படிப் பலிவாங்கி விட்டதே என்கிற படபடப்பு.

□□

நீலகண்டன் ஓட்டமும் நடையுமாக ஓடிக் குதிரைவண்டிக்காரனின் வீட்டை அடைந்தபோது அங்கே மறுபடியும் ஒரு அபசகுனம்

"என்ன சாமி?" என்றபடி சடவு முறித்து எழுந்தான் தேனன்.

நீலகண்டன் திருமேனி விவரம் சொன்னார்.

"வண்டியும் குதிரையும் சாயங்காலமே வாடகைக்குப் போயிடுச்சே சாமி!" என்றான் அவன்.

"என்னடா சொல்றே?"

"ஆமாம் சாமி! எனக்கு உடம்பு முடியலே! அதனாலே அவுங்களே ஓட்டிக்கிட்டுப் போயிட்டாங்க. உங்களுக்கு வேறெ ஒரு வண்டி ஏற்பாடு செஞ்சு தரவா?"

"வண்டி மாத்திரமில்லடா! ஆளும் வேணும். ஆறுநாள் என்கூடவே இருக்கணும். அதுக்கு எவ்வளவு ஆனாலும் குடுத்துடலாம்!"

"அவன் வருவானோ மாட்டானோ... தெரியலையே சாமி!"

"நீயே இங்கிருந்து என்னத்துக்கு அதையும் தீர்மானம்பண்றே?"

நீலகண்டன் தீருமேனி அதட்டினார்.

"சரி வாங்க சாமி..." என்றவன் முன்னால் நடக்க அவனைப் பின் தொடர்ந்தார் மகாமாந்த்ரீகன். அவன் நடந்தபோதுதான் புரிந்தது..அவன் கால்களும் உடலும் தள்ளாடிக் கொண்டே இருந்தது!

"குடிகார நாய்!" சட்டென்று அவர் அவனுக்கும் முன்னால் நடக்க நடக்க... வானத்திலிருந்த ஒன்பதாம் சந்திரனை மட்டுமில்லை; நட்சத்திரக் கூட்டத்தையும் காணவில்லை!

ஆகாசம் மை தடவிக் கொண்டிருந்தது! இதே நேரம் குஞ்சன் குதிரை வண்டியோட்ட பவத்ராதன் திருமேனி அக்கினிமலையை நோக்கி விரைந்து கொண்டிருந்த விவரம் நீலகண்டனுக்குத் தெரியாது!

□□

விடியற்காலம்-கோகுல் பல்துலக்கிக் கொண்டிருந்தான். இரவெல்லாம் உறக்கமற்ற இரவுகளாய் இருதினங்களும் அவனை வாட்டமுறச் செய்திருந்தன. இனியும் ஆறு நாட்களுக்குள் அப்பா அக்கினிமலைக்குப் போய்த்திரும்புவாரா என்கிற சந்தேகம் அவனுக்கு!

குறுக்குவழியைச் சொல்லி கூடிய சீக்கிரம் மகாசூலத்தை எடுத்து வர உதவும் நோக்கத்தோடு வந்த பவத்ராதன் திருமேனியை அவர் அப்படி எல்லாம் பேசியிருக்கக் கூடாது!

-இப்படி நினைத்தபடி வாயைக் கொப்பழித்துத் துப்பியபோது தான் இல்லத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்த பறவைகள் மொத்தமும் கலவரமாய் கத்தியபடி ஆகாயத்தில் எழும்பிப் போயின!

கோகுல் வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

ஏதோ ஒரு கருணை வானத்தில் பறந்து வந்து இல்லத்திற்கு நேராக நின்றது! அது இப்படியும் அப்படியுமாக ஒரு சுழற்சி அடித்தது.

பிறகு....கோகுலின் காலடியில் வந்து விழுந்தது.

பாச்சாவின் பிணம் மாமிசமாய் வந்து விழுந்த அதே வேகம்.

பரபரப்புடன் குனிந்து பார்த்தான்!

இது-மாமிசமாயில்லை! மானிட உருவம் சிதையாமல் அப்படியே இருந்தது. தலையும் காலும் கட்டப்பட்டிருந்தது. அவிழ்த்தான் கோகுல்! அதிர்ந்து போய் நின்றான்! சுமதி பிணமாகி இருந்தாள்!

(இன்னும் வரும்)


-அவர் இவர்தான்-

'மகாசூலம்'
தொடர்
உங்களை
கவர்ந்துகொண்டிருக்கும்
தமிழக
எழுத்தாளர்


-இருகூரான்-

எழுத்தாளர் பெயர் சரியாக ஊகித்த வாசகர்களின் பெயர் விபரம் வரும் வாரமுரசில்!


பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். நாதன்
வயது: 26
முகவரி: 206-A மேட்டுக்கடை வீதி, முன்டிலோயா.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை, புகைப்படம் பிடித்தல்.



பெயர்: என். ஃபௌஸ்
வயது: 25
முகவரி: 35, எல்கடுவ வீதி, உக்குவளை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, பேனாநட்பு, நாவல்கள்.




பெயர்: செல்வி. ஆர். கலா
வயது: ——
முகவரி: 1. 1/8, பலகொல்ல, கெங்கல்ல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல், நெசவு



பெயர்: ஜாரியா உம்மா
வயது: ——
முகவரி: கடற்கரை வீதி, கொலனி, புத்தளம்.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: கே. ரமேஷன்
வயது: 33
முகவரி: P.O. BOX- 4719 DOHA. QATAR.
பொழுது போக்கு: வழமையான பொழுது போக்கு.



பெயர்: எம்.ஹுஸைன்
வயது: 32
முகவரி: P.O BOX- 31441 POSTAL CODE- 11497 , RIYADH. K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எஸ். மாணிக்கராஜ்
வயது: 19
முகவரி: இராகலை மேற்பிரிவு, ஹல்கரனோயா.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்,வானொலி.

பெயர்: முகம்மட் நிசாம்
வயது: 24
முகவரி: கல்லேவ, கல்கமுவ.
பொ.போ: வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: லூக்காஸ் நிக்சன்
வயது: 20
முகவரி: REST TIEFMATT 4718, HOLDER BANK, SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, புத்தகம்.

பெயர்: முஹம்மது ரஸ்மி
வயது: 24
முகவரி: 37,5ம் ஒழுங்கை, 5ம் குறுக்குத்தெரு, புத்தளம்.
பொ.போ: வானொலி, நண்பர் தொடர்பு.


பெயர்: ரீ. சிற்பரன்
வயது: 19
முகவரி: 79, ஜோசப் டயஸ் ஒழுங்கை, கொழும்பு-15.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: என். அஹ்மத்
வயது: 18
முகவரி: 231/3, பமுனுவ வீதி, மஹரகம.
பொ.போ: பத்திரிகை ,வானொலி, கதைப்புத்தகம்.

# மக்சீம் கார்க்கி

24

# தாய்



"நான் என் வாழ்வையே நினைத்துப் பார்த்தால்-அட, ஏசுவே! நான் எதற்காகத் தான் உயிர் வாழ்ந்தேனோ, தெரியவில்லை. ஓயாதா வேலை..... ஓயாத உதை, அடி...என் புருஷனைத் தவிர வேறு யாரையுமே நான் கண்டதில்லை; பயத்தைத் தவிர வேறு எதையுமே நான் அறிந்ததில்லை! பாவெல் எப்படி வளர்ந்தான் என்பது கூட எனக்குத் தெரியாது. என் புருஷன் உயிரோடிருந்த போது, நான் பாவெலை நேசித்தேனோ, நேசிக்கவில்லையோ என்பதும் எனக்குத் தெரியாது. என் சிந்தனைகள்-என் கவலைகள் எல்லாம் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றித்தான்- என்னைக் கட்டிக்கொண்ட மிருகத்துக்கு இரை போடுவதும், உடனடியாக அவன் சௌகரியத்தைக் கவனிப்பதும் தான் என் கவலை. அப்படிக் கவனிக்காது மெத்தனமாக இருந்தால் அவன் கோபங்கொண்டு என்னைப் பய முறுத்துவானே, அடிப்பானே என்ற பயத்தால், அந்த அடிக்கு ஆளாகாமல் ஒரு நாளாவது தப்பி வாழவேண்டுமே என்ற கவலையால்தான் நான் அப்படி வாழ்ந்தேன். ஆனால் அவன் என்னை அடிக்காத நாளே கிடையாது. அவன் என்னை அடித்து உதைக்கும்போது தன் மனைவியை அடிப்பதாக அவன் நினைத்துப் பார்ப்பதே இல்லை. யார் யாரோமீது உள்ள கோபத்தையும் காட்டத்தையும் என்மீது காட்டித் தாக்குவான். இருபது வருஷகாலம் நான் இப்படியே தான் உயிர் வாழ்ந்தேன். என் கல்யாணத்துக்கு முன்னால் நான் எப்படியிருந்தேன் என்பதுகூட எனக்கு நினைவில்லை. என் கடந்த காலத்தைப் பற்றி நினைத்தே நான் குருடாகிப் போவது மாதிரி இருக்கிறது. எதுவுமே தெரிவதில்லை. இகோர் இவானவிச் இங்கே வந்திருந்தான். அவனும் நானும் ஒரே ஊர்க்காரர்கள். அவன் எதை எதைப்பற்றியெல்லாமோ பேசினான். எனக்கோ அங்குள்ள வீடுகள் ஞாபகத்துக்கு வந்தன; ஜனங்கள் நினைவுக்கு வந்தனர். ஆனால் அந்த ஜனங்கள் எப்படி வாழ்ந்தார்கள், என்ன பேசினார்கள், அவர்கள் ஒவ்வொருவரும் என்ன ஆனார்கள்- இதெல்லாம் நினைவுக்கு வரவேயில்லை. எப்போதோ தீப்பிடித்து எரிந்த சம்பவம்- இல்லை-இரண்டு சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. எனக்கு என்னவோ என் இதயத்தையே பூட்டிவிட்டது போல், என் ஆன்மாவுக்கே முத்திரையிட்டு இறுக மூடி விட்டதுபோல் இருக்கிறது. கண்ணும் தெரியவில்லை; காதும் கேட்கவில்லை....."

கரையில் இழுத்துப்போட்ட மீனைப் போல், அவள் மூச்சுக்காக வாயைத் திறந்து திணறினாள். முன்புறமாகக் குனிந்து கொண்டு மீண்டும் அவள் தணிந்த குரலில் பேசத் தொடங்கினாள்:

"என் கணவன் இறந்தான். நானும் என் மகனைக் கவனிக்கத் தொடங்கினேன். ஆனால் அவனோ இந்த மார்க்கத்தில் ஈடுபட்டுவிட்டான். எனக்கு மிகவும் சங்கடமாயிருந்தது; அவனுக்காக அனுதாபப்பட்டேன். அவனுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், நான் எப்படி வாழ்வது என்ற கவலை எனக்கு. நான் எப்படிப் பயந்து நடுங்கினேன் தெரியுமா? அவனுக்கு என்ன நேரக்கூடும் என்று நான் நினைத்துப் பார்த்தபோது என் இதயமே வெடித்துவிட்ட மாதிரி இருந்தது......"

அவள் ஒரு கணம் மௌனமாயிருந்தாள்.பிறகு மீண்டும் தலையை ஆட்டி விட்டுப் பேசத்தொடங்கினாள்:

"பெண்களாகிய எங்கள் அன்பு பரிசுத்தமான அன்பு அல்ல. நாங்கள் எங்களுக்காகத் தான் பிறரை நேசிக்க வேண்டியிருக்கிறது. இதோ நீங்கள் இருக்கிறீர்கள். தாயை எண்ணித் துக்கப் படுகிறீர்கள். எதற்காக நீங்கள் அவளை விரும்புகிறீர்கள்? இதோ இங்கே எத்தனையோ இளைஞர்கள் சகல மக்களின் ஷேமத்துக்காகவும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்; சிறைக்குச் செல்கிறார்கள். சைபீரியாவுக்குச் செல் கிறார்கள்; சாகிறார்கள்! இளம்பெண்கள் தன்னந்தனியாக வெகு தூரம் நடந்து செல்கிறார்கள். இருட்டிலே, மழையும் பனியும் கொட்டுகின்ற குளிரிலே, சேறு நிறைந்த பாதை வழியே ஏழு கிலோமீற்றர் தூரத்துக்கும் நடந்து செல்கிறார்கள். அவர்களை இப்படிச் செய்யச் சொல்வதுயார்? அவர்கள் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? ஏனெனில், அவர்கள் கொண்டுள்ள அன்பு, பரிசுத்தமான- தூய்மையான அன்பு! அவர்களிடம் நம்பிக்கை, ஆழ்ந்த நம்பிக்கை ஒன்றிருக்கிறது, அந்திரியூஷா! ஆனால் எனக்கோ, அந்த மாதிரி நேசிக்க முடியவில்லை! எனக்குச் சொந்தமானவர்களையே மிகவும் நெருங்கியவர்களையே நான் நேசிக்கின்றேன்!"

"நீங்களும் நேசிக்க முடியும்" என்று ஒரு புறமாகத் திரும்பிக்கொண்டு சொன்னான் ஹஹோல். அப்படிச் சொல்லும்போது வழக்கம்போலவே தன் கைகளால் தலையையும் கன்னத்தையும் கண்களையும் பரபரவென்று தேய்த்துவிட்டுக்கொண்டான். "எல்லோரும் தம்மோடு நெருங்கியிருப்பதையே மிகவும் நேசிக்கிறார்கள்; ஆனால் ஒரு பரந்த இதயம், தனக்கு வெகு தொலைவிலுள்ள பொருள்களைக்கூட, தன்னருகே கவர்ந்திழுத்து நெருங்கச் செய்யும் சக்தி வாய்ந்தது. நீங்களும் மகத்தான காரியங்களைச் செய்ய முடியும்-ஏனெனில் உங்களிடம் மகத்தான தாய்மை அன்பு ததும்பி நிற்கிறது!"

"அப்படியே ஆகட்டும்" என்று பெருமூச்சோடு சொன்னாள் அவள். "இந்த மாதிரி வாழ்வதும் ஒரு நல்ல வாழ்வுதான் என்பதை நான் உணர்கிறேன். அந்திரேய்! நான் உங்களை நேசிக்கிறேன்; ஒரு வேளை பாவெலைவிட, உங்களை நான் அதிகம் நேசிக்கவும் செய்யலாம். அவனோ என்னிடம் திறந்து கூடப் பேசுவதில்லை; நீங்களே பாருங்கள். அவன் சாஷாவைக் கல்யாணம் செய்ய விரும்புகிறான்; ஆனால் என்னிடம், அவன் தாயிடம், இதுவரை ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை......"

"அது உண்மையல்ல" என்று ஆட்சேபித்தான் ஹஹோல். "அது உண்மையல்ல என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். அவன் அவளைக் காதலிக்கிறான்; அவளும் அவனைக் காதலிக்கிறாள். அதுவும் உண்மைதான். ஆனால், அவர்கள் என்றுமே கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை. அவள் விரும்பலாம். ஆனால் பாவெல் விரும்பமாட்டான்."

"அப்படியா செய்தி?" என்று சிந்தனை வசப்பட்டவளாய்ச் சொன்னாள் தாய். அவளது துயரம் தோய்ந்த கண்கள் ஹஹோலின் முகத்தையே பார்த்தன; "இப்படியா இருப்பது? நீங்கள் உங்கள் சொந்த சுகத்தை எதற்காகத் தியாகம் செய்ய வேண்டும்....?"

"பாவெல் ஒரு அபூர்வப் பிறவி" ஹஹோலின் குரல் மிருதுவாயிருந்தது. "அவன் ஒரு இரும்பு மனிதன்!"

"ஆனால், இப்போது அவன் சிறையில் இருக்கிறான்" என்று மீண்டும் சிந்தனையிழந்தவாறே பேசினாள் தாய்; அதை நினைத்தாலே பயங்கரமாயிருக்கிறது; ஆனால் முன்னைப்போல் அவ்வளவு பயமில்லை. என் வாழ்க்கையும் மாறிவிட்டது. என் பயங்களும் மாறிவிட்டன. இன்றோ நான் ஒவ்வொருவருக்காகவும் பயந்து கொண்டிருக்கிறேன். இப்போது என் இதயமே புதிது. ஏனெனில் என் ஆத்மா இதயத்தின் கண்களைத் திறந்து விட்டுவிட்டது. அந்தக் கண்கள் அகலத் திறந்து பார்க்கின்றன. சோகம் கொள்கின்றன, அதே வேளையில் மகிழ்வும் கொள்கின்றன. எனக்குப் புரியாத விஷயங்கள் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. நீங்கள் கடவுளையே நம்பாமலிருப்பது எனக்குக் கசப்பாகவும் வருத்தமாகவும் இருக்கிறது. ஆனால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் எல்லோரும் மிகவும் நல்லவர்கள் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் மக்களின் நல்வாழ்வுக்காக, துன்ப வாழ்வு வாழ்கிறீர்கள்; சத்தியத்துக்காகச் சங்கடமான வாழ்க்கையை அனுபவிக்கிறீர்கள்; இப்போதுதான் உங்கள் சத்தியம், உங்கள் உண்மை எனக்குப் புரிகிறது. பணக்காரர்கள் என்று ஒரு வர்க்கம் இருக்கிறவரையில், சாதாரண மக்களுக்கு எதுவுமே கிடைக்கப்போவதில்லை-மகிழ்ச்சியோ, நியாயமோ- எதுவும் கிட்டப்போவதில்லை. இப்போதோ நான் உங்களைப் போன்ற இளைஞர்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். சில சமயங்களில் இரவு நேரத்தில் எனது கடந்த காலத்தைப்பற்றி, பூட்ஸ்காலால் மிதித்து நசுக்கப்பட்ட எனது இளமையின் பலத்தைப்பற்றி, கசக்கிப் பிழியப்பட்ட எனது இளம் இதயத்தைப்பற்றி நான் நினைத்துப் பார்ப்பதுண்டு; அந்த நினைவினால் எனக்கே என்மீது அனுதாபம் பிறக்கிறது; கசப்புணர்ச்சி பிறக்கிறது. ஆனால் இப்போதோ எனக்கு வாழ்வது அவ்வளவு கஷ்டமாக இல்லை. கொஞ்சங் கொஞ்சமாக சிறுகச் சிறுக நான் என்னையே உணர்ந்துவரத் தொடங்குகிறேன்.....

நெட்டுவிட்டு வளர்ந்து மெலிந்திருந்த ஹஹோல் எழுந்தான்; சிந்தனை வசப்பட்டு, காலடியோசையே கேட்காத வண்ணம் எழுந்து உலவத் தொடங்கினான்.

"எவ்வளவு நன்றாகச் சொன்னீர்கள்!" என்று அதிசயித்தான். "அவ்வளவு தெளிவாகச் சொல்லிவிட்டீர்கள். கேர்ச் நகரில் ஒரு வாலிப யூதன் இருந்தான். அவன் ஒரு கவி. ஒரு நாள் அவன் ஒரு பாட்டு எழுதினான்:

**அறியாது கொலையுண்ட**
**அனைவரும், உண்மை**
**நெறியென்னும் பலத்தாலே**
**உயிர் பெற்று நிற்பார்!**

"அவனையும்கூட கேர்ச் நகரப் பொலிசார் கொன்றுவிட்டார்கள். நான் அதைச் சொல்ல வரவில்லை. அவன் உண்மையை உணர்ந்தான்; அந்த உண்மையை அவன் மக்களிடம் பரப்பினான். அவன் சொன்ன மாதிரி அந்த 'அறியாது கொலையுண்ட' பேர் களில் நீங்களும் ஒருவர்."

"இப்போதெல்லாம் நானே பேசிக் கொள்கிறேன், அதை நானே கேட்டுக் கொள்கிறேன், என்னை நானே நம்புவதுமில்லை. என் வாழ்நாள் முழுவதும் நான் ஒன்றே ஒன்றைப் பற்றித்தான் சிந்தித்தேன்: ஒவ்வொரு நாளையும் யார் கண்ணிலும் படாமல் ஒதுக்கமாய் எப்படிக் கழிப்பது, யார் கையிலும் படாதபடி பார்த்துக் கொள்வது-இதுதான் என் சிந்தனை! ஆனால் இப்போதோ என் மனதில் பிறரைப்பற்றிய சிந்தனைகளே நிரம்பி நிற்கின்றன. உங்களது கொள்கையை நான் முழுக்க முழுக்க அறியாது இருக்கலாம்; ஆனால், நீங்கள் அனைவரும் என் அன்புக்கு உரியவர்கள். உங்கள் அனைவருக்காகவும் நான் வருந்துகிறேன். அனைவரின் நலத்தைப் பற்றியும் முக்கியமாக உங்கள் சுகத்தைப்பற்றி நான் மிகுந்த அக்கறை கொள்கிறேன், அந்திரியூஷா!"

அவன் அவள் பக்கம் வந்தான்.

"ரொம்ப நன்றி" என்றான் அவன். அவள் கரத்தை எடுத்து ஆர்வத்தோடு அழுத்திப் பிடித்தான். பிறகு விரைவாக விலகிச்சென்று விட்டான். அவள் தன் உணர்ச்சியினால் நிலை குலைந்துபோய், மிகவும் மெதுவாகவும் மௌனமாகவும் பண்ட பாத்திரங்களைக் கழுவ ஆரம்பித்தாள். அப்போது அவள் மனம் தன் இதயத்தின் அமைதி நிறைந்த ஆனந்தத்தையே எண்ணியெண்ணிப் புளகித்துக் கொண்டிருந்தது.

ஹஹோல் அறைக்குள் மேலும் கீழும் நடந்தவாறே அவளைப் பார்த்துப் பேசினான்:

"அம்மா! நீங்கள் வெஸோவ்ஷிகோவிடம் சிறிது அன்பு காட்டுங்களேன். அவனது தந்தை-அந்த உதவாக்கரையான குடிகார மட்டை-சிறையில் இருக்கிறான்! தன் தந்தையின் முகத்தை ஜன்னலோரமாகக் கண்டாலும் போதும், உடனே நிகலாய் தன் தந்தையைச் சரமாரியாகத் திட்ட ஆரம்பிக்கிறான். அது ரொம்ப மோசமான செய்கை. நிகலாய் இயற்கையில் கருணையுள்ளம் படைத்தவன். அவன் நாய்களை, எலிகளை, சகல மிருகங்களையும் நேசிக்கிறான் அன்பு காட்டுகிறான்; ஆனால், மனிதர்களை மட்டும் பகைத்து ஒதுக்குகிறான்! ஆமாம், மனிதன் எப்படியெல்லாம் கெட்டுப் போகிறான்?"

"அவன் தாய் எங்கோ தொலைந்து போனாள். அப்பனோ குடிகாரன், திருடன்...." என்று முனகினாள் தாய்.

அந்திரேய் படுக்கைக்குச் சென்ற பிறகு, தாய் மிகவும் இரகசியமாக அவன் பக்கம் சென்று அவன் தலைக்கு மேலாக சிலுவைக் குறியிட்டு விட்டு வந்து படுத்தாள். அவன் படுத்து அரைமணி நேரம் கழிந்த பின்னர் அவள் அவனைப் பார்த்து மெதுவாகக் கேட்டாள்:

"தூங்கி விட்டாயா, அந்திரியூஷா!"

"இல்லையே. ஏன்?"

"நல்லிரவு!"

"நன்றி,அம்மா, நன்றி என்று நன்றியுணர்ச்சியோடு சொன்னான் அவன்.

**(தொடர்ந்து வரும்.)**

# ஊமைக் காயங்கள்



ஷஹிர்ஷா தாஸிம்-தர்காநகர்

அந்த மார்கழி மாதப் பனியில் குயில்கள் போட்டி போட்டு இசைக்கச்சேரி நடத்திக் கொண்டிருக்க, மலர்கள் பனித்துளிகளைச் சுமந்து அசைந்தாட, ஷாஜஹான் அறையிலிருந்து வெளியாகி முற்றத்து வேப்பமரத்தில் வாசம் அடிக்கும் ஈரக் காற்றை சுவாசிக்க, காலை 6.00 மணிக்கு கிழக்கு வானில் பகலவன் மஞ்சள் பூசுவது தெரிந்தது. காகங்கள் குளிரினால் கூடுகளிலிருந்து கொண்டே கரகரத்த குரலில் கரைந்து கொண்டிருந்தன.

சுற்றிக் கட்டப்பட்டிருந்த மதிற் சுவரில் சாய்ந்துகொண்டு உள்ளே பச்சைப் புல் வெளியில் சுதந்திரமாய் திரிந்து கொண்டிருக்கும் வெட்டுக்கிளிகளை இரசித்துக் கொண்டிருந்தான் ஷாஜஹான்.

தன்னை அறியாமலேயே மனதில் கவிதை உணர்வுகள் பொங்கி எழ அவைகளை ஒரு வெள்ளைத்தாளில் வடிவம் கொடுத்தான்.

*"மலர்கள்*
*மஞ்சள் தாவணியில்*
*மந்தகாசப்*
*புன்னகை வீச....*
*ஓலையில்*
*சுருட்டிக் கட்டப்பட்டிருந்த*
*காற்று*
*கவிதைகளைத்*
*தாலாட்ட.....*
*இனிக் கனவுகளின் ஊர்வலம்*
*இலவசம்....!"*

தன்னை மறந்தவனாக கவிதை வரிகளை உரத்துவாசிக்கிறான். சட்டென்று வாசிப்பை நிறுத்தி விட்டு நிமிர்ந்த போது தான் கவனித்தான். கவிவரிகளை பிரியமனமின்றிப் பிரிந்த இமைகளை விரித்துப் பார்த்த போது அந்தக் காட்சி அவனை ஒரு நிமிடம் சங்கடத்துக்குள்ளாக்கியது.

எதிர் வீட்டு ஜன்னலருகில் நின்றிருந்த அந்தப் பெண் தன்னையே பார்த்துக் கொண்டிப்பது புரிந்தது. சட்டென்று எழுந்து மறுபடியும் ஜன்னலின் பக்கமே திரும்பாமல் உள்ளே போய் விட்டான்.

அடுத்த நாள் காலை வழமைபோலவே தோட்டத்துப் புல்வெளியில் இருந்து கவிதை எழுதிக் கொண்டிருந்தான் ஷாஜஹான். அப்போது திடீரென்று பின்னால் கேட்ட குரல் அவனைத் திடுக்கிட்டுத் திரும்பச் செய்தது.

"எக்ஸ்க்யூஸ்மி...."

திரும்பிப் பார்த்தான். நேற்று எதிர்வீட்டு ஜன்னலில் இருந்த அந்தப் பெண் தான் பின்னால் வந்துகொண்டிருந்தாள்.

அவன் எதுவும் பேசத் தெரியாமல்- பேசத் தோன்றாமல் நின்று கொண்டிருந்தான்.

திரும்பி நடக்க எத்தனித்தவனை அவள் குரல் தடுத்தது.

உங்களைத்தான் நேற்று ரொம்பப் பிரமாதமாய் கவிதை ஒன்று படிச்சீங்களே, நான் கூட அசந்து போய்ட்டேன்.

"......"

உங்க வீட்டு எதிர் வீட்ல நாங்க குடியிருக்கோம். கவிதைன்னா எனக்கு ரொம்பப் பிரியம். உங்க கவிதைகளை பத்திரிகையில் நிறையப் படிச்சிருக்கேன்.

சடாரென்று அவன் முகபாவத்தில் ஒரு இனம் புரியாத மாற்றம்.

அவனுக்கு ஒரு மன நிறைவு ஏற்பட்டு விட்டது. தன் கவிதை வாசிப்பைக் கூட இரசித்து அனுபவிக்கத் தெரிந்த, இரசனையைப் பகிர்ந்து கொள்ள குழந்தை மொழி பேசும் ஒரு ஜீவன் கிடைத்துவிட்ட சந்தோசத்தூறல் மனம் எங்கும் பரவியது.

"ஏன் ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்க?"

சட்டென்று முகம் முழுக்க பரவி இருந்த கருமையை அகற்றி பிரகாசத்துடன் நேராய் நிமிர்ந்தான்.

"வெரி மெனி தாங்க்ஸ்... உங்க ஊக்குவிப்புக்கும் பாராட்டுக்கும் என் கவிதையை வாய்நிறையப் புகழுறுதில ரொம்பச் சந்தோசம்"

"இத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்தும் என் பெயரை நீங்கள் கேட்கவே இல்லையே... ஐஆம் ஸப்னா....நீங்கள் ஷாஜஹான் என்று தெரியும். மொத்தத்தில உங்க குடும்பத்தை நல்லாவே தெரிஞ்சு வச்சிருக்கேன்."நாளைக்கு உங்க வீட்டுக்கு வரட்டுமா?" பணிவாய்க் கேட்டாள்.

"ஓ...வாங்களேன்..."

□□

அன்றிலிருந்து அவள் அடிக்கடி ஷாஜஹானுடைய வீட்டுக்கு வர ஆரம்பித்தாள்.

அன்று மாலையில் தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டு ஷாஜஹான் கவிதை எழுதிக் கொண்டிருந்தான். பக்கத்தில் ஸப்னா அவன் வாசிக்கும் கவிதைகளை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

*"ஜன்னல் திரை*
*விலகிய போது*
*தான்*
*கண்டு கொண்டேன்...*
*வானத்து நிலவை*
*பூமியில்*
*சிறைவைத்திருப்பது....!"*

எத்தனை அருமையான கவிதை! எத்தனை அருமையான வாசிப்பு உங்கள் கவிதைகளைக் கேட்டவுடனேயே எவ்வளவு குதூகலம் பிறந்து விடுகிறது தெரியுமா? ஷாஜஹான்"

"என்ன?"

"காதலிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தால் நீங்கள் யாரை காதலிப்பீர்கள்?"

"என்றென்றும் என் கவிதைகளைத் தான்.....!"

"ஷாஜஹான் நான் உங்களைக் காதலிக்கிறேன்!" என்று கூறியவாறு முகத்திரையை விலக்க

"ஆ..ஸப்னா...."

வியப்பால் கண்கள் விரிந்தாலும் அவற்றின் மருட்சியால் ஏற்பட்ட துடிப்பு நிறைந்து கோபமும் வெளிப்படுகிறது.

"ஸப்னா நீங்கள் என்னை இந்த நிலையில் எதிர்பாப்பது தவறு! என்னைக் காதலிக்கும் சந்தர்ப்பம் சத்தியமாகக் கிடைக்காது. வீண் பேச்சு விட்டுவிடுங்கள்."

"ஷாஜஹான் உங்கள் நினைவு தான் என் நாடி நரம்புகளிலெல்லாம் நிறைந்து பாடாய் படுத்துகிறது. ஒரு நாள் இல்லை..... இரண்டு நாள் இல்லை..... என்று என் ஜன்னல் திரைகள் விலகி உங்கள் உருவத்தை படம் பிடித்துக் கொண்டதோ அன்றிலிருந்து நீங்கள் என் உள்ளத்திலும் உருவம் பெற்று விட்டீர்கள். உங்களை மறப்பது கடினம்."

காதில் இரும்பைக் காய்ச்சி உருக்கி ஊற்றிய மாதிரி விழுந்த சொற்களைச் சகித்துக்கொண்டான். ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தான்.

அப்போது வானில் சின்னஞ்சிறு சிட்டாகக் கருமேகம் குவிந்து ஓரிரு தூறல்.

ஷாஜஹானின் நெஞ்சு கருவிக்கொள்கிறது.

'ஸப்னா! நான் உங்களை மதிக்கும் மதிப்பு மகத்தானது; மகோன்னதமானது, உங்களை எனது இதயத்தில் எவ்வாறு வைத்திருக்கிறேன் என்பது எனக்குத் தான் தெரியும்."இனியும் இந்த எண்ணத்தோட என்னுடன் பழக வேண்டாம்.எப்போதும் என் கவிதைகளுக்கு இரசிகையாக இருந்தால் போதும்.'

வெட்கி முகம் சுருங்கிய ஸப்னாவுக்குத் தெரியாமலேயே கண்களைக் கண்ணீர் நிறைத்தது. அத்தோடு திடீரென்று ஒரு வெறி. இத்தனை நாட்களாக நேசித்ததின் ஏமாற்றம். தன்னையே மறந்து கண்களை மூடிக் கீழுதட்டைக் கடித்துக் கொள்கிறாள். கோபமும் துயரமும் தாளாது விசும்பி அழுது தீர்க்கிறாள்.

*"என்*
*காதல்*
*கனவுகள்*
*ஊமையானபோது,*
*உன்*
*கண்கள்*
*காதலின்*
*அடிமையாகிப்*
*போனதேனோ...?"*

மறுநாள் தன்னை அழுத்திக் கொண்டிருந்த சோகமும் கவலையும் எங்கேயோ ஓடி விலகியதை உணர்ந்தாள். 'அவர் என்னைக் காதலிக்காமல் நான் அவரைக் காதலிப்பது என்ன பண்பு?'

திடீரென்று எழுந்த ஆவலை அடக்க முடியாதவளாக ஜன்னல் திரையை அகற்றி வெளியே எட்டிப் பார்க்கிறாள். ஷாஜஹானின் கவிதைகள் காற்றில் அரங்கேறிக் கொண்டிருந்தது.

*"கருமேகங்கள்*
*கரைய வேண்டும்*
*மீண்டும்*
*அந்தப் பூந்தென்றல்*
*உன் பார்வையில்*
*வீச வேண்டும்!"*

இந்தக் கதையை படிப்பதற்குமுன் இது நிகழ்ந்த காலச் சூழலை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். கிழக்கில் இனப் பிரச்சனை உக்கிரமடைந்து வெறியாட்டம் போட்ட கொடூர வருஷங்கள்.... அப்போது நான் அட்டாளைச்சேனையில் விடுதியில் தங்கி படித்துக்கொண்டிருந்த காலம். நேரடியாக மூக்கைத் தொடாமல்-சுற்றி வளைத்து பயணம் செய்யும் காலம். இனி கதையைப் படியுங்கள்.

# டபிள் டிக்கற்



கன்ஸியா

நான் முச்சந்தியில் நின்று கொண்டிருந்தேன். ஏனைய நண்பர்களும் அவ்விடத்திற்கு வருவதாக நேற்றிரவே பேசிக் கொண்டு கலைந்து போனோம். ஏழரை தாண்டி விட்டது. ஒருவனைக் கூட காணோம். ரமழான் பண்டிகைக்கால விடுமுறை முடிந்துவிட்டது. நாளை மறுநாள் கல்லூரியில் நிற்க வேண்டும் மூன்று மணி நேரத்தில் கண்ணை மூடிக்கொண்டு வாழைச்சேனையில் இருந்து அட்டாளைச்சேனையில் இறங்கிவிடலாம் இன்றைய சூழல் முஸ்லிம் பயணிகளுக்கு மட்டக்களப்புப் பாதையில் அக்காலத்தில் 'ஆமி'யின் பாதுகாப்புடன் தான் செல்ல வேண்டும். அதுவும் சில நேரம் கம்மியாகிவிடும். பொலநறுவை வந்து மஹியங்கனை- அம்பாறை வழியாக அட்டாளைச்சேனை வருவதற்கு கண்டிப்பாய் இரண்டு நாட்கள் தேவை. ஒரு இரவை மஹியங்கனை பன்சாலையிலோ, அல்லது அம்பாறை பள்ளிவாசல் வாடகை அறையிலோ கழித்து, மறுநாள் மதியம்தான் விடுதிக்குள் நுழைவோம். சிலநேரங்களில் நாட்கள் பிந்தி கல்லூரிக்குள் நுழைந்தால் பஸ் தட்டுப்பாடும், சுற்றுப் பயணமும் எங்களை தண்டனையிலிருந்து காப்பாற்றும். சில தவணைகளில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்களும் பயணத்தில் இணைந்து கொள்வதுண்டு. அச்சமற்ற வெகு குதூகலமான பயணமாய் இருக்கும். பஸ்முழுக்க மாணவ மயப்படுத்தலில் திணறும்.

எட்டுக்கு ஐந்து காத்துக்கிடக்கையில் தோழர்கள் வந்தனர். தாயகத்தை விட்டு பிரியமனமின்றி பொலநறுவை பஸ்ஸில் ஏறி வசதியாக ஏழு பேரும் உட்கார்ந்து கொண்டோம். வழமையான அரட்டைகள், சீண்டல்கள். எல்லை தாண்டாமல் இதர பயணிகளுக்கும் தொல்லை தராமல் தொடர்ந்து கொண்டிருந்தன. அந்த நாட்கள் இனிமை நிறைந்த வசந்த காலங்கள். எதிர்காலம் பற்றிய கனவுகளின்றி நிகழ்காலம் பற்றிய பிரக்ஞையுமின்றி, வாழ்க்கையை சீரியஸாக கணிப்பிட முடியாத காலம். மாதம் தவறாமல் வீட்டிலிருந்து பணம் வரும். மணியடித்தால் சோறு. பாடச் சுமையைத் தவிர வேறெதுவும் சுமையாகத் தெரியாத வயது. கடலும் ஆறும், கைப்பிடிக்குள் சிக்கும் நண்டும், ஊர்ந்து திரியும் ஆமையும் புறாக்கூடும், சிப்பியும் விளையாட்டுப் பொருட்களாய் எம் கரங்களில் அடங்கிப் போகும் வயது. ஆரவாரம், மகிழ்ச்சி, குதூகலம் இவை தவிர எதனையும் அனுபவித்திராத பருவம். பிற்காலங்களில் நினைக்க நினைக்க புல்லரிக்க வைக்கும் நினைவுத்தடயங்கள். மீண்டுமொரு முறை அதற்குள் விழுந்து சந்தோஷிக்க கிடைக்காதா என்ற நீண்ட ஏக்கம் உஷ்ணமாய் வெளியேறும்.

மஹியங்கனை பஸ்ஸில் ஏறிய போது தான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய ஆசிரியைகள் 'சீட்'பிடித்திருப்பது தெரிந்தது. பெரும்பாலானவர்கள் சிங்கள மக்கள். அகப்பட்ட 'சீட்'களில் அமர்ந்து கொண்டோம். நான் பத்திரமாய் கொண்டு வந்த சிறிய 'கெஸட்டில்' பாட்டுக்கேட்க ஆரம்பித்தேன். இடையில் தேனீருக்காக பஸ் நிற்பாட்டப்பட்டது. வீட்டிலிருந்து காலை, மதிய உணவுகள் பார்சலாக கட்டித் தந்து விட்டார்கள். வழிப்பயணத்தில் பட்டினியாய் போகக் கூடாதென்ற எண்ணம் அவர்களுக்கு. கடை சிறிய-அதுவும் மிகச் சிறியதாய் இருந்தது. ஓலை வேயப்பட்டு, சுற்றிவர களிமண் சுவர் எழுப்பப்பட்டிருந்தது. நானும் நண்பர்களுமாய் கடையின் பின்னால் சென்று, பார்சல்களை உண்ண ஆரம்பித்தோம்.

உட்கார்ந்து சாப்பிட வசதியான சுத்தமான இடமில்லை. ஆபத்துக்கு பாவமில்லை. சங்கடமாய் நின்று கொண்டே சாப்பிட்டோம். எங்களுடன் கூட வந்த ஆசிரியர்கள். சிறுநீர் கழிக்க பின்பக்கம் வந்து, எங்கள் நிலை கண்டு, முகம் சுளித்தனர். அது மட்டுமல்ல,"நீங்க நிண்டு கொண்டு சாப்பிடலாமா?" என்று வேண்டுமென்றே விவாதத்தில் இறங்கினர். கேள்வி கேட்டவர் நின்று கொண்டே சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தார். (இவ்வாறு செய்வது நிர்ப்பந்தமின்றி இஸ்லாத்தில் தடை)

எம்மிடமிருந்த துடுக்கான நண்பன் பதுர்தீன் "நீங்க நிண்டுகிட்டு சிறுநீர் கழிக்கிறீங்களே இது ஆகுமா?" என்றான் கொல்லென்று சிரிப்பு அடங்குவதற்கு நேரம் பிடித்தது. பின் சாப்பாட்டில் சுவாரஸ்யம் இருக்கவில்லை. பீரும், ஹபீபுமாய் விவாதத்தில் குதித்தோம். உப்பு சப்பில்லாத சண்டை. அந் நிகழ்வுக்குப்பின் அவர்களுடன் பேசுவதற்கு லஜ்ஜையாக இருந்தது. பஸ் வேகம் பிடித்து ஓடிக் கொண்டிருந்தது.

அனேகமாய் எல்லோர் முகங்களிலும் ஒரு பரிபூரண அமைதி நிலவியது. அதை நிம்மதி என்றும் கூறிவிடமுடியாது.

திடீரென பஸ் பிரேக்போட்டது. திடுக்கிட்டு நிமிர்ந்தோம். நானிருந்த 'சீட்'க்கு முன்னால்தான் வாசல் இருந்தது. ஒருபெண் ஏறிக் கொண்டிருந்தாள். கட்டை பாவாடை, தளதளவென்ற ரீ-சேட், கஞ்சத்தனம் பார்க்காமல் வளர்ந்திருந்தது உடம்பு, கூந்தல் கூட கட்டையாய் வெட்டப்பட்டு, தோளில் துவண்டு கிடந்தது. நிச்சயம் ஒரு சிங்களப் பெண். அவள் பருத்த உடலமைப்பை பார்த்த என் விழிகள் ஏதாவது சொல்லி வைக்க ஆசைப்பட, பக்கத்திலிருந்த நண்பனை விழித்து "டேய் மச்சான் இதுக்கு 'லக்கேஜ்'தான் வெட்டணும் என்றேன். அவனும் பதிலுக்கு "தேவல்லடா ரெண்டு சீட்டுற காச வெட்டினா போதும்", என்றான். ஏனையோருக்கும் இலேசான கடை வாய்ப்புன்னகை. அதுவே எனக்கு உற்சாகமேற்ற, என்னவெல்லாம் கிண்டலடித்தோம். அவள் பக்கத்தில் தான் நின்று கொண்டிருந்தாள். எங்கள் 'ஜொள்ளு'ப் பேச்சு விளங்கியிருக்காது. தன்னைப்பற்றித்தான் பேசுகிறார்கள் என்பதை புரிந்து கொண்டதைப்போல் மெல்லியதாய் புன்னகைத்து வைத்தாள். ஒரு பத்துமைல் ஓடியபின் பஸ் நின்றது. பகல் சாப்பாட்டு நேரம். ஊரின் பெயர் தெரியாது. சுற்றிவரக்காடு, ஒரேயொரு கடை வெட்டவெளியில் காய்ந்து போய் கிடந்தது. அவளும் இறங்கினாள். நாங்களும் பார்சல்களுடன் பாய்ந்தோம்.


கடைக்குள் நுழைந்ததும், எனக்கு ஏராளமான அதிர்ச்சி! அவள் 'காஷியர்' மேசையில் அமர்ந்து 'ஓடர்' போட்டுக் கொண்டிருந்தாள். எங்களைக் கண்டதும், "தண்ணி வேணுமா?" சுத்தமான தமிழ்! யாரோ கொள்ளிக் கட்டையால் முகத்தில் அடித்தது போல் இருந்தது. "பார்சல உள்ளுக்கு வச்சி தின்னுங்க எங்க இருந்து வாரீங்க? எங்க போக?" எனக்குள் ஏராளமான வெடிகுண்டுகள். சனநெரிசல் குறைந்ததும் நண்பன் ஹபீப்தான் கேட்டான். "ஒங்களுக்கு எப்படி தமிழ் பாஷ தெரியும்?" அவள் இகழ்ச்சியாய் சிரித்தாள். மின்மினிக் கண்களில் பெருமிதம் பளிச்சிட்டது "தம்பி என்ட அம்மா மட்டக்களப்பு கிறிஸ்டியன். அப்பா இந்த ஊரு. எனக்கும் ஒரு புள்ள இருக்கு, 'ஹஸ்பென்ட்'டும் சிங்களம்தான். அப்பா சிங்களஆள். லவ் பண்ணி அம்மாவ கலியாணம் முடிச்சி இங்க கொண்டுவந்த."

உருவத்தை பார்த்து எடை போட்டது எவ்வளவு பெரிய தவறு. அவளின் முகத்தை அண்ணார்ந்து பார்க்க கூச்சமாகவும் வெட்கமாகவும் இருந்தது. அந்த 'லக்கேஜ்'ஜின் பார்வையில் படாமல் மெதுவாய் நழுவி பஸ்ஸினுள் நுழைந்துகொண்டேன். 'இனிமேல் வெளித்தோற்றம் பார்த்து எடை போடாதே' மனசுக்குள் எச்சரிக்கை விழுந்தது.

# அந்த ஒரு கதை

ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி

அவசர அவசரமாக வந்த நண்பியின் முகத்தில் வியர்வை மணிகள் உருண்டோடின. முகம் சிவந்திருந்தது. "நல்ல வெயில். குடை எதுவும் எடுக்காம வந்திருக்கியே..?" கரிசனையாகக் கேட்டபடி பேனையை மூடி வைத்து எழுந்தேன்.



அவள் சிரிக்கவில்லை.

"எழும்பாதே. இரு, இந்தா இதைப்படி." என் மீது விழுந்த ஒரு பத்திரிகையைப் பிரித்தேன். "என்ன விசேஷம்?" நான் கேட்ட போது முறைத்தாள். அவசரமாகப் பத்திரிகையை எடுத்து விரித்து பக்கம் புரட்டித் தந்தாள்.

பக்கம் 22. சிறுகதை. அமைதியாக வாசித்தேன். நண்பி என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். வாசித்து முடித்தேன். "ம்..பரவாயில்லை. நல்ல கதை என்றதும் நண்பி வெடித்தாள். "என்ன சொன்ன? நல்ல கதையா? ஏண்டி உனக்கு மண்டையில மூளை இருக்கா. இல்லையா? கதையில வர்ற கதாநாயகிக்கு பெயர் என்ன? உன் பெயர். அவவின் பொழுது போக்கும் உன்னை மாதிரியே கதை- கவிதை எழுதுறது. எனக்கென்னமோ இந்தக் கதை உன்னைக் குறி வெச்சு எழுதின மாதிரி படுது. என்ன சொல்றே?" இடுப்பில் கைவைத்தபடி படபடவென இமை அடித்துப் பேசிய நண்பியைப் பார்க்கிறேன் பின் எனக்கு அறிமுகமற்ற அந்தப் பத்திரிகையைப் பார்த்தவாறிருந்தேன்.

"ஸ்..பதறாதே...இந்த உலகத்துல ஷர்மிளான்னு பெயர் வெச்சதில நான் மாத்திரமா இருக்கேன்? இன்னும் எத்தனையோ ஆயிரம் ஷர்மிக்கள் இருக்கலாம். அவங்களோட பொழுது போக்கும் என்னுடையதை ஒத்திருக்கலாம். இல்லாட்டி இந்தக்கதை ஒரு கற்பனைக் கதையாகவும் இருக்கலாம் இதுக்கெல்லாம் போய் அலட்டிக்கிறே?"

நான் முடிக்குமுன் நண்பியே ஆரம்பித்தாள்....ஆத்திரத்தோடு..

"இங்கப்பாரு இந்தக் கதைல வர்ற ஷர்மிக்கு ஒரு பேனா நண்பன். அவனோட அவளுக்கு காதலாம். இதயத்தை மட்டுமல்ல இன்னும் எதைஎதையோ காதலின் பெயரில் பரிமாறிக் கொண்டார்களாம். பிறகு வழக்கம் போல காதலன் 'டாட்டா' காட்டி மாறிவிட கதாநாயகி ஷர்மி வேதனையில் ஆழ்ந்து போய் செய்ய வழியின்றி(!) கலையுலகில் காலடி வைக்கிறாளாம். மறுபடியும் ஒரு ரசிகனாம். அவளது கதை, கவிதையைக் காதலித்து அவளையும் கல்யாணம் பண்ணிக்கிட்டானாம். பழைய காதலைப் பற்றி அவள் கூறியும் அதை அவன் இலட்சியம் பண்ணலையாம். எப்படியிருக்கு?" நண்பி உக்கிரமாய் விழித்தாள். "இதுல தவறு கண்டிட்டாய்....?" கேட்டேன்.

முறைத்தாள். நான் சிரித்தேன். "இதுக்குப் போய் ஏன் இத்தனை ஆரவாரம்! ஒரு சின்னக் கதை. அதில என் பெயர் வருதுன்னு இப்படி கோபப்படுற. இது கூடாதும்மா. வாழ்க்கைன்னா ஆயிரம் இருக்கும். பல பேர் பலதும் சொல்வாங்க. நான் யாரையும் காதலிக்கல்ல. கல்யாணமும் பண்ணிக்கல. உனக்குத் தெரியும். பிறகேன் இப்படி தேவையில்லாத அலட்டல்?" மெலிதான புன்னகையோடு சொன்னேன். நண்பிக்கு சமாதானமில்லை. சிறிய நீர்த்துளி இமையோரம் வந்து நின்றது.

"சரி... சரி.... ஒரு மறுப்புக் கதை (மறுப்பறிக்கை மாதிரி!) எழுதி அதை 'தினமுரசுக்கு' அனுப்பட்டா? அப்போ உன் கோபம் தீரும் இல்லியா?" அப்படி நான் கேட்டபோது தான் நண்பியின் முகத்தில் சந்தோசம் மலர்ந்தது.

# "வெளிச்சம் வெளியே இல்லை"

அன்று அந்த தோட்டமே சோகத்தில் மூழ்கிக் கிடந்தது. ஆற்றங்கரையை ஒட்டியிருந்த பழங்காலத்து அதாவது வெள்ளைக்கார துரைமார் கட்டிய லயன் காம்பராக்களில் முதலாவது காம்பராவில் தலைவர் செங்கோடனின் சடலம் வைக்கப்பட்டிருந்தது. அந்த லயனில் முன், பின் என இருபகுதியாக பிரிக்கப்பட்டு அறுபத்தெட்டு காம்பராக்கள் இருந்தன. அந்த ஆறடியே அகலமுள்ள 'பங்களா'வில் [illegible] கட்டிலில் செவ்வந்தி பூக்கள் [illegible] அதன் மேல் செங்கோடனின் உடலம் அலங்கரித்துவைக்கப்பட்டிருந்தது.

லயன் காம்பராக்களுக்கு வெளியே [illegible] மரத்தால் போடப்பட்டிருந்த [illegible] வெறுந்தரையில் தோட்டத்து [illegible] உட்கார்ந்து தலைவர் செங்கோடனின் இறுதி யாத்திரையை எவ்வாறு மேற்கொள்வது என தொழிற் சங்க வேறுபாடுகளை மறந்து பேசிக் கொண்டிருந்தனர்.

லயன் காம்பராவுக்குள் செங்கோடனின் மனைவி அகிலாண்டம் ஒப்பாரி வைத்து அழுது புலம்பிக்கொண்டிருந்தாள். நேற்று முதல் அழுதழுது அகிலாண்டம் கிழவியின் கண்கள் வீங்கிக் கிடந்தன. எண்பது வயதைத்தாண்டி விட்டாலும் கிழவியின் ஒப்பாரியில் தமிழ் நாட்டு மண் வாசனையும் வெளி வந்து கொண்டிருந்தது.

செங்கோடன் தனது மாமன் மகளான அகிலாண்டத்தை அவளின் பதின்மூன்றாவது வயதிலேயே கல்யாணம் செய்து கொண்டு திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திண்ணனூர் கிராமத்திலிருந்து இந்த தோட்டத்துக்கு வந்து விட்டார். அப்போது செங்கோடனுக்கு வயது பதினாறு. இவரின் சித்தப்பாமுறையானவரான பெரியகங்காணி சுப்பையாப்பிள்ளை



சிலாபம்-பொ.புஸ்பராஜு

இந்த தோட்டத்தில் தேயிலை செடிகளுக்கு கீழ் கருவாடு மாசியிருப்பதாக கூறியே திண்ணனூர் கிராமத்தவர்களை இந்த தோட்டத்தில் குடியேற்றம் செய்தார். இந்தக் கங்காணியின் இப் பெரிய சேவைக்காக வெள்ளைக்கார கம்பெனி துரைமார்கள் சங்கம் இவருக்கு 'குதிரை மார்க்' தங்க பவுண் காசுகளை பரிசாக வழங்கினர்.

அப்போது வெள்ளைக்கார துரைமார் தான் தோட்டங்களை நிர்வகித்து வந்தனர். அவர்களின் நிர்வாக ஆட்சியின் கீழ் இந்தத் தோட்டம்- இந்த 'மம்பட்டித்' தோட்டம் எவ்வளவோ சீரும் சிறப்புமாகயிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏன் தெரியுமா? இப்போதுபோல உண்ணாவிரதமிருந்து, போராட்டம் நடாத்தி, பொலிசாரின் அடிதடிக்கு ஆளாகி, மனித உயிர்களைப் பலிகள் கொடுத்து தோட்டத்தை அடுத்துள்ள கிராமத்தவர்கள் இரவில் லயன்களுக்குள் தீ வைத்து கொழுத்தியபின் தான் கம்பெனிக்காரர்கள் கிடைக்க வேண்டிய தொழிலாளர்கள் உரிமைகளில் எதையாவது ஒன்றை பிச்சையாகத் தருகிறார்கள்.

அறுபது எழுபது வருடங்களுக்கு முன்பு வெள்ளைக்காரத் துரைமார் தோட்டத் தொழிலாளர்களுக்கு உண்ண உணவு கொடுத்து, சிறுபிள்ளைகள் வளர என பிள்ளைக் காம்பராக்களைக் கட்டி வைத்தனர், மருத்துவ மனைகள் கட்டி வைத்ததுடன், தோட்டத்துக்குத் தோட்டம் மாரியம்மன் கோவில்களைக் கட்டி வைத்தனர். வருடத்துக்கு ஒரு முறை பேதிமருந்து கொடுத்து, விளையாட விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுத்து, ஓய்வு நேரங்களில் மரக்கறி நாட்டி வயித்தை வளர்க்க தோட்டத்துப் புல் தரை காணிகளையும் கொடுத்தனர். வருடாவருடம் மாரியம்மன் ஆத்தாவுக்கு திருவிழாவும் எடுத்து சந்தோஷ வாழ்வு வாழ வழி சமைத்தனர். தேயிலைச் செடியை எவ்வாறு பாதுகாத்தனரோ அவ்வாறே தோட்டத்து தமிழ் தொழிலாளர்களையும் மிக அன்பாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருந்தனர்.

வெள்ளைக்காரத் துரைமார்களுக்கு செங்கோடன் சலாம் போட்டாலும், வெள்ளைக்காரத் துரைமார் செங்கோடனுக்கு ஒரு தனி மதிப்பை அளித்துவந்தனர். அவர் அந்த தோட்டத்து மண்ணையும், தேயிலைச் செடியையும் பெரிதாக நேசித்தமையால் தான் அந்த கௌரவம் என்பது யாருக்கும் தெரியாது. இப்போது செங்கோடனுக்கு வயது முதிர்ந்துவிட்டது.

நேற்றுச் சாயந்தரம் மூன்று மணியிருக்கும் சூரியன் மேற்கே மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தான். தேயிலைக் கொழுந்தைப் போல வாடி வதங்கிப் போயிருந்த செங்கோடன் திடீரென மயங்கி லயத்து லைசன்கல்லில் விழுந்துவிட்டார். தலையில்சிறிது காயம். இரத்தம் லேசாக வடிந்து கொண்டிருந்தது. தோட்டத்து மக்களும் சாதி சனங்களும் கூடிவிட்டனர்.

மூத்தவன் கல்யாண சுந்தரம் தோட்டத் துரையின் பங்களாவுக்கு ஓடினான்.

"ஐயா எங்கப்பன் மயங்கி விழுந்து மண்டையில காயம். இரத்தம் ஓடுது. அம்புலன்சு வண்டியை கொஞ்சம் தாங்க. டவுணு ஆசுபத்திரிக்கு கொண்டு போய் வார்ட்டுல நிப்பாட்டீட்டு வர்ரேனுங்க".

"என்னா மேன் பேசுற. உன் அப்பனுக்கா அரசாங்கம் அம்புலன்ஸ் வண்டியை தோட்டத்துக்கு அனுப்பியிருக்கு? அந்தா அங்க நிக்குதே பழைய லொறி. அதை எடுத்துக் கிட்டுப் போ".

"சரிங்க தொர ஐயா"

கல்யாண சுந்தரம் தலையைச் சொறிந்துகொண்டே டைவரை அழைத்துக் கொண்டு லயத்துக்கு போய் செங்கோடனை லொறியில் ஏற்றிக் கொண்டு போகும் போது வழியிலேயே உயிர் பிரிந்துவிட்டது.

அப்போது தோட்டமே அலறிக் கத்தியது. இன்று தோட்டத்து மக்கள் வேலைக்குப் போகவில்லை. தோட்டத்து எல்லா லயன் காம்பராக்களிலும் வெள்ளைக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. ஒரே அமைதி.

செங்கோடனின் இறுதி ஊர்வலம் ஆரம்பமாகிவிட்டது. எழுபது வருடமாக வாழ்ந்த அந்த தேயிலைத் தோட்டத்து லயத்து காம்பராவில் வாழ்க்கைப்பட்டு, பிள்ளைகளைப் பெத்து, பேரப்பிள்ளைகளை பார்த்து, மூன்றாவது பரம்பரையையும் கண்ட செங்கோடன் - ஊமையனாக சவப் பெட்டியில் வைத்து காம்பராவை விட்டு வெளியே தூக்கி எடுக்கும்போது தோட்டத்து மக்கள் "ஐயோ ஐயா போறீங்களா" என குரலெழுப்பி அழுது புலம்பினர்.

ஒப்பாரிகள் இன்னும் ஓயவில்லை. கிழட்டு கிழவிகள் மார்பில் தட்டி அழுதனர். சின்னஞ் சிறுசுகள் கிழடுகளின் அழுகையை வேடிக்கை பார்த்தனர்.

இறுதி ஊர்வலம் இப்போது தோட்டத்து துரையின் பங்களாவை கடந்து கொண்டிருந்தது. ஊர்வலத்தில் செல்வோரின் பார்வைகள் அனைத்தும் பங்களாவின் ஒரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புத்தம் புதிய "அம்புலன்ஸ்" வண்டி மீதே விழுந்தது.

ஆமாம்!!! தோட்டத் துரை அந்த அம்புலன்ஸ் வண்டியில் கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றுக்கு அந்தூரியன் பூக்களையும், உருளைக் கிழங்கையும் ஏற்றிக் கொண்டிருந்தான். அவனது வாயிலும், மூக்குத் துவார வழியுமாக சிகரெட் புகை வெளியேறிக் கொண்டிருந்தது.

கல்யாண சுந்தரம் தோட்டத் துரையை முறைத்துப் பார்த்தான். 'அந்த அம்புலன்ஸ் வண்டியின் முன் கண்ணாடியை கல்லால் உடைக்க' எண்ணினான். ஆனால் வெதும்பி செத்துப் போய்க் கிடந்த அவனது மனம் இடம்தரவில்லை.

தேயிலைச் செடிகளுக்கு மத்தியில் வெட்டப்பட்டிருந்த குழியில் செங்கோடனின் சடலம் வைக்கப்பட்டு மண் போடப்பட்டது.

பச்சைப் பசேலென காட்சி கொடுத்துக் கொண்டிருந்த அந்த தேயிலைச் செடிகள் 'பாவம் செங்கோடன் வழமையைப் போல அவரும் எமக்கே உரமாகிவிட்டார். இது அநியாயம் மட்டுமல்ல. அக்கிரமமும் தான். இதை யார் எப்போது தடுப்பார்களோ தெரியாது' என அந்த சாயந்திர நிலவு வெளிச்சத்தில் பேசிக்கொண்டிருந்தன.

# ஏமாறச் சொன்னது நானா?

சீடர்கள் யாவரும் சம்மணமிட்டு அமர்ந்திருந்தனர்.

துறவி அவர்களை தன் விழிகளால் ஏறிட்டார்.

"பற்றுக்கள் அறுத்தவனே பாரினில் உயர்ந்தவன். பற்றுக்கள் நம்மைப் பிணைக்கும் அடிமைக் கயிறுகள்."

சீடர்களில் ஒருவன் துறவியிடம் கேட்டான்:

"அடிமைக் கயிறுகளை அறுக்கும் வாள் எது குருவே?"

"வாள் தான் வையகப் பற்றற்ற நிலை! துறவறமே தூய வீரம்!"

சீடர்கள் தம் குருவை வியப்போடு நோக்கினர்.

இன்னொரு சீடன் மெல்லிய குரலில் கேட்டான்:

"குருவே! பற்றுக்களை துறப்பது என்பது வாழ்க்கையில் இருந்து தப்பித்தல் ஆகாதா? தப்பித்தல் என்பது கோழைத்தனம் ஆகாதா?"

குரு கேள்வி தொடுத்தவனை தன் விழிகளால் அளந்தார். இளைஞன். கட்டுமஸ்தான தேகம். களிப்பை நாடும் வயதின் வேகம். கட்டறுந்த மாடாக இன்பமென்னும் களனி தேடி அலைபாயும் வயது.

எடைபோட்ட துறவியின் உதட்டில் சாந்தமாய் ஒரு புன்னகை குடியேறியது.

"வாழ்க்கை என்பதும் அதன் வரவும், செலவும் சாதாரண மனிதர்கள் அனுபவிக்க வேண்டியது. துறவறம் என்பது வாழ்வில் உயர்ந்தது. துறவிகள் என்போர் மனிதரில் உயர்ந்தோர்."

"நன்று குருவே! ஆசையெனும் நெருப்பை அணைப்பது எப்படி?"

"மண். பொன். பெண்! மூன்றும் மற! துடியிடை அழகும், கனியிதழ் அமுதும் தொட்டும் சுவைத்தும் வாழ்வதும் ஒன்றுதான். கள்ளுண்ணும் தீய பழக்கமும் ஒன்றுதான், இரண்டுமே மதியை மடக்கிப் போடுபவை. மாயைகளை விதைப்பவை! வெறும் சதையை அழகென்றும், அணைக்க இன்பமென்றும், சுகிக்க சொர்க்கமென்றும் வாழ்வது மாயம்! வாழ்க்கை மாயமடா மகனே! இதிலென்ன சொர்க்கம்? ஈசன் திரு வடியில் சேரும் நாள்தானே நமக்கெல்லாம் சொர்க்கம்!"

சீடர்கள் அதற்குப் பின்னர் கேள்விகள் தொடுக்கவில்லை.

துறவி எழுந்தார். இடுப்பில் துண்டுடன் வெற்று மார்பும், வீரிய தேகமுமாய் துறவி தன் குடில் நோக்கிச் சென்றார்.

சீடர்கள் கலைந்தனர். சீடர்களில் ஒருவனுக்கு மட்டும் சிந்தையில் குழப்பம்.

'பற்று வேண்டாம் என்றால் ஈசன் திருவடிபற்றிட நினைப்பதும் பற்றாகி விடுமே. ஈசன் திருவடி சேரும் நாளுக்காய் ஏங்குதல் கூட ஆசைதானே!'

கேட்டுவிட வேண்டும். துறவி நாளை மீண்டும் வருவார். அதுவரை,பொறுமையில்லை. இப்போதே கேட்டுவிட வேண்டும்.

துறவியின் குடில் நோக்கி சீடன் விரைந்தான்.

□□


குடில் கதவு சாத்தப்பட்டிருந்தது. தட்டலாம் என்று சென்றவன் செவியில் உள்ளிருந்து கேட்ட சிரிப்பொலி விழுந்தது.

'இதென்ன இது. துறவியா சிரிக்கிறார்? துறவியின் நகைப்பில் நங்கையின் குரலொலி? எப்படிச் சாத்தியம்?'

சீடனுக்கு வியப்பு! செவியை நம்பலாமா?

மீண்டும் சிரிப்பொலி! நங்கையின் சிணுங்கல்!

சீடன் திகைத்துப் போனான். மெல்ல நகர்ந்து குடிலின் தட்டியின் துவாரம் வழியாக உள்ளே விழிகளை ஊடுருவச் செய்தான்.



அங்கே கண்டது, பற்றற்ற துறவி பாவையொருத்தியை பற்றித் தழுவி பிதற்றும் காட்சி.

அவளோ இளம் பெண். பருவச் செழிப்பால் சொர்க்கமான தேகத்திற்கு சொந்தக்காரி.

துறவி அவள் இடையைத் தழுவி, துகிலை அகற்றத் துடித்துக் கொண்டிருந்தார்.

"வெளியே துறவி வேசம். இங்கே துகிலை துறக்க வைப்பதில் வேகம். நன்றாக இருக்கிறது உங்கள் நாடகம்!"

அழகி சலங்கை ஒலியாய் நகைத்தாள். துறவி வெண்ணெயாக உருகினார்.

"நிலவுக்கு துகில் இல்லை. நீயும் நிலவு. உனக்கெதற்குத் துகில்? மோகன நிலவே உனக்கும் துறவுதானே சொல்லித்தருகிறேன். அதுதானே முற்றும் துறவடி என் மோக சுந்தரி என்கிறேன்"

சொல்லிக் கொண்டே அவளின் மார்புத் துகிலை அகற்றினார். அகற்றியவர் தன்னை மறந்து இருதனங்களின் மத்தியிலேயே தன் முகத்தை தொலைத்தார்.

'துறவிக்கும் விஷமம் தெரிகிறது. விபரமான துறவிதான்' என்று மனதுக்குள் வியந்தாள் அழகி.

தனங்களில் தவழ்ந்த துறவியின் முகத்தை உயர்த்தி, தன் கரங்களில் தாங்கி விழிக் குளத்து கரு வண்டுகளால் துளைத்தாள்.

துறவியின் சித்தம் விரகத்தீயில் வெந்து போனது. உதடுகள் துடித்தன. 'உண்ண வா' என்று மாதுளம் இதழ்களை அழைத்தன.

பாவம்தான் துறவி. பாவை அழைப்பை ஏற்று இதழ்களை அனுப்பினாள். துறவியை மெல்ல மெல்ல நகர்த்தி குடிலின் ஒரத்தில் விரிந்திருந்து, விருந்து பரிமாறும் இலையாவேன் என்று கிடந்த கட்டிலில் தள்ளினாள்.

மல்லாந்து சரிந்த துறவி, "மண் வேண்டேன், பொன் வேண்டேன். ஆனால் மாங்கனியே நீ எனக்கு வேண்டும் என்பேன். பசிதாங்கேன். உணவின்றி கிடப்பேன் ஒரு யுகமானாலும்! ஆனால் உன் இதழமுதம் இன்றிகிடவேன் ஒரு நாளும்! பசி தீர்க்க தா புசிக்க உன் கொவ்வை இதழ் எனக்கு!"

துறவி பிதற்றியதை அழகி இரசித்தாள் பின் துறவிமேல் பரவித் தவழ்ந்தாள். நெஞ்சகத்து மாங்கனிகள் துறவியின் மார்பை துளைப்பதுபோல் அழுத்த துறவி மோகப் பற்று என்னும் கடலுக்குள் மூழ்கிக் கொண்டிருந்தார்.

காலோடு கால்கள் பின்ன, மனதுக்குள் ஆசை ஒரு சிலந்தியாய் வலை பின்ன துறவி மீளாத சிறைக்குள் சிக்கிக்கொண்டிருக்க, அவர் மார்பில் இதழ்களால் ஊர்வலம் நடத்திவிட்டு,

"திடமான தேகம்! திவ்வியமான தோற்றம்! உங்களுக்கேன் வந்தது துறவியாகும் எண்ணம்?"

அழகியின் கன்னத்தில் கன்னம் வைத்துக் கொண்டு, அவள் இதழ் கிண்ணத்தில் விரல் இரண்டால் கிள்ளிப் பதம் பார்த்தபடி துறவி சொன்னார்,

"வாழ ஒரு வழிதானடி வாயார உபதேசிப்பது! கால் பிடிக்க ஒருவர். கைபிடிக்க இன்னொருவர் நாடாளும் மன்னர் முதல் நல்ல இளம் பெண்கள் வரை பற்றற்ற துறவி என்று என் பாதத்திலே விழுந்திடுவர். பாசத்திலே மொய்த்திடுவர். பாத பூசை செய்திடுவர். துறவியாகும் எண்ணத்தினால் திரண்ட பலன்தான் இத்தனையும்!



## தருவது - ரசிகன்

துறவி சொல்லிவிட்டு வெற்றிச் சிரிப்பை உதிர்த்தார். பற்று மறக்காத சிரிப்பு!

"ஏமாற்றிப் பிழைப்பது நியாயமா குருவே?"

"நீயுமா என்னைக் குரு என்கிறாய்?"

"எனக்கும் துறவறமும், துறந்தபின்னர் சுக இதமும் சொல்லித் தருபவர் தாங்கள் அல்லவா? கற்றுத் தருபவர் குருதானே?"

"குத்திக் காட்டுகிறாயா?"

"இல்லையில்லை. தங்கள் மோக வித்தைத் திறனை தட்டிக்கொடுத்து ஊக்குவித்தால்தானே உங்கள் வித்தை இன்னும் வளரும்! இன்ப உலாவும் மேலும் விரியும்! சொல்லுங்கள் குருவே ஏமாற்றுவது குற்றமல்லவா?"

துறவி அவளை மேலும் இறுக்கிக் கொண்டார்.

"தவறு பெண்ணே. விட்டில் பூச்சிகள் விளக்கில் விழுந்தால் அது விளக்கின் குற்றமா? கானலைக் கண்டு தாகம் தீரும் என்று தவிப்போர் ஓடினால் அது கானலின் குற்றமா? பூநாகம் காலைச் சுற்றினால் அதனை முல்லைப்பூ சரம் என்று எடுத்து தோளில் சூடினால் அது நாகத்தின் குற்றமா? நானோ அழைத்தேன் நாடி வாருங்கள் என்று? தாங்களாகவே வருகிறார்கள். தாள் பணிகிறார்கள். தானம் இடுகிறார்கள். அது என் குற்றமா? கூறு பெண்ணே!"

துறவி மூச்சுவிடாமல் பேசி முடித்ததில் சிறிது களைத்துப் போனார்.

"பேசியே களைத்துவிட்டால் பேரின்ப களைப்புக்கு வாய்ப்பேயில்லாமல் போய்விடும் குருவே!"

கேலியாய் சொல்லி துறவியின் போர்வையாய் மாறினாள் அழகி.

வெளியே நின்ற சீடன் வெறிபிடித்தவன் போலானான். நேற்றுப் படித்த திருக்குறள் ஒன்று அவன் மனதில் எழுந்தது.

***"மனதை அடக்கும் வல்லமை இல்லாதவன் மேற்கொள்ளும் தவக்கோலம் பசு புலித் தோலைப் போர்த்துக்கொண்டு பயிரை மேய்வது போன்றதாகும்."***

**"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்து மேய்ந் தற்று"**

அதிகாரம்-28
குறள்-273

## குறுக்கெழுத்துப் போட்டி இல-100

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| | ■ | | ■ | ■ | 4 | |
| 5 | | | | | | ■ |
| | ■ | 6 | | | | |
| | ■ | | ■ | ■ | | ■ |
| ■ | 7 | ■ | 8 | | | |
| 9 | | | | | ■ | ■ |

### இடமிருந்து வலம்

01. செருக்கு- மற்றுமொரு சொல்.
04. கடையேழு வள்ளல்களில் ஒருவன்.
05. பெருங்கடலில் காணப்படும் இதனைப் பிடிப்பதற்குச் சில நாடுகளில் தடை.
06. அறிஞர் அண்ணா தம்பிமாருக்கு விதித்த கோட்பாடுகளில் முதலாவதின் மறுபெயர்.
08. தூக்கத்தை நினைவு படுத்தும்.
09. நீண்டகாலம் வாழ இப்படியும் வாழ்த்துவார்கள்.

### மேலிருந்து கீழ்

01. மற்றுமோர் உலகத்தின் அதிபன்.
02. பன்னிரெண்டு வருடங்களைக் கொண்டது.
03. தந்திரமான மனிதர்களை இதற்கு ஒப்பிடுவார்கள்.
04. இவன் வைத்திருக்கும் ஊதுகுழல் சில மனிதர்களையும் ஆட்டி வைக்கும்.
07. இயற்கையாக வளரும் இதனை செயற்கையாக உருவாக்கி நவீன மருத்துவத்திற்குப் பயன் படுத்துகிறார்கள்.
08. அரிவையரின் இதனை கொடிய கணை என்று கவிஞர்கள் வர்ணிப்பர்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 20.05.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-100
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-98ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ந | ர | 2 க | ம் | ■ | 3 வி | ■ |
| 4 க | ன் | னி | ■ | 5 கோ | மா | ளி |
| ர் | ■ | ■ | 6 அ | ன் | ன | ம் |
| 7 வ | ழி | 8 மு | றை | ■ | ம் | ■ |
| ல | ■ | க | ■ | 9 வ | ■ | 10 ப |
| ம் | ■ | 11 மு | ட் | டை | ■ | ச் |
| ■ | 12 பீ | டி | கை | ■ | 13 ஓ | சை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 98இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. ஏ.சி. பாத்துமாபீபி, கொழும்பு-03.
2. செல்வி. ஆர். சௌமியா, நுகேகொடை.
3. எம். பைஸர், கல்முனை.
4. கே.சிவரூபன், தலவாக்கலை.
5. திருமதி. வி. ஜெயந்தினி, திருகோணமலை.
6. எம். பார்த்தீபன்,வவுனியா.
7. பாத்திமா மின்ஹா, மாத்தளை.
8. செல்வி. எஸ். ஷோபா, மாத்தளை.
9. மாணிக்கம் குணசீலன், அட்டன்.
10. செல்வி. பாத்திமா றிஸ்வானா, சாய்ந்தமருது-16.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.




புலிகளிடம் ஏவுகணை வந்துவிட்டதே, அரசு அதற்கு எப்படி பதில் கொடுக்க வேண்டும்? மாற்று ஆயுதம் என்ன?

எஸ்.ராதா-வெலிமடை.

*அரசியல் தீர்வுதான் ஒரே ஒரு மாற்று ஆயுதம்.*

□□

வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற ஒருவழி சொல்லுங்களேன்?

செல்வி சாந்தி-கொழும்பு-10.

*உண்மை, உழைப்பு, நேர்மை என்னும் படிகள் வழியாக நிதானமாக உயருங்கள்.*

□□

விசுவின் 'பட்டுக்கோட்டை பெரியப்பா'வைப் பற்றி?

அஸ்ரபுன் நிஷா ஹமீட்-அக்குறணை.

*ரொம்பவும் வயதான பெரியப்பா; அதுதான் ஓடாமல் சுருண்டுவிட்டாரோ!*

□□

நான் ஒரு வண்டாக மாற விரும்புகிறேன்?

ஏ.எம்.எம்.ஜலால்-புத்தளம்.

*மலர்களில் முள்ளும் உண்டு. ஜாக்கிரதை.*

□□

டியர் சிந்தியா! இக்காலத்திற்கு பொருத்தமான ஒரு பொன்மொழியை எடுத்துவிடுங்களேன்?

எம்.நிஸா முஸம்மில்-தொடம்வத்த.

*"நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்துவிடும்" பாடலில் பொன்மொழி*

□□

டியர் சிந்தியா! நக்மாவை அடிக்கடி கனவில் காண்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

மொஹமட் பர்தான்-மொரட்டுவ.

*திரையில் கண்ட நிழலை நிஜம் என்று நம்பி 'ஜொள்'விடும் ஆசாமி என்று.*

□□

ஒருவர் இரு பெண்களை நினைத்து விட்டால் அதன் பெயர் என்ன?

கே. நிர்மலா-கொழும்பு-14.

*இரண்டு தோணியில் கால்வைத்தால் அதன் பெயர் என்னவோ-அதுதான்.*

□□

உலகில் மிகச்சிறந்த பெண் யார்? எங்கே சொல்லுங்கள் பார்க்கலாம்?

**பொருத்தமான பொன்மொழி?**

ஆர். வளர்மதி-கண்டி.

*அன்னை தெரேசா.*

□□

பெண்களின் ஆயுதம் கண்ணீர் என்று கூறுகிறார்களே, அது உண்மையா?

நஸீராஜ் சும்சுதீன்-கந்தளாய்.

*அதெல்லாம் அந்தக்காலம். நீர் செய்திகள் படிப்பதில்லையா நஸீராஜ்?*

□□

டியர் சிந்தியா! அரசியல் தீர்வு தற்போது தேவையில்லை என்கிறாரே திரு.நீலன் திருச்செல்வம்?

வ.சத்தியேந்திரன்-மட்டக்களப்பு.

*அவர் புலிகளை திருப்தி செய்வதுபோல பாசாங்கு செய்தாலும், பாசம் வைத்திருப்பது வேறிடத்தில்.*

□□

சுப்பிரமணியம் சுவாமிக்கு வெற்றிதானே?

அ.ஜெயந்தன்-வவுனியா.

*தமிழக முதல்வர்கள் மீது இலஞ்சக் குற்றச்சாட்டுகள் ஒன்றும் புதிதல்ல. நீதிமன்ற தீர்ப்பு எப்படியிருந்தாலும், மக்கள் நீதிமன்றம் செல்விக்கு கைகொடுத்தால் சுவாமிக்கு தோல்விதான். பொறுத்திருந்து பார்க்கலாம்.*

□□

'இந்தியன்' படம் தடைப்பட்டுவிட்டதா?

கமல்பிரியன்-நுவரெலியா.

*வதந்திகளையும் மீறி படம் வளரப் போவதாக கமலே சொல்லியிருக்கிறார்.*

□□

வந்தால் போகாதது எது?

எல்.சில்மியா-கல்முனை.

*அவமானம்.*

□□

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் உங்களை சலிக்கவைக்கும் நிகழ்ச்சி எது?

சி.சாரங்கன்-கொழும்பு-06.

*ஐ.ரி.என் ஒளிபரப்பிய படங்களை மீண்டும் தவறாமல் ஒளிபரப்பும் ரி.என்.எல் தொலைக்காட்சியின் தமிழ் பட ஒளிபரப்பு.*

□□

ரூபவாஹினி வசந்தராஜா பதவி விலகி விட்டாரே?

எம்.மகேந்திரன்-திருகோணமலை.

*சிலர் தாங்களே தங்கள் பெயரைக் கெடுத்துக் கொள்வதுண்டு. அவரும் அப்படித்தான். பேசாமல் பி.பி.சியிலேயே இருந்திருக்கலாம்.*

□□

உங்களுக்கு யாருடைய நடிப்பைப் பிடிக்கும்?

சி.வசந்தமலர்-கொழும்பு-11.

*அவர் இருக்கும்வரை வேறு பெயரைச் சொல்ல முடியுமாங்கோ? அவர்தானுங்கோ நடமாடும் நடிப்புச் சுரங்கம். சிங்கத்திற்கு வயதானாலும் பசும்பொன்னில் திறமையில் ஒரு 'இன்ஞ்' கூட குறையவேயில்லையே.*

□□

மனிதனை உயர்த்துவது எது?

ஜனனி மதுரலிங்கம்-கொட்டாஞ்சேனை.

*சக மனிதனை மதித்தல். நேசித்தல்.*

□□

புற அழகை மட்டும் வைத்து காதலித்தால் என்னாகும்?

து.கவிதா-குருநாகல்.

*மோகம் முப்பது நாள் என்பது பட்டபின்னர் தெரியவரும்.*

□□

**இவ்வாரம் (14.05.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 78

காலத்தின் குரல்-

பாரதப்போரின்று பாரின் வரலாற்றில்
பெருமதொரு மாற்றத்தைப் பெற்றிடப்போகிறது!
கங்கையின் மைந்தர்தனை களத்தில் ஒதுக்கிவிட்டு
கதையின்று வேறுதிசை கடிதேகப் போகிறது!
கவுரவர் இந்நிலமையினை கண்டுகொண்டாரானாலும்
காப்பதற்கு வழிகாண முடியாது தவிக்கின்றார்!
பார்த்தனவன் தேரிலின்று பரந்தாமனிருந்தாலும்
தேர்ப்பாகன்பின் புறத்தே சிகண்டியையும் காண்கின்றோம்!

-காட்சி தொடக்கம்-

குருச்சேத்திரம்–போர்க்காட்சிகள் காட்டப்படுகின்றன.

அர்ச்சுனனின் இரதத்தை கிருஷ்ணர் செலுத்தி வருகிறார்;

பின்புறம்– அர்ச்சுனனுக்கருகில் சிகண்டியும் காணப்படுகிறார்.

**அர்ச்:** கெசவா! அதோ பிதாமகரின் தேரினைக் காணக்கூடியதாக இருக்கிறது: நமது இரதத்தினையும் அப்பக்கமாகத் திருப்புங்கள்.

அர்ச்சுனனின் இரதம் பீஷ்மரின் இரதம் இருக்கும் பக்கம் செல்வதைக் கண்ட கவுரவரின் படைகள் பீஷ்மரைப் பாதுகாக்கும் நோக்குடன் அவரைச் சூழ்கின்றன.

கடுமையான தாக்குதலைத் தொடர்ந்து அர்ச்சுனன் பீஷ்மரை நேருக்கு நேர் எதிர் கொள்கிறான். அர்ச்சுனனின் இரதத்தில் சிகண்டி அமர்ந்திருப்பதைக் கண்ட பீஷ்மர் தன் ஆயுதங்களைக் கீழே போட்டு விடுகிறார். அர்ச்சுனன் காண்டீபத்தை ஏந்தி ஒன்றன் பின் ஒன்றாகப் பாணங்களைத் தொடுக்கிறான்.

**பீஷ்ம:** கடவுளின் கருணை உனக்குக் கிட்டட்டும் மகனே....ஆண்டவன் அருள் கிட்டட்டும்! **கண்களைக் கண்ணீர் மறைக்க தொடர்ந்து அர்ச்சுனன் கணைகளைத் தொடுக்கிறான். பீஷ்மர் காயங்களின் வேதனையால் தடுமாறுகிறார்.**

**பீஷ்ம:** ஆண்டவன் உனக்கு அருள்வான் மகனே....ஆண்டவன் உனக்கு வெற்றியைத் தருவானாக..... மகனே அர்ச்சுனா! என்னுடலைத் தாக்கும் கணைகள் ஒவ்வொன்றும் உன்னுடையவை என்பதை நான் அறிவேனடா....! ஆச்சாரியார் துரோணரை நான் பாராட்டுகிறேன்..... "ஆச்சாரியாரே! தங்கள் மாணாக்கன் எனக்கு இறுதி அடி கொடுத்து விட்டான்! ஆமாம்:.... உங்கள் பெருமையை உங்கள் மாணவன் நிலை நாட்டி விட்டான் ஆச்சாரியாரே...."

அர்ச்சுனன் கணைகளைத் தொடுத்து பீஷ்மரை இரதத்திலிருந்தும் கீழே வீழ்த்தி விடுகிறான். ஆழ்ந்த துயரத்துடன் "பிதாமகர்"...."பிதாமகர்" என்று கூவிய வண்ணம் அம்புகளைத் தொடுக்கிறான், அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகிறது.

பிதாமகர் எழுந்திருக்க முயலும்போது அர்ச்சுனன் தொடுத்த மற்றுமொரு கணை பீஷ்மருடைய வாளையும் கேடயத்தையும் பற்றி விடுகிறது. பீஷ்மருடைய கதாயுதமும் அர்ச்சுனனின் கணையால் தட்டி விடப்படுகிறது. அர்ச்சுனன் அழுத வண்ணமே பீஷ்மரின் கை–கால்களிலும் கணை பாய்ச்சுகிறான்.

**அர்ச்:** பிதாமகரே.. என் அன்பு பிதாமகரே....

அர்ச்சுனன் விடாமல் தொடர்ந்த அம்புத் தாக்குதலால் பிதாமகர் நிலத்தில் வீழ்கிறார். அவருடைய உடலை கீழே விழுந்து விடாமல், அவருடைய மேனி முழுவதும் பாய்ந்துள்ள அம்புகள் தடுக்கின்றன. கிருஷ்ணர் கவலை தோய்ந்தவராகப் பார்க்கிறார். யுதிஷ்டிரர், துரோணாச்சாரியார், சகுனி, அஸ்வத்தாமன், கிருபாச்சாரியார், அபிமன்யு ஆகியோரும் இந்தக் காட்சியைப் பார்க்கின்றனர். இவர்களனைவரும் தங்கள் ஆயுதங்களைக் களைந்து விட்டு இரதங்களிலிருந்து கீழிறங்கி, வீழ்ந்து கிடக்கும் வீரரை அணுகுகின்றனர். துரியோதனன் ஓடோடி வருகிறான். தன்னைச்சுற்றி நிற்கும் சகலரையும் பீஷ்மர் அம்புப் படுக்கையிலிருந்த வண்ணம் நோட்டமிடுகிறார்.

**பீஷ்ம:** என் தலையைத் தாங்கிக்கொள்ள ஏதாவது ஆதாரம் தேவைப்படுகிறதே...!!

**துரி:** துச்சாதனா.... ஓடிச் சென்று தலையணைகளை எடுத்துக் கொண்டு வா....

துச்சாதனன் பல தலையணைகளைக் கொண்டோடி வருகிறான்.

**பீஷ்ம:** என்னுடைய இத்தகைய படுக்கைக்கு இத்தகைய தலையணைகள் தேவையில்லை. யாராவது அவனை அழைத்து வாருங்கள்.... இத்தகைய படுக்கையை எனக்குத் தந்தவனே என்னுடைய தலையையும் தாங்குவதற்கான ஏற்பாட்டையும் செய்யட்டும்!

**அர்ச்:** பிதாமகரே! இதோ இங்கேதான் இருப்பாவி நிற்கின்றேன்! என்னை மன்னியுங்கள்!


[illegible] கூறிய அர்ச்சுனன்

**அர்ச்:** யாராவது என் வில்லினை எடுத்துத் தாருங்கள்...

[illegible] அதில் இரு அம்புகளைத் [illegible] அதிலிருந்து கிளம்பிய பாணங்[illegible] [illegible] தலையினைத் தாங்கிக் [illegible]

**பீஷ்ம:** [illegible] எனக்குத் தாகமாக இருக்கிறதடா...!

அர்ச்சுனன் மற்றுமொரு பாணத்தை விடுகிறான். [illegible]



அர்ச்சுனனின் அம்பு பட்ட இடத்திலிருந்து தண்ணீர் சுரந்து நேராக பீஷ்மரின் வாய்க்குள் போய் விழுகிறது.

**பின்னணிப் பாடல்:**

**அப்பு என்னும் தாய் வயிற்றில் அவதாரமான மைந்தன்
இப்பாரில் இணையெதுவுமில்லாத இயலெழில்சேர்
ஒப்பரிய தொருகூடம் ஒளியிழந்து அடிந்ததுபோல்!
இப்புவித் தாய் தன்மடியில் இடம் கண்டு வீழ்ந்து விட்டான்.
பிதாமகரின் பெரும்துயரை பெற்றெடுத்ததாய் கங்கை
வேதனையுடன் பார்த்தாள், விம்மிஅழும் நிலை நீக்கி
சோதனையின் பழு வகற்றி சேயவனைத்தானணைக்க
மாதவளும் துணிந்ததனை பிதாமகரும் கண்ணுற்றார்.**

**பீஷ்ம:** வணக்கம் தாயே-!

**கிருஷ்:** கங்கை மைந்தரின் இக்கடைசி காலத்தில் அவரைத் தனிமையில்- அமைதியாக விட்டுவிடுவதே நலமென எனக்குத் தோன்றுகிறது.

**துரி:** அவரைத் தனித்திருக்க எவ்வாறு விட முடியும்? அவர் எங்கள் முப்பாட்டனாயிற்றே?

**பீஷ்ம:** துரியோதனா! உனக்கு மட்டுமல்ல அப்பா....பாண்டவர்களுக்கும் நான் முப்பாட்டன் தான்! என் ஆயுட் காலத்தில் உன்னிடமோ அல்லது உன் தாயிடமோ நான் எதனையும் கேட்டதில்லை. இப்போதுதான் கேட்கிறேன், என்னை சற்று அமைதியாக இருக்கவிட்டு போவாயா?

**துரி:** தங்கள் விருப்பப்படியே இப்போது போகிறேன்...ஆனால் தங்களைப் பார்ப்பதற்கு மீண்டும் வருகிறேன்.

**பின்னணிப் பாடல்:**

குருவம்சத்தின் குலக்கொடி இங்கு
குற்றுயிராகக் கிடப்பதாலாங்கே
அருபெரு வீரர் அனைவரும் வந்து
தலை கவிழ்ந்தாங்கே துயருறுகின்றார்.
தரணியிலிவரினை நிகரென நிறுத்தி
அவரிணை இவரென இயம்பிடலாமோ?
பகரொணா வினாவிடை புரிந்திடாதனைவரும்
துயரிடை தோய்ந்து துன்புறுகின்றனர்.
துரோணாச்சாரியார் கிருபாச்சாரியார்
துய்மையின் சின்னமாம் பீஷ்மரின் நிலையினை
தெரிந்திருந்தருகினில் தலை கவிழ்ந்திருந்த
துருபத மன்னரும் யுதிஷ்டமாமன்னரும்
அருச்சுனன் ஏவிய அனலெறி கணைகளால்
அவதியிலுழலும் அரும்பெரும் வீரரை
நெருங்கியேவந்தனர் நீழ்விழி சொரிந்திட!
நெடுமாலுமாங்கே நிலை தளர்ந்திருந்தான்!
பெரு நெருப்பிடையே புகுந்தோர் புழுபோல்
பார்த்தனும் துடித்து பதைபதைக்கின்றான்.

□□□

துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார், துருபத மன்னர், யுதிஷ்டிரர், திஷ்டத்துய்மன், சகுனி, மத்சய மன்னர் மற்றும் அர்ச்சுனனுடம் கிருஷ்ணர் ஆகிய அனைவரும் பீஷ்மரைச் சூழ்ந்து துயரமுடன் காணப்படுகின்றனர். பீஷ்மர் கிருஷ்ணர் பக்கம் கண்ணோட்டம் செலுத்தியவண்ணம்....

**பீஷ்ம:** கிரிதரா! என்னுடைய இத்தகைய ஆதரவற்ற நிலைக்கு நீ ஒருவன் மட்டுமே உரிய கருத்தினைக்கூற முடியும்..?

**கிருஷ்:** கங்கையின் மைந்தரே! தங்கள் நிலையினை நான் மட்டும் புரிந்து கொண்டால் போதுமா? சத்தியத்தின் மறு அவதாரம் என்றும், கடமையுணர்வு மிக்க கனவான் என்றும் இந்த உள்ளவரை மனித இனம் த[illegible] போற்றும்.

கங்கையும் பீஷ்மரும் கிருஷ்ணருக்கு மரியாதை செலுத்தியதும் கிருஷ்ணர் அங்கிருந்து வெளியேறுகிறார். கங்கை தன் மைந்தனின் நெற்றியைத் தடவிக் கொடுக்கிறார்.

**கங்கை:** மகனே! என்னுடன் வந்துவிடு!

**பீஷ்ம:** எப்படி வர முடியும் தாயே? அஸ்தினாபுரத்தினை சகல வழிகளிலும் பாதுகாப்பாக வைத்திருக்க வல்லரிடம் ஒப்படைத்தபின்தான் இந்த உடலை விட்டு ஆவியினைப் பிரிக்க முடியும் என்று நான் ஏற்படுத்திக் கொண்ட பிரதிக்ஞையை என்னால் மீற முடியாதே!

**கங்கை:** அவ்வாறானால் நீ அனுபவிக்கும் வேதனை....?

**பீஷ்ம:** அம்மா! என் வாழ்நாள் முழுவதுமே துன்பமும் துயரமும் இணைந்த அநுபவத்தையே கண்டிருக்கிறது. அஸ்தினாபுரம் பாதுகாப்பான கரங்களில் ஒப்படைக்கப்பட்டதைக் கண்ணுற்ற பின்னர், எனது வாழ் நாட்கள் உண்மையில் பலனுள்ளவை என்ற திருப்தியாவது ஏற்படுமல்லவா?

□□□

பீஷ்மர் தன்னந்தனியாக இரவில் அம்புப் படுக்கையில் கிடக்கிறார்.

காலத்தின் குரல்:

**அம்புப் படுக்கையில் அடியற்றமரம்போல்
அயர்ந்து தூங்கும் அம்மாமனிதன்
அமைதியிலாழ்ந்து அணையும் தீபமாய்
அமைமுடியிருக்கும் அழகே அழகாம்!
கங்கையின் மைந்தர் கடந்துள்ள பாதை
எங்குமே என்றும் எவரறிந்தில்லை!
கங்குல்சூழுலகின் மங்கல விளக்காய்
திங்களைப் போன்று தண்ணொளி மீந்துளான்!
பாரத நாட்டின் பண்பும் பெருமையும்
பாரினில் நிலைந்திடப் பாதை வகுத்தனன்!
நேர்மையின் நிலைக்களனாக நிலவிடும்
சீர்பெறு சீலனை சிரத்தால் துதிக்கிறேன்!**

□□□

அர்ச்சுனன் பீஷ்மரிடம் தனியாக வந்து அவர் கைகளைப் பிடித்தபடி விம்மி விம்மி அழுகிறான்.

**பீஷ்ம:** பாரத வம்சத்தின் மானத்தைக் காப்பவனே...! குந்தியின் மைந்தனே..! உன்னுடைய வீரத்திலும் என்மீது கொண்ட பாசத்திலும் நான் உன் மீது வைத்திருந்த நம்பிக்கையை தவறாமல் நிரூபித்து விட்டாயடா என்னருமை மகனே....!

**அர்ச்:** அது வீரமல்லவே பிதாமகரே... அது கோழைத்தனமல்லவா....? சிகண்டியின் பின்புறம் பதுங்கியிருந்துகொண்டு தங்களைத் தாக்கியமை எவ்வாறு வீரச் செயலாகும்? தங்களது பொன்னான உடலினைத் துளைத்துக் கொண்டு அட்டைபோல் இரத்தத்தை உறிஞ்சும் கணைகள் அத்தனையும் நான் உங்கள் மீது ஏவிய கணைகள் அல்லவா பிதாமகரே...? இந்தக் கொடியவனின் செயலுக்கு என்றுமே மன்னிப்புக்கிடையாது.....!

**பீஷ்ம:** சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொள்ளாதே....! சிகண்டி எனது விதி! அவனைத் தக்கபடி பயன்படுத்தியது தான் உனது தந்திரம். அவனை ஒரு கவசமாகப் பயன்படுத்தி இருக்கிறாய். அந்தக் கவசத்தை ஊடுருவ என்னால் முடியாது. அவ்வளவுதான்!

**அர்ச்:** இருப்பினும்-எங்களது வெற்றிக்காக தங்களைப் பலி கொடுத்தமை நிச்சயமாக ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகுமே பிதாமகரே....!

**பீஷ்ம:** அர்ச்சுனா! எத்தகைய விலை கொடுத்தாலும் வெற்றி கிட்டுவது பிரதானமானதே! கண்ணீர் வடிப்பது நல்லதல்ல மகனே! யுத்தம் இன்னும் முடிந்துவிடவில்லை... என்னுடைய முடிவினை நானே தேர்ந்தெடுக்கும் கவசத்துடனேதான் நான் இந்த யுத்தத்தில் ஈடுபட்டேன். அஸ்தினாபுரத்தின் எதிர்காலத்துடன் எனது உயிர் பின்னிப் பிணைந்துள்ளமையினால் நானே விரும்பினாலும் என்னுயிர் இந்த உடலை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாது. சிகண்டியை உனது கவசமாக வைத்துக் கொண்டால் உன்னுடைய பலமும் என்னுடைய பலத்துடன் சமனாகிவிடும். அப்போது என்னை உன்னால் வெற்றி கொள்ள முடியும் என்பதனை, அதனால் தான்- கடந்த இரவு உனக்கு உணர்த்தினேன். தக்கபடி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெற்றி கண்டு விட்டாய்!

**அர்ச்:** ஐயையோ பிதாமகரே....!!

**பீஷ்ம:** எனது தோல்வி எனக்கு அமைதியினைத் தந்திருக்கிறது மகனே....! அஸ்தினாபுரம் பாதுகாப்பான கைகளுக்குத்தான் போய்ச் சேரும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது. உன் அழுகை நீ பெற்ற வெற்றிக்குக் களங்கத்தை ஏற்படுத்திவிடும் மகனே....! நாளை நீ மீண்டும் போர்க்களம் போக வேண்டியிருப்பதால் போய் ஓய்வெடுத்துக்கொள்! மென்மேலும் வெற்றிகளைப் பெற்று உயர்ச்சியை அடைவாயாக! மகனே அர்ச்சுனா! நாளை-உன்னை இணையற்ற வீரனாக ஆக்கிய உன் குருவுடன் மோதப் போகிறாய்! உன்னைப் போன்ற ஒரு அரிய வீரனைப் பெற்றமைக்காக உன் குருவே உன் வீரத்தைக் கண்டு, உன்னை வாழ்த்த வேண்டும்! என்கைகள் உன் கண்ணீரைத் துடைப்பதாகக் கருதி உன்கைகளால் கண்ணீரைத் துடைத்துக் கொள்... இறைவன் உனக்கு நீடித்த ஆயுளையும் வெற்றியையும் அருள்வானாக.!

அர்ச்சுனன் பீஷ்மரின் கீடத்தை எடுத்துக் கொண்டு அவருடைய பாதங்களில் வணங்கி விட்டுச் செல்கிறான்.

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்–விதுரரின் இல்லம்.

**விதுரரின் மனைவி:** என்ன நடந்தது...?

**விதுர:** சஞ்சயனுடைய இல்லத்திலிருந்து இப்போதுதான் வந்து கொண்டிருக்கிறேன்...!

**விது.மனை:** சஞ்சயனுக்கு என்ன நடந்தது....?

**விதுர:** அவருக்கு எதுவுமே நடக்கவில்லை. அனால்.. அஸ்தினாபுரம் தான் வீழ்ந்து... படுகாயமடைந்த நிலையில்.... குருதி பெருக்கெடுக்க ....பிராமகர்....

**குந்தி:** என்ன? பிதாமகருக்கு என்ன நடந்து விட்டது.....? விதுரரே கூறுங்கள்!

**விதுர:** அரச கட்டிலேறத் தகுதியானவரைத் தேர்ந்தெடுப்பதில் போதுமான அளவு இராஜதந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். தன்னுடைய தந்தை அமர்ந்த அரியணையில் தற்போதுள்ள அரசரை வைத்து நிலமையைச் சீர் செய்யலாம் என்று தவறான கருத்துக்கு இடமளிக்கப் பட்டதனால் ஏற்பட்ட சிக்கல் இது. பிதாமகர் அன்று விட்ட பெரும் தவறின்பயனாக இன்று பிதாமகரை அர்ச்சுனன் அம்புப் படுக்கையில் கிடத்தி விட்டான்.

**குந்தி:** என்ன சொன்னீர்கள்....? பிதாமகரை என் மகன் அர்ச்சுனனா...?

**விதுர:** ....அவர் இன்னும் தன் உயிரினை விட்டுவிடவில்லை.... அவருடைய சபதம்... அஸ்தினாபுரம் எத்தகைய ஆபத்துமற்ற பாதுகாப்பான கரம் சேரும் வரை அவர் உயிர் தரித்திருப்பார்.

**குந்தி:** அவருக்கு இறுதி மரியாதையினைச் செலுத்தப் போவீர்களா விதுரர் அவர்களே....?

**விதுர:** இல்லை அண்ணி... அந்த மாபுருடரின் உடல் காயம் பட்டுத் துடிப்பதைப் பார்க்கும் வலிமை எனக்குக் கிடையாது. தூய்மையான வெண்பட்டாடை போர்த்திய அந்தத் திருவுருவம் என்றும் சிதையாமல் என் மனக்கண்ணில் பதிந்து கிடக்க. வேண்டும். அந்த உருவம் சிதைந்து போனதாக என்னால் கற்பனை பண்ணவே முடியாது...

விதுரர் தன்னுடைய கைகளால் தன்னுடைய முகத்தை மறைத்துக்கொண்டு அழுகிறார்.

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்– திருதராட்டிரர் சோகமே உருவாக அமர்ந்திருக்கிறார். குந்தி அங்கு வருகிறார்.

**திருத:** குந்தி..குந்தி...!

**குந்தி:** வணக்கம் மகாராஜா! வணக்கம் அக்கா...!

காந்தாரி எழுந்து சென்று குந்தியை அணைக்கிறார்; இருவரும் அழுகின்றனர்.

**திருத:** என்ன இன்றுதான் என்னைப் பார்க்க வேண்டும் என்று எண்ணம் வந்ததோ...? வரும்போதெல்லாம் காந்தாரியைப் பார்த்துவிட்டு அப்படியே போய் விடுகிறாய்....உன்னுடைய புத்திரர்களுக்கு அநீதி விளைவித்துவிட்டேன் என்று நீ கருதுவதற்கு நியாயமுண்டு. இருப்பினும் எனக்கு விளைவிக்கப்பட்ட அநீதிக்கு எவரும் வருந்தியதாகத் தெரியவில்லையே...!

**காந்தா:** மகாராஜா.... நீங்கள் என்ன கூறுகிறீர்கள்...?

**குந்தி:** நீதி அநீதிகளைப் பற்றிய கணக்குகளில் நான் ஈடுபட்டிருந்திருந்தால், நான் என்னுடைய மைந்தர்களின் முகாமிலன்றோ இருந்திருக்க வேண்டும்? அவர்களுக்கு உங்கள் பிள்ளைகள் தானே? நமது மருமகள் திரெளபதி துகிலுரியப் பட்டபோதும் நான் ஏதாவது கேட்டேனா? இல்லையே...? நான் இப்போது இங்கு வந்திருப்பது பாரத வம்சத்தின் மாண்புமிகு மாமனிதர் குற்றுயிராகக் கிடக்கின்றார் என்பதை அறிந்து அதற்கான துயரத்தில் பங்கு கொள்ளவே தான்!

**திருத:** ஆமாம்..! அந்த மாமனிதரை காயப்படுத்தியவன் யார்? உன் புதல்வன் அர்ச்சுனன் தான்...! இரண்டடி மண்ணுக்காக அப்பேற் பட்ட மாமேதையைக் கொல்வது எத்தகைய நியாயத்துக்குட்பட்டது? உண்மையில் உன் மகன் அர்ச்சுனன் இத்தகைய பாதகச் செயலைப்புரிய நிச்சயமாகத் துணிந்திருக்க மாட்டான். உன் மருமகன் கிருஷ்ணண் தான் அர்ச்சுனனை இக்கொடுமைக்கு ஆளாக்கியவன். அதனால் இன்று பிதாமகரைக் கொன்ற குற்றம் உன் மகன் மீது விழுந்திருக்கிறது.

**காந்தா:** மகாராஜா! பிதாமகரைக் கொலை செய்ய வித்திட்டவர் யார் என்பதை எதிர்காலம்தான் தீர்மானிக்கும். மகாராஜா... நான் பல்லாயிரம் தடவை தங்களிடம் கூறியுள்ளேன், சிம்மாசனத்துக்கும் தங்களுக்குமுள்ள உறவினைக் கட்டுப்படுத்திக் கொள்ளும்படி.... ஆனால் தாங்கள் அதற்குச் செவி சாய்க்காதிருந்து விட்டீர்கள். இன்று அதன் பயனாக நமது புதல்வர்கள் அனைவரும் மாண்டு போகிறார்கள். அஸ்தினாபுரமும் சின்னாபின்னப் பட்டுப் போகிறது. மகாராஜா...!இன்னும் காலம்கடந்துவிடவில்லை. பிதாமகரை மத்தியஸ்தராக வைத்து அமைதியை நிலை நாட்ட முயற்சி எடுங்கள்....

**திருத:** காந்தாரி! சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் முறிந்து, போர்தான் ஒரே வழி என்று முடிவுக்கு வந்த பின்னர் அதில் மாற்றங்களை ஏற்படுத்த முயல்வதில் எதுவித பலனும் இல்லை. வெற்றி அல்லது தோல்வி என்பதுதான் முடிவாக இருக்கும்.

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்–துரோணரின் பாசறை– துரியோதனன், துச்சாதனன், மற்றும் கர்ணன் அங்கு வருகின்றனர்.

**துரி:** வணக்கம் குருதேவரே....!

**துரோ:** நான் தனித்துவிடடேன் துரியோதனா... தனித்துவிட்டேன், அர்ச்சுனனின் முன்னேற்றத்தை தடுக்க கங்கையின் மைந்தரால் முடியாதென்றால், வேறு யாரால் தான் அதனைச் சாதிக்க முடியும் துரியோதனா.....?

**துரி:** தங்களால் முடியும் குருதேவா..! அதனைக் கூறத்தான் இங்கு வந்தேன். கவுரவப் படைகளுக்குத் தாங்கள்தான் இப்பொழுது தளபதி..!

**கர்ண:** ஆச்சாரியார் அவர்களே! இந்த ராதேயனைத் தங்கள் படையில் சேர்த்துக்கொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன்....!

**துரோ:** போரிட நாட்டமிருக்குமானால் தாராளமாகச் சேர்ந்து கொள்ளலாம்.

**துச்ச:** தாங்களும் பிதாமகரைப் போல், பாண்டவர்களைக் கொல்ல மாட்டேன் என்று கூறிவிட மாட்டீர்களே...?

**துரோ:** அவ்வாறு நான் கூற மாட்டேன். ஆனால் அவர்களைக் கொல்லக்கூடிய ஆற்றல் என்னிடம் இருக்கிறது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது. சிலவேளைகளில் நான்தான் அவர்களுடைய கையால் இறக்க நேரிடும்! போர்க்களத்தில் எதுவும் நடக்கலாம் துச்சாதனா.....(கர்ணனிடம் சென்று) கவுரவ சேனை அங்கதேச மன்னனாகிய உங்களையும் வரவேற்கிறது.

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்– அம்புப்படுக்கையில் பீஷ்மர் காணப்படுகிறார். கர்ணன் அருகில் வந்து வணக்கம் செலுத்துகிறான்.

**கர்ண:** பாரத வம்சத்தின் மாண்புமிகு பெரியோய்! பலதடவைகளில் தங்களை மனம் நோக வைத்த இந்த ராதேயனை மன்னித்தருளக் கோருகிறேன்!

**பீஷ்ம:** வெற்றிகள் பல பெறுவாயாக குந்தியின் மைந்தனே...!

கர்ணன் ஆச்சரியத்துடன் பிதாமகரைப் பார்க்கிறான்.

**பீஷ்ம:** மகனே! நீ யார் என்பது உனக்குத் தெரிந்திருக்கிறது; குந்தியின் மைந்தனே! அதே போல் உன்னையும் நான் நன்கு அறிவேன்....!

**கர்ண:** நான் யார் என்பதைத் தெரிந்திருந்தும் தங்களின் தலைமையில் போராடுவதற்கு தாங்கள் ஏன் எனக்கு வாய்ப்புத்தர மறுத்தீர்கள் ஐயா.....?

**பீஷ்ம:** அதற்கு இரு காரணங்கள் இருக்கின்றன மகனே! ஒன்று உனக்குத் தொடர்ந்து ஏற்பட்ட அவமானங்களால் உன்மீதே உனக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. அத்தகைய மனப்பான்மையுடன் நீ போர்க்களம் போவது நல்லதல்ல. அடுத்து, இந்தப் போர் பல அரிய வீரர்களைப் பலியேடுக்கப்போகிறது. உன்னைப் போன்ற ஒரு வீரன் பலியாவதை நான் விரும்பவில்லை. அர்ச்சுனனுடன் நீ போரிட்டால் உங்களில் ஒருவன்தான் வெற்றிபெற முடியும். உங்கள் இருவரையும் அஸ்தினாபுரம் இழக்கக்கூடாது. மகனே..! இந்தப் போரை உன்னால் நிறுத்திவிட முடியுமானால் அதற்காக முயற்சித்துப்பார். போராட வேண்டும் என்றால், பாண்டவர் அணியில் சேர்ந்து போராடு மகனே..!

**கர்ண:** பிதாமகர் அவர்களே! துரியோதனனுக்கு நான் கடனாளி என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். தாங்கள் துரியோதனன் அணியில் சேர்ந்து எவ்வாறு போரிடுவதற்குத் துணிந்தீர்களோ நானும் அவன் அணியில் இணைந்து போராடக் கடமைப் பட்டவன் அல்லவா? ஆகவே துரியோதனனுடன் இணைந்து நிற்க எனக்கு அனுமதி தாருங்கள்.

**பீஷ்ம:** மகனே இந்த தர்மசேத்திரமான குருச்சேத்திரத்தில் உள்ள ஒவ்வொரு வீரனும் தங்களுக்கான கடமையை சுயமாகவே நிறைவேற்றக் கடமைப் பட்டவன். ஆகவே, உன்னையும் என்னால் எதற்கும் வற்புறுத்த முடியாது.

பீஷ்மரின் பாதங்களைத் தொட்டு வணக்கம் செலுத்தி விட்டு கர்ணன் புறப்படும்போது....

**பீஷ்ம:** ஆண்டவன் உனக்கு அருள் பாலிப்பான்.... வெற்றி பெறுவாயாக....

கர்ணன் போவதைப் பார்த்தவண்ணம்....

**பீஷ்ம:** மகளே குந்தி!.... இத்தகைய ஒரு மாபெரும் வீரனுக்குத்தாயான நீ உண்மையில் பெரும் பாக்கியசாலிதான் மகளே....! உன்னைப் பாராட்டுகிறேன்...

**பின்னணிப் பாடல்:**

**அர்ச்சுனன் விரித்த அம்புப் படுக்கையில்
அமைதியுடனவன் அயர்ந்திருந்தாலும்
இறுதி அஞ்சலி செலுத்திட ஏகிய
கர்ணனை வாழ்த்தியே கடமையுணர்த்தினன்!**

**(தொடர்ந்து வரும்)**

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்



வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முடிந்தும் அதை நாடி

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா தோன்றியதும் புகழோடு! மறைந்ததும் புகழோடு. மறைந்த பின்னும் உலக மக்களது மனங்களில் புகழோடு வாழும் தலைவி அவர். கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இந்திரா காந்தியின் பெயர் பொறிக்கப் பட்டிருக்கிறது.





Kala JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

433686

## கின்னஸ் காந்தி

15 வருட காலமாக ஆட்சி நடத்திய ஒரே பிரதமர் இந்திராதான். இது உலக சாதனை. 1966 முதல் 1977 வரை பிரதமராக இருந்தார். இடையில் ஒரு வீழ்ச்சி. சளையாது போராடி 1980 முதல் மீண்டும் பிரதமராகி 1984ல் கொல்லப்படும் வரை ஆட்சியில் இருந்தார்.

இலங்கைத் தமிழர்களுக்காக உதவிக்கரம் நீட்டிய இந்திரா மறைந்தபோது வடக்கு-கிழக்கு-மலையகமெங்கும் கறுப்புக் கொடிகளோடு மக்களின் விழிகளில் வற்றாத குளமாய் கண்ணீர் நிரம்பியது.

## வீதியில் விதி



யுத்தம் கொடியது. யுத்தத்தை நடத்துவோர் நிதானம் தவறும் போது மனித இரத்தம் ஆறாகப் பெருகி விரயமாகிறது.

மோட்டார் ஷெல் தாக்குதல் நம் நாட்டு யுத்தத்திலும் இடம் பிடித்துள்ளது.

படத்தில் இருப்பது போஸ்னியாவில், சரஜிவோ சந்தையில் நடைபெற்ற மோட்டார் ஷெல் தாக்குதலில் வீழ்ந்த அப்பாவிகள். ஷெல்லுக்கு கண்ணில்லை. சனநெரிசல் உள்ள பகுதிகளில் ஷெல் ஏவப்பட்டால் எதிரிகளைவிட ஏதுமறியாதவர்களே இரத்தம் சிந்துவார்கள். இந்தப் படம் அதற்கு சாட்சி.



## டேக் இட் ஈஸி

விளையாட்டில் போட்டி இருக்கலாம் பொறாமை கூடாது என்று சொல்வதை பலர் கேட்பதில்லை.

படத்தில் இருப்பவர்கள் பனிச் சறுக்கு வீராங்கனைகள், ரோனியா-நான்சி. போட்டிக்கு முன்பாக புன்னகையோடு புகைப்படத்திற்கு போஸ் கொடுத்தார்கள்.

பின்னர் நடந்ததுதான் பொறாமைத்தனம். ரோனியா செய்த சதியால் நான்சி காயமுற்றார். புன்னகைத்துவிட்டு புற முதுகில் குத்தலாமா? நான்சி இப்போது குமுறுகிறார்.

டேக் இட் ஈஸி நான்சி!



## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீகம் மூலமாக வாழ்வில் மலர்ந்தோர் எத்தனை எத்தனையோ. வெளிநாட்டிலும் சரி மாந்திரீக வேலைகளில் உத்தரவாதத்துடன் வரையறுக்கப்பட்ட கம்பனியாக 27 வருடமாக இலங்கையில் இயங்கிவரும் ஸ்தாபனம் இது ஒன்று மட்டுமே. வாழ்வில் பிரச்சனை உள்ள நேரங்களில் ஞாபகம் இருக்க வேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம் மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K சாமி J.D.G.A.N.

P.Kசாமி அசோசியேட் பிரைவேட் லிமிட். கொழும்பு-நுவரெலியா

ஒவ்வொரு மாதமும் 20 முதல் வரை 162, கொட்டாஞ்சேனை வீதி, கொட்டாஞ்சேனை. இல்லத்தில் சந்திக்கலாம்.

தொலைபேசி எண்களின் வரிசைகள்:

கொழும்பு– 01-342463, 342464, 344831, 344832. நுவரெலியா– 052-2308, 3093, 3336.

வெளிநாட்டு தொலைபேசி ஆலோசனைப் பிரிவு.

கொழும்பு-கசேஞ்சில் 28.
நுவரெலியா– " 21.

வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை முதல் இரவு 10 மணி வரை மட்டுமே தொலைபேசி

## 3 D திருடி!



முப்பரிமாணம் பளிச்சிட இப் படத்தை எடுத்தவர் ஜோய் லிசென்ஸ்ரெயின்.

முப்பரிமாண படப்பிடிப்பு வித்தை காட்ட அவர் தெரிந்தெடுத்தது மொடல் அழகி ருவிக்கியைத்தான்.

இப்படம் உலகில் சிறந்த புகைப்படப் பிடிப்பாளர்களில் ஒருவராக ஜோய் பெயர் பெற வைத்துவிட்டது.





## தருவது வியோகிட

மோட்டார் சைக்கிள் மூலம் சாகசம் செய்து அசத்துபவர் ஜோன் யானிஷ் லொஸ்ஸெல். அமெரிக்காவைச் சேர்ந்தவர். பாதாளக் கிணறில் பயங்கர மோட்டார் சைக்கிள் ஓட்டம் நம் நாட்டிலும் உண்டுதானே. ஆனால் இவர் வெளியேயும் வித்தை காட்டினார். அதிலே ஒரு சோகம், குத்துக்கரணம் அடிக்கும்போது பிசகாகி விழுந்துவிட்டார். உயிர்தப்பியதுதான் புண்ணியம். தனக்கிடா ஆசை தன் பிடரிக்குச் சேதம்.